RAHIMA

(Tamil)

BY

T. RAJAGOPALACHARIAR

MADRAS :

C. COOMARASAWMY NAIDU & SONS

1915

ht-reserved]

[*Price As. 5*

PRESENTED BY
... PR. PL. N. ...NATHAN
CHETTIAR TO
...VALLUVAR LIBRARY ...

8.4.84(13)

ரஹிமா

(ஓர் மகம்மதியப் பெண்ணின் கதை)

டி. இராஜகோபாலா சாரியார்
எழுதியது

சென்னை:
ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

ரெஜிஸ்தர் செய்தது] 1915 [விலை அணா 5

PRINTED AT
THE 'CAXTON PRESS',
MADRAS, E.

3990

முகவுரை

இச் சிறு புத்தகம் ஆங்கிலத்தில் ஜி. ஆர்னால்ட் பெர்னாண்டெஸ் (G. Arnold Fernandez) என்பவரால் எழுதப்பட்டுள்ள நம் தேசத்துக் கதையின் மொழி பெயர்ப்பு. ஆங்கில முதனூலை வாசிக்கையில் அதனிலடங்கிய சில விசேஷங்கள் நம் சகோதர சகோதரிகள் அனேகருக்கு உபயோகமாகுமென்று தோன்றின. ஆதலால் அதைத் தமிழில் மொழி பெயர்க்கத் துணிந்தனன். புத்தக ரூபமாக நான் எழுதியது இதுவே முதல் தடவை யாதலால், இதனில் காணக்கூடிய குற்றங் குறைகளைப் பெரியோர் மன்னிப்பார்களாக.

இப்படி,

டி. ரா.

ரஹிமா

3990

முதல் அத்தியாயம்

"யா அரோருவ ரோருவர் தம் முள்ளத்தைத்
தேருந் துணைமை யுடையவர்."

பிரம்மதேவன் அழகையே திரட்டி ஒருருவமாகச் சிருஷ்ட்டித்து இப் பூவுலகிற் கனுப்பியதைப் போன்ற அங்கங்களோடுங் கூடிய ஒரு பெண்மணியானவள் இருண்ட மேகத்தையும் வெட்கச் செய்யும் கருமைவாய்ந்து நீண்டு செழித்த அளகபாரத்தையும் பளிங்கு போன்ற பிரகாசமுடைய நெற்றியையும், செவ்வரிபடர்ந்து நீண்ட சேற்கெண்டைகள் போன்ற கண்களு முடையவளாய் மிக்க ரூபலாவண்ணியத்துடன் விளங்குகிறாள். இப்பேற்பட்ட பொற்கொடியின் அந்தஸ்தைச் சற்று கவனிப்போம். இவளுடுப்பதோ பட்டாடைகள். அணிவதோ இரத்தினாபரணங்கள். வசிப்பதோ அரண்மனை. இப்படிப்பட்ட அந்தஸ்தில் தன்னிச்சையாய் யாதோர் சிந்தையு மில்லாமலிருக்குங் காலத்தில், திடீரென்று இவளுடைய முகத்தில் மாறுபாடுண்டாய், துக்கசாகரத்தி லாழ்ந்து முகதேஜஸ்ஸும் மாறி இப்படிப் பல விதமான துன்பத்தையடைவதும் சகஜம். இவளுக்குத் தூக்கம் வருவதில்லை.

அறுசுவை பண்டங்களாயினு முண்பதில் பிரியமில்லை. மிக்க வருத்த முறுகிறாள். சிந்தைமாறி விடுகிறது.

நாம் தனியாக விராமல் பர்த்தாவுடனிருந்து சகல சாம்பிராஜ்யங்களையு மடைவதற்குப் பிரயத்தனப் படுவதும் ஞாயமல்லவோ என்று நினைக்கிறாள். பைத்தியம் பிடித்தவள் போலாகிறாள். பலவித துன்பப்படுகிறாள். என்செய்வாள்.

மேற் கூறிய அழகுவாய்ந்த பெண்மணி ஐதராபாத்தில் வசிக்கும் தனவந்தரான ஆஸ்மன்ஷா என்னும் சீமானுடைய ஏக புத்திரியான ரஹிமன்னிஸ்ஸா. இந்த சீமானுக்கு உலகம் முழுவதும் ஐக்கியப் பட்டது போலவ்வளவு சாய்காலிருந்தது. ரஹிமன்னிஸ்ஸா இவருக்கு ஏகபுத்திரியாகவே இவளை எவ்வளவு நேசித்திருப்பார் என்பதைச் சுலபமாய்க் கண்டு கொள்ளலாம். உலகத்தில் தாயாருக்குப் பெண் மீதும் தகப்பனாருக்குப் புத்திரன் மீதும் அதிக ஆசை என்பது வாஸ்தவந்தான். ஆயினும் புத்திரனில்லா விடில் தகப்பனுக்குங் கூட தன் குமாரத்தியின் மீது பதின் மடங்கதிகமான ஆசை யுண்டாகிறது. ஆகையால் ஆஸ்மன்ஷா தன் பெண் மணியே தனக்குலக மென்று வேறு யாதொன்றையும் ஒரு பொருட்டா யெண்ணாம லிருந்தார்.

இப்பொழுது ரஹிமன்னிஸ்ஸாவுக்கு வயது பதினைந்து. இவளிதுவரையில் தன் தகப்பனாரைத் தவிர வேறு புருடரைக் கண்டதில்லை. தன் தாதிகளுடன் அரண்மனையில் ஓரந்தப்புரத்திலிருந்து வழக்கப்பட்டவள். இவளுடைய அழகோ வர்ணிக்கத்தரமல்ல. இவளைப் பார்ப்பவர்களுக்கு தாம் காணுவது கனவோ, நினைவோ என்று ஐயமுறும்படி இவள் தெய்வலோகத்

துப் பாவையோ பூமியில் வந்து புதுமை விளக்கின்றனள் எனத் தோற்றும்.

இவள் தகப்பனார் ஆஸ்மன்ஷா நிஜாமிடத்தில் ஒரு பெரிய உத்தியோகஸ்தர். அவர் இவளுக்கு ஒரு ஆங்கிலேய துரைசானியின் மூலமாக இங்கிலீஷ் பாஷை கற்றுக் கொடுத்தார். அது முதல் இவள் மகம்மதீய வழக்கப்படி பெரியவர்களைக் காணும்பொழுது மரியாதையாக "ஆதாப்" என்று சொல்லாமல் இங்கிலீஷில் "காலை வந்தனம்," "மாலை வந்தனம்" என்று தன் தகப்பனாரைக் காணும் பொழுதெல்லாம் சொல்லி அவருக்கு அளவில்லாத ஆனந்த மூட்டுவாள். இது உலக வழக்கமே தவிரவேறல்ல. சங்கீத மென்றால் அதைக் கேட்டு ஆனந்திக்காதவரு முண்டோ?

"பாலுண் குழந்தை யொடுநற் பசுவும் பணியுமின்னும்
ஞாலத்தமர் பண்டித யோகிகளுடன் ஞானிகளும்
கோலத்தமரரும், நான் முகன், முக்கண்ணன், கோவலனும்,
சாலச்சு கமுறவோங்கிய நற்கலை சங்கீதமே"

ஆனால் இதற்கு மேலான சந்தோஷத்தை யுண்டாக்கக் கூடியது மொன்றுண்டு. அதாவது குழந்தைகளின் மழலைச் சொல். ஆகையால் ஆஸ்மன்ஷா தன் ஏகபுத்திரியாகிய ரஹிமன்னிஸ்ஸாவின் சொற்களைக் கேட்டானந்தித்து அவள் யாது சொல்லினும், கேட்பினும் அதன்படி நடந்துவந்தார் என்பது அதிசயமல்ல. அவள் கேட்பதற்கு முன்னால் எதையும் தயாராய்க் கொடுப்பார்.

இப்படியிருக்க ஐதராபாத்தில் லங்கர் பண்டிகை வந்தது. இப்பண்டிகையின் விவரமாவது 1594ம் வருஷத்தில் சுல்தான் குலிகுடப் என்பவருடைய குமாரரான சுல்தான் அப்துல்லா தன் யானை சேனை பரிவாரங்

களுடன் ஐதராபாத்தை விட்டு கோல்கொண்டாவுக்குப் போகும் பொழுது முதல் வாசற்படியைக் கடந்தவுடனே அவருடைய யானை மதம்பிடித்து ஜனக் கூட்டத்தின் பேரில் பாயவாரம்பித்தது. ஜனங்கள் தங்களுயிருக்கஞ்சி ஒடிவிட யானை தன் முதுகின் பேரில் அப்துல்லாவுடன் ஓர் காட்டில் பாய்ந்து கண்ணுக்கு மறைந்தோடி விட்டது. இந்த சமாசாரம் அவர் தாயாருக்குத் தெரிய அவள் மிக்க பயந்து, புத்திர சோகத்தாலே, தன் குமாரன் அப்துல்லா யாதோர் அபாயமுமின்றித் திரும்பி வருவானேயாகில் யானையைக் கட்டும் சங்கிலிபோலொன்று செம்பொன்னால் செய்வித்து அல்லாவின் ஸன்னதியாகிய ஷீயாமகூதியில் சமர்ப்பித்து வைக்கிறதாக ஓர் பிரார்த்தனை செய்துக் கொண்டாள். பிறகு தன் மனோபீஷ்டம் நிறைவேறிவிட பிரார்த்தனையையும் செலுத்தி அதை ஏழை ஜனங்களுக்குப் பங்கிட்டு தருமஞ் செய்து விட்டாள். இந்தக் காரணத்தால் ஐதராபாத்து ஜனங்கள் இதையோர் பண்டிகையாகக் கொண்டாடுகிறார்கள். இந்த தினம் ஊரிலுள்ள ஜனங்களுக்கு விடுமுறை தினமாகையால் சிரிப்பதும், கொக்கரிப்பதும், ஆடுவதும் பாடுவதுமாகக் கழிக்கிறார்கள். ராஜ வீதியில் சிலர் ஊர்கோலம் வருகிறார்கள். இவர்களுக்குப் பின்னால் அநேக தமாஷாக்கள் நடக்கிறது. வீட்டு மெத்தைகளும் மாடிகளும் வேடிக்கை பார்ப்பவர்களால் நிரைந்திருக்கின்றன. சன்னல் திரைக்குள்ளிருந்து அப்போது வீதியில் நடக்கும் வேடிக்கைகளைப் பார்த்துக்கொண்டிருந்த நம் கதாநாயகியாகிய ரஹிமன்னிஸ்ஸாவும் திடீரென்று திரும்பினாள். கட்டிலின்மீது வந்து படுத்தாள். தனிமையாக விருக்கக் கோறினாள். ஏனெனிலோ தெருக் கூட்டத்தில் தன் மனதிற் கிசைந்த மணவாளன், குணத்திற்

கிசைந்த குணசீலன் ஒருவனைக் கண்டுவிட்டாள். அவனுடைய உருவமிவள் மனதில் சித்திரம் போல் பதிந்தது. கெம்பீரமான யானையின்பேரில், கூட்டத்தின் நடுவில் போகும்படியான ஆப்ஸல்கான் மீர் ஆலிகானுடைய குமாரன். அவனுடைய அழகைப் பார்த்தாள். அவனே தனக்குத் தகுந்தவன். அவன் ஜனங்கள் வேடிக்கை பார்ப்பதைப் பார்க்கும்பொருட்டுச் சற்று நிமிர்ந்தான். இவளை யவன் பார்த்தானோ யில்லையோ என்பது சந்தேகந்தான்.

இவைகளைப் பற்றி இவள் தன் தகப்பனாருக்குத் தெரியப் படுத்தவில்லை. ஏனெனில் எப்படி தெறியப் படுத்துவாள். பெண்களுக்குறிய நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் நல்லொழுக்கங்கள் வாய்ந்த உயர்குல ஸ்திரீ யல்லவோ? சற்று உலாவினாள். மறுபடி படுத்தாள். கண்வளர்ந்தாள். மாலை 6 மணியாயிற்று. இன்னும் எழுந்திருக்க வில்லை. சிற்றுண்டி வேளையும் தவறி விட்டது. தாதிகள் வந்து எழுப்பிப் பார்த்தார்கள். அயர்ந்து நித்திரை புறிகிறாள்.

இரண்டாம் அத்தியாயம்

ரஹிமன்னிஸ்ஸாவின் தாதிகள் இருவரையும் அவள் "மாமாஜி" என்று ஒரு பொதுப் பெயரால் அழைப்பது வழக்கம். அவர்கள் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு பெயரிருப்பினும், இந்தியாவிலுள்ள ஆங்கிலேயர் தங்கள் வேலைக்காரிகளைப் பெயரிட்டழைக்காமல், "ஆயாள்" என்று கூப்பிடுவதுபோல இவர்களும், "மாமாஜி"

என்றே அழைக்கப்பட்டார்கள். இவர்களிருவரும் கொஞ்சம் வயதானவர்கள். இவர்கள் இந்த இடத்தில் வேலைக்கு வந்தது முதல் சாயங்கால வேளையில் ரஹிமன்னிஸ்ஸா ஒரு நாளும் தூங்கினதில்லை. ஆகையால் அவர்கள் ஏதோ சந்தேகத்தினால் சற்று நேரத்திற் கொருமுறை அவளருகில் போய்ப் பார்த்துக்கொண்டேயிருந்தார்கள்.

அவள் தூக்க மயக்கத்திலிருந்து எழுவதற்குள் இக்கிழவிகள் இருவருடைய குணாதிசயங்களை யறிவோம். இவர்கள் துஷ்டப் பிசாசங்கள். பேய், பிசாசம், சைதான், சூனியம் முதலானவைகளில் விசேஷ நம்பிக்கை இவர்களுக் குண்டு. தேவதைகளெல்லாம் தங்களுக்கு வசியம் என்றும் அவைகளின் உதவியால் மனிதரால் செய்யக் கூடாத காரியங்களை யெல்லாம் தாங்கள் செய்யக் கூடும் என்றும் இவர்கள் சொல்லிக் கொள்ளுகிற வழக்கம். இவர்களை துஷ்டப் பிசாசங்கள் என்று சொன்னதற்குக் காரணம் பின் வருவனவற்றால் தெரியும்.

தாதிகளிருவரும் சற்று நேரத்திற் கொருதரம் அவளருகில் போய்ப் பார்த்துக்கொண் டிருந்தார்கள் என்று சொன்னோ மல்லவா. இப்படி இவர்கள் போய்ப் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுது ரஹிமன்னிஸ்ஸா திடீரென்று மயக்கத்தினின்றும் விழித்துக்கொண்டாள். உடனே ஒரு மாமாஜியை பார்த்து, "மாமாஜி; என்னைப் பார்க்க இவ்விடத்தில் யாராவது வந்திருந்தார்களா?" என்று கேட்டாள்.

மாமாஜி — "ஒருவரும் வரவில்லையே, நாங்களிருவருமிவ்விடத்திலே தானே இரண்டுமணி நேரமாயிருக்கிறோம். ஒருவரையும் காணவில்லையே. என்ன, கனவு கண்டீர்களோ?"

ரஹிமன் — "ஒருவரும் வரவில்லையா? நிசந்தானா?"

மாமாஜி — "இல்லையே, ஏதாவது கனவு கண்டிருந்தால் சொல்லுங்கள். ஒருவேளை நாங்கள் அக்கனவின் அர்த்தம் இன்னதென்று அறியக் கூடும், எங்களுக்கு சில தேவதைகள் வசியமாயிருக்கின்றன. அவைகளைக் கொண்டு தங்களுடைய கனவின்படி தங்களுக்கு நேரிட வேண்டியது இன்பமோ துன்பமோ என்பதைத் தெரிந்து சொல்லுவோம்."

ரஹிமன் — "மாமாஜி ஏதோ தேவதைகள் என்று சொல்லுகிறாயே அவை என்ன? அவைகளின் உருவம் எப்படியிருக்கும். அவைகள் உங்களெதிரிலெப்படி வரும் என்பதைப் பற்றி தயவுசெய்து சொல்லுவாயோ?"

மாமாஜி — "அவைகளை வரவழைக்கக் கொஞ்சம் பணச்செலவு செய்யவேண்டும். அப்படிச் செய்து மந்திரத்தை ஜெபித்து வரவேண்டினால் பிரத்தியக்ஷமாகும். அவைகள் மனிதரைப்போல் கால்களால் நடப்பதில்லை. அவைகளின் கைகள் நமக்குத் தென்படாது. கண்களோ தீவட்டி வெளிச்சம்போன்றிருக்கும். வாய் திறந்திருக்கும். நாவு கரண்டியைப்போல் அவ்வளவு நீளமாயும் வெளியே நீட்டியுமிருக்கும். சாதாரண மனிதற்கு அவை தங்களுருவத்தைக் காண்பிப்பதில்லை. அப்படிக் காட்டினால் பயத்தினால் ஜுரம் முதலானவை வரும். சில வேளையில் பிராணனுக் கபாயமும் வருவதுண்டு. ஆனால் எங்களுக்கு வழக்கமாய் வேலைக்காரரைப்போல் சொல்லும் வேலையைத் தட்டாமல் செய்துக் கொண்டிருக்கும்."

ரஹிமன் — "அவைகள் எங்கே வசிக்கின்றன?"

மாமாஜி — "ஒஹோ அதை நாங்கள் சொல்ல முடியாது. எங்களுக்குத் தெரிந்தாலும் இப்போது சொல்ல மாட்டோம்."

ரஹிமன் — "மாமாஜி! அவை மனிதரைப்போல் வசிக்கின்றனவா?"

மாமாஜி — "அதெல்லாஞ் சொல்ல முடியாது· அவைகளைப் பற்றி சொல்லக் கூடியவரையில் சொல்லி விட்டோம். இனி தாங்கள் தங்களுடைய கினவைச் சொல்லுங்கள். கேட்ப்போம்" என்றாள்.

பிறகு ரஹிமன்னிஸ்ஸா தான் கினவில் கண்டன வற்றையெல்லாம் ஒன்றும் விடாமல் சொல்ல வாரம்பித் தாள். தாதிகளிருவரும் திரந்த வாய் மூடாமல் மிக்க ஆச்சர்யத்தோடு கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

நிஸ்ஸா — "நான் படுத்தவுடனே என்னை யாரோ அமுக்குவதுபோ லிருந்தது. நான் பயந்து அங்குமிங் கும் பார்க்கையில் இரண்டு உருவம் என் கண்ணுக்குத் தென்பட்டன. என் வலப்பக்கத்தி லிருந்தது வெள்ளை யுடை உடுத்திருந்தது. இடப்பக்கத்தி லிருந்ததோ சிவப்புடை தரித்திருந்தது. வெள்ளை உடை தரித்திருந்த உருவம் என் கையைப் பிடித்துக்கொண்டு சற்று நேரம் பேசிற்று. என்னைக் கூப்பிட்டு 'நிஸ்ஸா! நான் உன்னு டைய தங்கை,' என்று சொல்லிற்று."

"மாமாஜி! எனக்குத் தங்கையில்லை யென்று நன்றா யத் தெரிந்திருந்தும் அது அப்படிச் சொன்னதற்குக் காரணம் தெரியவில்லை. ஆனால் நான் உன் தங்கையாக பூமியில் பிறக்கவில்லை. இல்லாவிட்டாலும் உன் தாயார் எனக்கும் தாயாரே. நானும் உன்னைப்போல் இவ்வுலகில் பிறந்திருப்பேனே யானால் உன்னைப்போலவே மனோ

வேதனையை யனுபவிக்கவேண்டி யிருக்கும். ஆனால் அப்படிப் பிறக்காம லிருப்பதால் உலக அவஸ்தைகளி னின்றும் விடுபட் டிருக்கிறேன். நீ இப்பூமியிலிருக்கும் வரையில் நானும் உன்னுடைய கஷ்டத்தை யெல்லாம் பங்கிட்டுக் கொள்ளும்படி வந்திருக்கிறேன். என் உடம் பைப் பார். எவ்வளவு மிருதுவாயிருக்கிறது. நீயும் என் னைப்போல் சந்தோஷம் அனுபவிக்க வேண்டுமானால் உன் மனதிலிருப்பதை விட்டுவிடு. இல்லையேல் அது உனதுடம்பை கொஞ்சம் கொஞ்சமாய்த் தின்றுவிடும்'' என்று சொல்லிவிட்டுப் பேசாமல் நின்றது. சிவப்பு உடையோடிருந்த உருவம் எனது இடதுகையைப் பற் றிக்கொண்டு புன் முறுவலோடு பேச வாரம்பித்தது.''

''என்னைப் பார்! நானும் உன் தங்கையே. ஆனா லுன்னைப்போலல்ல. ஒருகாலத்தில் உன்னைப்போலவே நானும் அழகிய பெண்ணாய்ப் பிறந்திருந்தேன். இப்பொ ழுது உனக்குச் சில பழங்கள் கொண்டுவந் திருக்கிறேன். அவை ஹௌரிஸ் (Houris) தோட்டத்தின. இந்தப் பழங்களை யெல்லாம் சாப்பிடு. உயர்ந்த சந்தோஷங் களையும் ஆனந்தங்களையு மனுவிப்பாய்'' என்றது.

பிறகு மற்றொன்றைப் பார்த்து ''நீ ஏதாவது எனக் குக் கொடுக்கக் கொண்டுவந்திருக்கிறாயோ?'' என்றேன். அதற்கு அது, ''நான் என்னைத் தவிர வேறொன்றும் கொண்டுவரவில்லை. என் கையைப்பார். வெறுங் கையாய்த் தானிருக்கிறது. ஆனால் வெறுங்கையோடு வந்தேனென் றிகழாதே. அப்படி யிகழ்ந்தால் அதற் குண்டான கஷ்டங்களை யனுபவிப்பாய். ஆகையால் என்னை மறக்காதே. நீ என்னை எப்பொழுதாவது வேண் டுவாயானால் நான் வருவேன்,'' என்று சொல்லிவிட்டு மறைந்துவிட்டது. பிறகு சிவப்புருவத்தைப் பார்த்தேன்.

அது மெதுவாக என்னைக் கட்டித் தழுவ வாரம்பிக்கவே நான் மிகவும் பயந்தேன். உடனே அறை முழுவதும் ஒரே இருட்டாய்விட்டது. உருவத்தையோ நெட்டித் தள்ளிவிட்டேன். ஆனால் அது மறுபடியும் என்னிடத்தில் வரவாரம்பித்தது. உடனே அது, "நான் உனக்காக எவ்வளவோ சொல்லொணுக் கஷ்டப்பட்டு வெகு தூரத்திலிருந்து கொண்டுவந்த பழங்களை சாப்பிடமாட்டாயோ?" என்றது.

அதற்கு நான், "சாப்பிடமாட்டேன். என் தகப்பனார் எனக்கு அனுப்பும் பழங்களைத் தவிர வேறு பழங்களைச் சாப்பிடுவதில்லை. ஏனென்றால் அவர் என்னிடம் 'அவைகளில் ஒரு வேளை விஷம் கலந்திருக்குமென்றும் அபாயத்தை விளைக்கலாமென்றும் சொல்லியிருக்கிறார். ஆகையால் சாப்பிடமாட்டேன்' என்று சொல்லவே, அது, 'அப்படி நீ சொல்வது பிசகு. இவையோ விலையுயர்ந்தவை. இவைகளைச் சாப்பிடுவாயானால் நீ பேரானந்தங்களை யனுபவிப்பாய்' என்று சொல்லிற்று."

உடனே நான், "என்னை விட்டுப்போ, என்னை விட்டுவிடு. தொந்தரவு பண்ணாதே!! என்று உறக்கக் கூச்சலிட்டேன். அதுவும் மெதுவாக நழுகி விட்டது. இப்பொழுது விழித்துக் கொண்டேன். இது வரையில் நான் உங்களிருவரோடும் பேசிக்கொண்டிருந்ததாக நினைக்கிறேன்" என்றாள். அதற்கு மாமாஜி, "நாங்களிருவரும் பசுமை உடுப்போடிருக்கின்றோமே. மேலும் நீ சொல்லுகிற பழங்களைப் பற்றி எங்களுக்கொன்றும் தெரியாதே" என்றாள்.

நிஸ்ஸா—"ஆனால் நிஜமாகவே நான் கினவிலிவைகளை யெல்லாம் கண்டிருக்க வேண்டும். இவைகள் என்னவென்று சொல்லக் கூடுமோ?"

மாமாஜி — "நிஸ்ஸா ; இவைகளைப் பற்றிச் சொல்வதற்கு யாதோர் தடையுமில்லை. ஆனால் முன்பாக சில காரியங்கள் செய்ய வேண்டும். அவைகளைச் செய்வதற்கு இரவு தான் நல்ல தருணம். இன்றைய ராத்திரி அவைகளைப் பற்றி கண்டுபிடித்துச் சொல்லுகிறோம். அதைப்பற்றிக் கவலை வேண்டாம். நிச்சிந்தையா யிருங்கள்" என்று சொல்லிவிட்டு இருவரும் வெளியே சென்று ஒரு கோப்பையில் கொஞ்சம் "தேயிலைத் தண்ணீரும்," மற்றொன்றில் கொஞ்சம் "ஐஸ்கிரீமும்" கொண்டு வந்து கொடுத்தார்கள்.

மூன்றாவது அத்தியாயம்

"என்னன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

அன்றிரவு விடாமழை பெய்தது. ஊர் முழுதும் நீரில் மிதப்பதுபோல் தோன்றிற்று. காற்றோ வீசி வீசி யடித்தது. வீடுகளின் சன்னல் கதவுகளெல்லாம் தூள் தூளாக உடைந்து போயின. மட் கட்டடங்களெல்லாம் கரைந்து போயின. தெருக்களில் எரியும் பொது விளக்குகள் இப்பவோ பின்னையோ வென்று தங்கள் கால முடிவை எதிர்பார்ப்பது போல் மினுக்கு மினுக்கென்று எறிந்துக் கொண்டிருந்தன. இரவு 12-மணி யாயிற்று. இரண்டு ஸ்திரீகள் ஓர் துத்திநாகத் தகடடித்த கடையண்டை வந்து சுவரோடு சுவராக ஒட்டிக் கொண்டு நின்றார்கள். ஊதக் காற்று அடிப்பதனால் குளிர் நடுக்குகிறது. உடம்பெல்லாம் உதருகிறது. இவர்

களிப்படி நிர்ப்பதைப் பார்த்தால் திருடரோ வென்று சந்தேகிக்கவு மிடமுண்டாயிற்று.

இவர்கள் இவ்விடத்தில் இவ்வளவு நேரத்தில் நின்றுக் கொண்டிருக்க ரோந்து வரும் போலீஸ் ஜவான் களிருவ ரிங்கு வந்து சேர்ந்தார்கள். அவர்களி லொரு வன் சந்தேகத்தினு லுற்றுப் பார்த்து "இவர்கள் ஸ்திரீ களாகக் காணப்படுகிறார்கள். இந்நிசியி லிவ்விடம் வரக் காரண மென்ன?" என்று தனக்குள்ளாகச் சொல்லிக் கொள்ள மற்றொருவன் "ஆமாம். அருகில் போய்ப் பார்ப்போம், வா" வென்றான்.

முதல் ஜவான் — "இவர்கள் யாரா யிருக்கலாம்? ஏன் இங்கு வரவேண்டும். ஒரு வேளை நாடோடிகளோ?"

இரண்டாவது ஜவான் — "அருகில் போனால் தெரிகிறது. வாயேன். ஒரு தமாஷ் பார்ப்போம்."

முதல் ஜவான் — "நீங்கள் யார்? இந்த நிசியி லிங்கு வந்த காரண மென்ன?"

இரண்டாவது ஜவான் — "அவர்கள்மீது கோபிக் காதே, சாந்தமாய்க்கேள். நல்லவர்க ளாகத்தான் காணப்படுகிறார்கள்."

முதல் ஜவான் — "யாரானாலும் நமக்கென்ன. யார் நீங்கள் உள்ளதைச் சொல்லுங்கள். இல்லாவிடில் சந்தேக மேற்படுகிறது."

இரண்டாவது ஜவான் — "சந்தேகம் வேண்டாம். அவர்கள் நல்லவர்கள்தான். நாம் சொல்லுகிறபடி கேட்பார்கள்" என்று சொல்லிவிட்டு அவர்களைப் பார்த்து "என்ன, அப்படித்தானே" என்று கேட்க,

மாமாஜி — "ஐயா! நாங்கள் நல்லவர்கள். கெட்ட வேலைக்கு வந்தவர்களல்ல. மேலும் நாங்கள் கிழவிகள் ஆஸ்மன்ஷா சாயபி னரண்மனையில் வேலை செய்பவர்கள். தெய்வத்தன்மையில் பெயர் போனவர்கள். நாங்களிப்பொழுது முக்கியமான வோர் காரணத்தைப் பற்றி இரவென்றும், மழையென்றும் பாராமல் போய்க் கொண்டிருக்கிறோம். இந்த காரிய மின்றிரவே நடக்க வேண்டி யிருக்கிறது."

முதல் ஜவான் — "என்ன காரிய மிரவில்?"

இரண்டாவது ஜவான் — "இவர்களை என்னமோவென்று பார்த்தேன். முழுப் பூசினிக்காயை சோற்றில் மறைக்கிறார்களே. இவர்களை எனக்கு வெகு நாளாகத் தெரியும்" என்று சொல்ல,

மாமாஜி — "ஐயா, அப்படியல்ல. கோபிக்கவேண்டாம். உள்ளதை வேணுமானாலும் சொல்லி விடுகிறோம். ஆஸ்மன்ஷாவின் குமாரத்தி ரஹிமன்னிஸ்ஸாவின் தாதிகள் நாங்கள். அவளுக்காக பிராணனையும் கவனியாது செல்கிறோம். இந்தக் காரியம் முடிந்தால் வேண்டிய பரிசு கிடைக்கும், ஆகையினால்தா னிப்பொழுது போய்க் கொண்டிருக்கிறோம். வேறொன்று மில்லை" என்று சொன்னவுடனே,

முதல் ஜவான் — "வீண் கதை வேண்டாம். என்ன வேலையாகப் போகிறீர்கள். உள்ளதை உள்ளபடி சொல்லி விடுங்கள். இல்லாவிட்டால் டாணாவுக்கு வாருங்கள்" என்றான்.

மாமாஜி — "நேற்றிரவு எங்கள் எஜமானி ஓர் அற்புதமான கனவு கண்டாள். கனவாவது வீணில் வருவதில்லை. 'யானை வரும் பின்னே, மணியோசை வரும்

முன்னே' என்பதுபோல் பின்னால் வருவதை முன்னால் தெரிவிக்கும் பொருட்டு வருவது. ஆகையால் கனவுகளுக்குப் பலாபலன்களுண்டு. அப் பலாபலன்களை யறிய நம்மூரில் பிராஜ் ஆலி என்றோர் மந்திரவாதி யிருக்கிறாரல்லவா. அவரிடந்தான் போய்க்கொண் டிருக்கிறோம்'' என்றாள்.

முதல் ஜவான் — "ஆனால் அவனுக்கு ஏதாவது கொடுக்க வேண்டுமோ, அல்லது சும்மாவாகச் சொல்லுவானோ?''

மாமாஜீ — "எங்கள் எஜமானி அவர் எது கேட்டாலுங் கொடுக்கச் சித்தமா யிருக்கிறாள். இப்பொழுதுங் கையில் ரூபாய் 5 கொடுத்தனுப்பி யிருக்கிறாள்'' என்று சொன்னாள்.

இரண்டாவது ஜவான் — "ஆனால் சரி. ஒரு யுக்தி சொல்கிறேன். அதன்படி செய்யவேண்டும். இல்லாவிட்டால் டாணாவுக்குத்தான் போகவேண்டும். என்ன சொல்லுகிறீர்கள்'' என்று கேட்டான்.

மாமாஜீ — "என்ன, சொல்லுங்கள் பார்ப்போம். செய்யக்கூடுமானால் செய்யலாம்.''

இரண்டாவது ஜவான் —"அப்படியில்லை, செய்துதானாகவேண்டும். அப்படிச் செய்தால் இனி எவ்விடத்தும் வேலைசெய்யவேண்டியதே யில்லை. நம்மாயுள் முழுதும் சந்தோஷத்தோடே கழித்துவிடலாம். ஆகையால் எழுந்திருங்கள். ஆஸ்மன்ஷா வீட்டுக்குப் போகலாம். நாங்களிருவரும் தெருவிலிருக்கிறோம். நீங்க ளிருவரு முன்னே போய் அந்த பைத்தியக்காரி நிஸ்ஸாவிடத்தில் நம்பும்படியாக 'பிராஜ் ஆலி' வெளியே வந்திருப்பதாகவும், கனவின் பலனைக் கண்டுபிடிக்க அவளுடைய வாபர

ணங்கள் யாவும் வேண்டியிருக்கிறதாகச் சொல்லுவதாக வுஞ் சொல்லி அவைகளை எப்படியாவது கொண்டுவந்து விடவேண்டும். இந்த சமாசாரத்தை வேறு யாருக்கும் தெரிவிக்கக் கூடாது. அப்படித் தெரிவித்தால்........ பத்திரம். ஜாக்கிரதை" என்று பயமுறுத்தினன்.

மூத்த கிழவி — "ஆகா! என்ன யுக்தி! முன்னமே தெரியாமல் போய்விட்டது. அப்படித்தான் செய்ய வேண்டும். அவசியம் கொண்டுவந்து விடுகிறோம். நாமெல்லோரும் பங்கிட்டுக்கொண்டு வெளியூருக்குப் போய் சுகமாகக் காலத்தைக் கழிக்கலாம்" என்று சொன்னாள்.

எல்லோரும் ஆஸ்மன்ஷா வீட்டண்டை போனார்கள். கிழவிகளிருவரும் உள்ளே நுழைந்தார்கள். இந்த சமயத்தில் ரஹிமன்னிஸ்ஸாவி னுடம்பிலிருந்த நகைகளோ சுமார் ரூபாய் 5,000 பெறுமானவை.

தாதிகளிருவரும் எலி பிடிக்கப்போகிற பூனையைப் போல் அரண்மனைக்குள் நகர்ந்தார்கள். காவல் செய்ய வேண்டிய பேடிகளெல்லாம் தூங்கிவிடவே சந்தடி செய்யாமல் இவர்களிருவரும் உள்ளே போய்ப் பார்த்தார்கள். விளக்கு மினுக்கு மினுக்கென்று எறிந்துக்கொண்டிருந்தது. ரஹிமன்னிஸ்ஸாவைத் தட்டி யெழுப்பினார்கள். அவளும் உடனே எழுந்து, கண்களைத் துடைத்துக் கொண்டு, உட்கார்ந்து, "ஏ, புருஷோத்தமா! வந்தாயா. உனக்காக நான் எவ்வளவு கஷ்டப்பட்டேன். கருணைக் கடவுளானவர் உன்னை இவ்விடம் அனுப்பினரே. அவருக்கு வந்தனம் செய்வோம் அருகே வா" என்று ஆவலோடு கையை நீட்டினாள். எதிரிலிருந்த கிழவியானவள், அவளை யடக்கி, வந்திருப்பது மாமாஜியே தவிர வேறொருவரு மில்லையென்று சொன்னாள்.

உடனே, அவள், "ஓ! மாமாஜி நீதானா. என் எனதாருயிர் நாதனை அழைத்துக்கொண்டு வரவில்லை. அவரில்லாமல் என் மன மேங்குகின்றதே" என்றாள். பிறகு கிழவி, "கவலைப்படாதே. உன் காரியம் சீக்கிரத்தில் நிறைவேறும். பிராஜ் ஆலியே தெருவில் வந்திருக்கிறார். அவர் உன் கனவின் பொருளைக் கண்டுபிடிக்கும் பொருட்டு உன்னுடைய நகைகளை வேண்டுகிறார். ஆகையால் தாமஸம் செய்யாமல் சீக்கிரத்தில் கொடு. நேரம் சென்றால் அவர் ஒருவேளை கோபித்துக்கொண்டு போய் விட்டாலும் போய்விடுவார். ஆகையால் துரிதப்படு" என்றாள்.

கிஸ்ஸாவும் உடனே எல்லாவற்றையும் கழட்டி வைத்து விட்டு, கிழவியைப் பார்த்து, "சீக்கிரம் வாருங்கள் நல்ல சமாச்சாரம் கொண்டு வாருங்கள். நான் இன்னும் ஒருதடவையாவது என்னுடைய கண்முன்னே யிருக்கிற அழகனைப் பார்க்கட்டும். நேற்றையதினம் அவனைப் பார்த்தது முதல் இதே கவலையாயிருக்கிறேன். ஆனால், எப்படி பகலானது இரவைத் தொடருகிறதோ அப்படியே என்னுடைய மனக் கவலையை சந்தோஷமானது தொடரும். அப்பொழுது நான் களிப்படைவேன்" என்று சொல்லிக்கொண்டே, கொடுத்துவிட்டாள். கிழவிகள் அவைகளை வாங்கிக்கொண்டு வெகு சந்தோஷத்தோடு வெளியே ஜவான்களோடு வந்து சேர்ந்தார்கள்.

ஜவான்கள் இவர்களைப் பார்த்தவுடனே வெகு ஆவலோடு, "கொண்டு வந்தீர்களா? என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள் கொண்டுவந்திருப்பதாய் பதில் கூற, சந்தோஷத்தோடு, பக்கத் தெருவிற்குப் போய் பங்கு போட்டுக்கொண்ட எல்லோரும் பிரிந்துவிடலாமென்று

யோசனை செய்தார்கள். இரவு 3-மணியாயிற்று. ஜன சஞ்சாரம் கிடையாது. இந்தச் சமயத்திலிவர்கள் கொண்டுவந்த நகைகளைப் பங்குபோட ஆரம்பித்தார்கள். ஒரு ஜதை பொன் கை காப்புகளும், ஒரு ஜதை பொற்சிலம்புகளும், ஒரு மோதிரமும் இந்தக் கிழவிகளுக்கென்றும், விலையுயர்ந்த இரண்டு வைரக்கடகமும், ஒரு முத்துஹாரமும், ஒருதண்டை சதங்கையும் ஜவான்களுக் கென்றும் தீர்மானித்தார்கள்.

பிறகு அவர்களிலொருத்தி பிராஜ்ஆலி வீட்டிற்குப் போகத் தன்னிடத்தில் 5-ரூபாய் இருக்கிறதென்றும், அதை பிராஜ்ஆலிக்கு அவன் கேட்கும் பக்ஷத்தில் கொடுக்கலாமென்றும் சொன்னாள். இதைக் கேட்ட ஜவான், "பிராஜ் ஆலிக்கு 4-ரூபாய் போதும். மற்றொன்றைக் கொடு. ஒரு புட்டி பட்டைசாராயம் வாங்கிக்கொண்டு வருகிறேன். ஒவ்வொருவரும், மற்றவர்களுடைய சுகத்தைப்பற்றி குடிப்போம் என்று சொல்லி ஒரு ரூபாய் வாங்கிக்கொண்டுபோய் 2-புட்டி சாராயமும், ஒரு மட்குடுவையும் வாங்கிக்கொண்டு வந்தான். அதைக் குடித்தாயிற்று. இன்னும் குடிக்க இஷ்டப்பட்டார்கள். ஆகவே மற்றொரு ரூபாய்க்கு வாங்கிக் குடித்து ஆனந்தத்தினாலும், மயக்கத்தினாலும் தள்ளாடிக்கொண்டும், ஆடிக்கொண்டும், பாடிக்கொண்டு மிருந்தார்கள். கிழவிகளோ புதிதாகக் குடித்ததாலே செத்த பிணங்கள்போல் நீட்டிவிட்டார்கள். ஜவான்கள் பழய பெருச்சாளிகள் ஆகையால் குடிலக்ஷியமில்லாமல் சந்தோஷமாக விருந்தார்கள். இப்படி யிருக்கும் சமயத்தில் இவர்களுக்கு ஒரு யுக்தி தோன்றிற்று. அதாவது கீழே கிடந்த கிழவிகளிடமிருந்து அவர்கள் பங்குக்கு கொடுத்த ஆபரணங்களை எடுத்துக்கொண்டு போகலா

மென்று யோசனைசெய்து அப்படியே செய்துவிட்டார்கள். சூரிய உதயமாயிற்று. ஜனங்கள் தங்கள் தங்களுடைய வேலைகளுக்குப் போகப் புறப்பட்டார்கள். இக்கிழவிகள் இம்மாதிரி விழுந்து கிடக்கவே, இந்த சமாச்சாரம் போலீசுக்குத் தெரிந்து அவ்விடத்திலிருந்து சில ஜவான்கள் வந்து இவர்களைக் கொண்டுபோய் ஓர் அறையில் அடைத்தார்கள். வழியில் இவர்களுடைய தலையையும் வேஷத்தையும், இவர்கள் விழிப்பதையும், நடப்பதையும் பார்த்து ஜனங்கள் விடாநகைப்பை யடைந்தார்கள்.

பிறகு போலீஸில் இவர்களை விசாரிக்கத் தொடங்க, இவர்கள் தாங்கள் ஆஸ்மன்ஷா அரண்மனையில் அந்தப்புற தாதிகளென்றும் திருடிகளல்லவென்றும் சொல்ல, "அப்படியானால் நடுவீதியில் குடித்து விழுந்து கிடக்கும்படி எப்படி நேர்ந்தது" என்று கேட்டதற்கு, இவர்கள் பதில் கூறுவதற்குள் மற்றொருவன் இவர்களை சோதனைபோட்டு இவர்களிடத்தில் 3-ரூபாய் இருக்கக் கண்டான். உடனே, "இந்த ரூபாய்கள் ஏது?" என்று கேட்க, அவர்கள், "எங்களுடையது, நாங்கள் கஷ்டப்பட்டு சம்பாதித்தது," என்றார்கள்.

"அப்படியானால் இவ்விடமிருந்து தப்பித்துக் கொண்டு போக இஷ்டமிருக்கும் பக்ஷத்தில் ரூபாய் 3-யும் எங்களுக்குக் கொடுத்துவிட வேண்டும். இல்லாவிடில் கஷ்டப்படவேண்டும்" என்று அவர்களில் ஒருவன் சொன்னான். இவர்களும் தங்களுடைய ஸ்திதியைப் பார்த்து, போலீசாரிடமிருந்து தப்பித்துக்கொண்டால் போதுமென்று கொடுத்து விட்டு வந்துவிட்டார்கள். அரண்மனையில் சென்று அந்தப்புறம் போனவுடனே ரஹிமன்னிஸ்ஸாவைப் பார்த்து தாங்கள் இராத்திரி திரு

டர்கள் கையில் அகப்பட்டுக் கொண்டதாகவும், உயிரோடு தப்பித்துக்கொண்டு வருவதற்கு அவ்வளவு நேரம் சென்றதாகவும் சொன்னார்கள். நிஸ்ஸாவும் இவர்களை நம்பி, மிக்க பரிதாபப்பட்டு, இவர்களுக்குத் தேறுதல் சொல்லி யனுப்பினாள்.

நான்காம் அத்தியாயம்.

தாதிகள் சென்ற பிறகு நிஸ்ஸா தனியாக இருந்துக் கொண்டு தன்னுடைய பலஹீனத்தைப் பற்றி யோசித்தாள். உடம்பு வெகுவாகக் குன்றி யிருந்தது. தேக சௌக்கியமும் தவறியிருந்தது. கண்ணாடியின் முன் நின்று தன்னுடைய உடம்பு முழுவதையும் உற்று நோக்கினாள். அதிக மாறுதல் தென்பட்டது. முகமோ வெளுத்திருந்தது. கண் உள்ளே விழுந்திருந்தது. உடம்பில் உதிரமிருப்ப தாகவே தென்படவில்லை. முன்னிருந்த விளையாட்டுத்தனமும், சுறுசுறுப்பும் இருந்த விடம் தெரியாமல் ஓடிவிட்டன. அன்ன ஆகாரம் கிடையாது. நல்ல தூக்கம் கிடையாது. சிறந்த ஆபரணங்களை அணிவதில்லை. விலையுயர்ந்த உடைகளை யுடுப்பதில்லை. இப்படியாக யிருக்கிறாள் நிஸ்ஸா. இவளுடைய தலை யோசனைகளினால் பளுவா யிருப்பது போலிருந்தது. இப்படிப்பட்ட நிலைமையில் இவள் வயித்தியத்தில் பெயர் பெற்றவளாகிய "கர்க் பாட்ரிக்' துரைசானிக்குத் தெரியப் படுத்தினால் நல்லதென்று நினைத்தாள். மறுபடியும் வேறு யோசனை தோன்றிற்று. "அப்படிக்குச் செய்தால் எப்படியாவது தகப்பனாருக்குத் தெரிந்துவிடும். பிறகு அவரைத் திருப்தி செய்ய வேண்டும். என்ன சொல்லித் திருப்தி செய்வது? அப்ப

டிச் செய்வது அசாத்தியம். ஆகையால் வேறுவழி தேட வேண்டும்'' என்று எண்ணினவளாய் இன்னது செய்வ தென்று தெரியாமல் கடவுளைப் பிரார்த்தித்தாள். பிறகு பெட்டியைத் திறந்தாள். விலையுயர்ந்த ஆபரணங்களின் மத்தியிலிருந்த ஓர் நீல மணியை யெடுத்தாள். உடனே தன் தாயார் சாகும் தருணத்தில் சொன்ன வார்த்தை ஞாபகத்திற்கு வந்தது. அவள் விபத்து வருங் காலத் திலெல்லாம் இதை உபயோகிக்கும்படி சொல்லி யிருந் தாள். தனக்கு ஏதாவது அபாயம் நேரிடுமோ என் னமோ வென்று அதை அணிந்தாள். பிறகு ஹாரம் எங்கே யென்று தேடினாள். மாமாஜியிடத்தில் கொடு த்த ஞாபகம் வந்தது. ஆனாலும் மற்றொன் றிருந்தது. அது முத்தா ஹாரம். அதை யெடுத்து அணிந்தாள். கையில் கொலுசையு மணிந்தாள். இப்பொழுது மிக்க ஆச்சரியத்தை யடைந்தாள். இதுவரையிலும் தன்னு டைய மார்பில் வடு ஒன்று இருப்பதை இவள் பார்த்த தில்லை. தாதியைக் கூப்பிட்டாள். அவள் வந்ததும் நிஸ்ஸாவுக்கு வந்தனமளிக்க வாரம்பித்தாள். மன திலோ நடுக்கம். "குற்றமுள்ள நெஞ்சு குறு குறுக் கும்'' என்பதுபோல் தாங்கள் செய்த காரியம் தெரிந்து விட்டதோ என்னமோவென்று நடுங்கினாள். "கருத்த தெல்லாம் மேகம், வெளுத்த தெல்லாம் பால்'' என் னும்படியான ஒன்றும் தெரியாத நிஸ்ஸா, அவளிடத் தில் யாதோர் ஐயமுமின்றி தான் கண்டகாட்சியைப் பற்றிச் சொல்ல வாரம்பித்தாள்.

இதற்குள் கிழவியானவள் மிக்க நற்குண நற்செய் கைகளையுடையவள்போல நடித்து "இப்படி நீ கஷ் டப்படுவதைப் பார்ப்பதிலும் நான் பக்கத்திலிருக்கும் பாழுங்கிணற்றில் விழுந்து பிராணனை விடலாமென்று

எண்ணுகிறேன். இதுவரையிலும் கடவுளைப் பிரார்த்தித்துக்கொண்டுதா னிருந்தேன், உன்னுடைய கஷ்டங்களை நீக்குவதற்காக" என்றாள்.

அதற்கு நிஸ்ஸா, "கடவுளை வணங்கவேண்டியது நம்முடைய கடைமையல்லவா? எப்பொழுதும் கடவுளை நினைக்கவேண்டிய தவசியம். இதுவரையில் அப்படியே செய்துக்கொண்டிருந்தேனென்று உன்னிட மிருந்து கேட்க எனக்கு வெகு சந்தோஷ முண்டாகிறது" என்று சொல்லிப் பின்னர் கொஞ்சம் ஆறுதலை யடைந்தாள். பிறகு ஒரு மூலைக்குப்போய் அவ்விடத்திலிருந்த ஷர்பத்தில் கொஞ்சம் எடுத்துக் குடித்தாள். மெத்தையின் மீது சாய்ந்து படுத்தாள். தூக்கம் வரவில்லை. கண்ணைத் திறந்துக்கொண்டுதா னிருந்தாள். இந்தச் சமயத்தில் திடீரென்று பளிச்சென ஓர் வெளிச்சம் தோன்றிற்று. அது சூரியனிடத்தி லிருந்தன்று. சந்திரனிட மிருந்துமன்று. ஆனால் ஏதென்றாலோ, அந்த முத்தாஹாரமானது அவளுடைய மார்பின்மீது பட்டு ஒராய்ந்ததினாலேயே உண்டானது. இஃதல்லாமலும் அநேகவித வர்ணங்களோடு கூடிய வெளிச்சம் எதிர் சுவற்றில் தென்பட்டது. ஒரு அரைமணி சாவகாசம் நிஸ்ஸா தூங்கினாள். பிறகு விழித்துக்கொண்டாள். ஆடை முழுவதும் வியர்வையினால் நனைந்திருந்தது. உடனே நிலக்கண்ணாடியண்டைபோய் நின்றுக்கொண்டு ஆடையைத் தளர்த்திவிட்டு கைகுட்டையால் உடம்புமுழுவதையும் துடைக்கவாரம்பித்தாள். இது செய்துக்கொண்டிருக்கும் சமயத்தில், அவளுடைய மார்பில் புதிதாக வடு ஒன்று தென்பட்டது. சந்தேகமுண்டாயிற்று. வடுவைக் காண்பித்து திடீரென்று எப்படி வந்ததென்று சொன்னாள். இதற்குள், மற்றொருத்தியு முள்ளே நுழைந்தாள். இருவரும்

இதைப் பார்த்து யோசனை பண்ணிச் சொல்வதாகச் சொல்லி விட்டுப் போய்விட்டார்கள். மறுபடியும் நிஸ்ஸா தனியாக விடப்பட்டாள்.

நிஸ்ஸா நன்றாகப் படித்தவளென்று முன்னமே சொன்னோமல்லவா. இவளுக்கு ஆங்கிலேய பாஷையும் தெரியும். அனேக கதைகள் படித்திருக்கிறாள். அநேக புத்தகங்கள் படித்திருக்கிறாள். என்ன விசித்திரமான கதைகளிவள் படித்திருந்தாலும் அவை இவளுடைய கதைக்குச் சமானமாகாது. இவளுடைய கதையாவது ஆப்சல்கானைப் பார்த்தது முதல் ஆரம்பிக்கிறது. தான் காதல் கொண்டிருக்கிறாளென்று தனக்கே தெரியும். ஆனால் காதல் இன்பம் பயப்பதேயன்றி துன்பத்துக்குக் காரணமாகாதென்றும் அறிவாள்.

இந்தியாவில் பெண்களுக்கு 15-வயதானதும் அவர்களுடைய மனம் மாறுமலிருப்பது அறிது. ஏனென்றால் அவர்கள் எப்பொழுதும் ஆடவரோடு பேசுவதும், அவர்களுடைய தோழமை பாராட்டுவதுமா யிருக்கிறார்களென்பதைக் கவனிக்கலாம். மேலு மிதற்கு வேறு காரணமுமுண்டு. அந்தப்புரத்திலோ அப்படியில்லை. அவ்விடத்திலிருக்கும் பெண்கள் புருடருடைய முகத்தைப் பார்த்திருக்கவே மாட்டார்கள். அவர்கள் எப்பொழுதும் தாதிப் பெண்களோடேயே யிருப்பதும், பேடிகளினால் பணி செய்யப்படுவதுமாக யிருப்பார்கள். கலியாண மானவர்களானாலுங் கூடத் தங்களுடைய புருஷர் தவிர வேறு ஆடவரைக் கண்டிருக்கமாட்டார்கள். இது காரணம் பற்றிதான் அதற்கு அந்தப்புரமென்ற பெயர் வந்தது. மேலு மிவள் தான் காதல்கொண்டதை இரகஸியமாகவும் வைத்திருக்கவில்லை. தாதிகளிடத்தில் தெரிவிக்கவே, வழக்கப்படி, அது ஊர் முழுதும் பரவிற்று.

ஜனங்கள் வெவ்வேறு விதமாகச் சொல்ல வாரம்பித்தார்கள். சிலர், "ஒரு மனிதன் அந்தப்புரத்துக்கு எப்படியாவது போய் அவளிடத்தில் வார்த்தை யாடியிருக்கவேண்டும். இல்லாவிட்டால் அவள் காதலால் கஷ்டப்படமாட்டாள்" என்ருர்கள். மற்றும் சிலர், "அவ்விடத்திற்கு வந்திருக்கும் அவளுடைய அத்தை மகனை இரகஸியமாக மணந்திருக்க வேண்டும். ஆகையினுல்தான் இவ்வளவு கஷ்டம்" என்ருர்கள். "உலேவாயை மூடலாம், ஊர்வாயை மூட முடியுமோ?"

இரண்டு மணிநேரம் கழித்த பிறகு மாமாஜி திரும்பி வந்தாள். நிஸ்ஸா தனியாகப் படுத்துக்கொண்டிருந்தாள். வந்தவுடனே ரொம்ப அக்கரையுள்ளவள் போல் அவளுடைய தேக சௌக்கியத்தைப் பற்றி விசாரித்தாள். அதற்கு நிஸ்ஸா, "நான் இதுவரையிலும் படுத்துக் கொண்டு, மானிட ஜென்மத்தைப் பற்றி யோசனை பண்ணிக் கொண்டிருந்தேன்" என்று சொல்ல மாமாஜி, "நிஸ்ஸா! உன்னைப்போ லொத்தவர்கள் மனுஷ்ய ஜென்மத்தைப்பற்றிச் சிந்திக்கலாகாது. மனுஷ்ய ஜென்மத்தைப்பற்றி நமக்கெல்லாம் என்ன தெரியும். ஒன்றும் தெரியாமல் சிந்தித்தென்ன பயன். ஆகவே அதைப்பற்றி நினைக்காதே" என்று மரியாதையுடன் கூறிஞள்.

நிஸ்ஸா — "மாமாஜீ, இந்த வடுவைப் பார். இதை நான் உனக்கு முன்னமேயே காண்பித்தே னல்லவா. இதென்ன தெரியுமோ? என்னுடைய ஹிருதயத்திலிருப்பதை வெளிப் படையாகக் காட்டு மறிகுறி. காதலாகிய அக்கினியால் என் மனமானது தகிக்கப் படுகிறது. என் காதலனைக் கண்ட நாள்முதல் பலவித கஷ்டமும் அனுபவிக்கிறேன். நான் அவனையே சகலமு

மென்று நினைத்துக் கொண்டு அவனுடைய ஞாபகமா கவே யிருப்பதால், ஒருவேளை அவனைக் காண்பதற்கா கத்தான் கனவு கண்டேனென்று நினைக்கிறேன். இந்த வடுக்கும் காரணம் அதைத் தவிர வேறொன்று மிருந்து."

இப்படி இவள் சொல்லிக் கொண்டிருக்கையில் கத வுக்கு வெளியில் யாரோ வருகிற சப்தம் கேட்டது. உடனே மாமாஜி இருவரும் எழுந்திருந்து போய்ப் பார்த்தார்கள். அவ்விடத்தில் ஒரு வேலைக்காரன் ஸ்திரீ வேடம் பூண்டு நின்றுக் கொண்டிருந்தான். அவன் இவர்களைப் பார்த்ததும் தன் பின்னால் சற்று தூரம் வரும்படி ஜாடை காட்டிவிட்டுப் போனான். இவர் கள் அவனிடம் சென்றதும், அவன் தனக்கு எல்லா சமாசாரமும் தெரிந்து விட்டதாகவும், இவர்கள் மாத் திரம் கொஞ்சம் உதவி புரிவார்களாகில் தான் எவ்வ ளவோ காரியம் செய்யக் கூடுமென்றும் சொன்னான். இவர்களும் இதற்கு ஒப்பவே, உடனே போய் ரஹி மன்னிஸ்ஸாவுடன் யாரோ ஒரு பெண் பிள்ளை அவ ளுக்கு நல்ல சமாசாரம் கொண்டு வந்திருப்பதாய்ச் சொல்லும்படி சொல்லிப் பிறகு இவர்களுக்குத் தைரியம் கொடுக்கும்பொருட்டு, இவர்களுடைய துராலோசனை யில் தான் இவர்களுக்கு உதவி செய்து இவர்களை யாதோர் கஷ்டத்திலும் அகப்படாம லிருக்கும்படி செய்வது தன்னுடைய வேலை யென்றும் சொன்னான்.

மாமாஜி — "அதிருக்கட்டும். இந்த சமாசாரம் அதாவது நீ இப்படி வந்திருப்பதும், உன் யோசனைக ளும் பிறருக்குத் தெரியாதென்று வாக்குக்கொடு."

வேஷக்காரன் — "அல்லா சாட்சியாகச் சொல்லு கிறேன். யாருக்கும் தெரியாது."

பிறகு தாதிகளிருவரும் உள்ளே பிரவேசித்தார்கள். ரஹிமன்னிஸ்ஸாவிடம் அவன் சொன்னபடி சொன்னவுடனே நிஸ்ஸாவின் முகத்தில் புதிதாக ஓர் வித புன்சிரிப்புண்டாயிற்று. மாமாஜிக்களைப் பார்த்து, அவனை உடனே உள்ளே யனுப்பும்படி உத்திரவு செய்தாள். அவனும் உள்ளேவந்து வழக்கப்படி வந்தனம் செய்து அவளெதிரே உட்கார்ந்தான்.

வேஷக்காரன் — "ரஹிமன்னிஸ்ஸா, நான் என் எஜமானனுக்கும், உனக்கும் பொதுவான வேலைக்காரி. எனக்கு நிஸ்ஸா தான்கொண்ட காதலினால் மிக்க மனத்துயரடைந்திருக்கிறதாய்த் தெரிகிறது. நிஸ்ஸா, நான் சொல்வது சரியோ? நான் இப்படிச் சொல்வதனால் கோபித்துக் கொள்வீர்களோ?"

நிஸ்ஸா — "மேலேசொல். உனது வார்த்தை என் மனதைக் கவர்கின்றது.

வேஷக்காரன்—"நிஸ்ஸா யாரோ ஒரு புருஷனைக் கூட்டத்தின் நடுவில் கண்டதுமுதல் அவனே ஞாபகமாய் வேறொன்றையும் நினையாது யிருக்கிறாள். நிஸ்ஸா, இது சரிதானோ? இதற்கும் கோபித்துக்கொள்ள மாட்டீர்களே."

நிஸ்ஸா — "மற்றவைகளையும் சொல்."

வேஷக்காரன் — "இந்த சமாசாரம் எனக்குத் தெரிந்தவுடனே நான் ரோஸாவிலுள்ள கோவிலுக்குப் போய் அல்லாவைப் பூஜித்துக் கேட்டதில், நிஸ்ஸாவின் கனவில் ஒரு மகாத்துமா அவளுடைய பிற்கால சரிதத்தைத் தெரியப்படுத்தும் பொருட்டு தோன்றினாரென்றும் தெரியவந்தது. இதுவும் சரியோ?"

நிஸ்ஸா — "எல்லாம் சரிதான். துரிதப்படு. சீக்கிரம் சொல்."

வேஷக்காரன்—"நான் நிஸ்ஸா காதல்கொண்டிருக்கும்படியான புருஷனுடையபெயரைச்சொல்லக்கூடாது. ஆனால் இதுமட்டும் சொல்லலாம். அவள் தன்மீது காதல்கொண்டிருக்கிறாள் என்று அவனுக்குத் தெரியும். அவர்களிருவரும் சீக்கிரத்திலோ அல்லது நாட்சென்றோ ஒன்றாகக் கூடுவார்கள் என்பதும் நிச்சயம்."

இதைச் சொல்லவே நிஸ்ஸாவுக்கு ஆனந்த மதிகமாய் அவனை அருகில் வரும்படி சொன்னாள். பிறகு அவனைப் பார்த்து,

நிஸ்ஸா — "மாதே, நான் உன்னைப் பார்க்கவெகு சந்தோஷமடைந்தேன். உன் பேச்சுகளைக் கேட்டதே சந்தோஷ மதிகமாயிற்று. நீயே எனக்குத் தகுந்த ஆறுதல்களைச் சொல்லவல்லவள். ஆகவே நான் உன்னையேயோர் தெய்வமாகப் பாராட்டுகிறேன்" என்று சொல்லிக்கொண்டே தன் கையிலிருந்த ஓர் கடகத்தைக் கழற்றி அவனுடைய கையில் போட்டாள். அவனும் இந்தப் பக்ஷமான செய்கைக்காக வந்தனம் அளித்தான். பிறகு நிஸ்ஸாவைப் பார்த்து, "நான் வந்து வெகுநேரமாய் விட்டது. சீக்கிரத்தில் போகவேண்டும். போவதற்குமுன் நீங்கள் எனக்கு இரண்டு வாக்குத் தரவேண்டும். ஒன்று, நானிவ்விடம் வந்தது யாருக்கும் தெரியப்படாது. இரகஸியமாகவே யிருக்கவேண்டும். இரண்டு, நான் தங்களிடத்தில் சொன்னதெல்லாங் கூட இரகஸியமாகவே யிருக்கவேண்டும். இந்த இரண்டு மாமாஜிக்களும் இதைப்பற்றி எக்காரணத்தாலேனும் வாயைத் திறக்கக்கூடாது."

நிஸ்ஸா—"அப்படியே. எல்லாம் இரகஸியமாகத் தானிருக்கும்."

மாமாஜி — "நாங்களும் வாயைத் திறவோம்."

நிஸ்ஸா — "என்னை மறந்துவிடாதே. நீ போவதற்குள் இன்னும் கொஞ்சம் சமாசாரம் சொல். அது என் மனதிலுள்ள கவலையை நீக்கும்" என்றாள்.

வேஷக்காரன்—"இன்றையதினம் இராத்திரி இந்த இரண்டு கிழவிகளையும் என் வீட்டுக்கு அனுப்புங்கள். நான் தங்களுக்கு நல்ல சமாசாரம் தெரிவிக்கிறேன்."

நிஸ்ஸா — "அப்படியே, அனுப்புகிறேன்."

வேஷக்காரன் —"இன்னொரு சமாசாரம். நிஸ்ஸா, தாயார் கொடுத்த முத்தாகாரம் எங்கே?"

நிஸ்ஸா — "ஆ! அதெப்படி உனக்குத் தெரிந்தது. நிச்சயமாகவே ஒன்று கொடுத்திருக்கிறாள். அதைப் பெட்டியில் வைத்திருக்கிறேன். இரு. இதோ கொண்டு வருகிறேன்" என்று சொல்லிக் கொண்டே ஓடிப்போய் அதைக் கொணர்ந்தாள். முத்தாகாரத்தின் விலையோ அவளுக்குத் தெரியாது. அது சுமார் அரை லக்ஷம் ரூபாய் தாளும்படியானது.

வேஷக்காரன் — இதை கையில் வாங்கிக் கொண்டு, "இது ஜஹாநுமாவிலுள்ள கோயிலில் வைக்கவேண்டியிருப்பதால் இதைக் கொடுக்கும்படி கேழ்க்கிறேன். யாதொரு தடையும் சொல்லக் கூடாது. எடுத்துக் கொண்டு போகலாமா?"

நிஸ்ஸா —"எடுத்துக் கொண்டு போ. என்னிடத்தி லிருப்பதெல்லாம் வேணுமானாலும் எடுத்துக்

கொண்டு போகலாம். எனக்கு நகை வேண்டுமென்ற அவசியமே யில்லை. என் நாயகனைக் கண்ணால் இன்னொரு தடவை கண்டால் போதும்" என்று சொன்னாள். அவனும் அதைப் பெற்றுக் கொண்டு பேசாமல் நழுகிவிட்டான்.

நிஸ்ஸா மறுபடியும் தனியாக விருக்கிறாள்.

நிஸ்ஸா—"ஓ, அல்லா! அல்லா! எங்கும் நிறைந்தோனே. சகலமு மறிந்தவனே. நீயே கதி. சீக்கிரத்தில் என்னுடைய மனக் கவலைகளை யெல்லாம் நீக்கி என்னை இரக்ஷிப்பாயாக."

ஐந்தாம் அத்தியாயம்

இந்த அத்தியாயத்தில் மீர் பிராஸ் ஆலியைப்பற்றி கவனிப்போம். இவன் சுமார் அறுபது வயதுள்ள கிழவன். சூனியம், பேய், பிசாசம் முதலானவைகளைப் பற்றி இவனுக்கு நன்றாகத் தெரியும். கினவின் பலன்களைப் பற்றிச் சொல்வதில் மிகவும் கைதேர்ந்தவன். இவன் ஒரு சிறிய இருட்டான அறையில் வசித்திருந்தான். இந்த அறையில் இவனுக்கு முன்பாக ஒரு மேஜை ஒன்று இருந்தது. அதுவும் இவனைப்போலவே ரொம்ப வயதானது. ஆகையால் சின்னபின்னமாகும் ஸமயமாயிருந்தது. அதன்பேரில் சில காகிதங்களும் ஒரு எழுதுகோலுமிருந்தன. காகிதங்களில் உருடு பாஷையில் ஏதோ கொஞ்சம் கிறுக்கு எழுத்துக்கள் எழுதியிருந்தன. காகிதங்களின் பக்கத்தில் ஒரு சிறிய பெட்டி யொன்று இருந்தது. இதில் வெற்றிலை, பாக்கு,

சுண்ணும்பு, பான்சுபாரி முதலானவைக ளிருந்தன. துருக்கருடைய வழக்கம்போலிவன் வாஸனை திரவியங் கள்சேர்த்த ஹுக்கா பிடித்துக் கொண்டிருந்தான். மீர் பிராஜ் ஆலி கிழவனுகையாலே மீசைதாடி முதலியவை கள் நரைத்திருந்தன. இவனைப் பார்ப்பதற்கே பயங்கர மாகயிருந்தது. இவன் எப்பொழுதும் மௌனம் ஸாதிப் பான். இவன் யோசனைகளோ அதிகம். பேசுவதோ சிறிது. இவனைப் பற்றி நமக்கு முக்கியமாகத் தெரிய வேண்டியது என்னவென்றால், இவன் எப்பொழுதும் தான் ஜனங்களுக்குச் சொல்லுகிறவைகளுக்குப் பணம் வாங்குவதில்லை. நிஜாம் இராஜ்யத்திலுள்ள கீழ்ஜாதி ஜனங்களெல்லாம் இவனிடத்தில் வந்து தங்களுடைய கஷ்டங்களைச் சொல்லிக்கொள்வது வழக்கம். அவர்க ளுக்கு இன்னது இன்ன சமயத்தில் செய்யவேண்டியது என்பதைக் குறித்துச் சொல்வான். இதைக்கேட்டு ஜனங்களும் திருப்தி யடைவார்கள். இவனுக்குவேண்டிய ஐசுவரிய மிருந்தது. இவனைப் பார்த்தால் சன்னியாசி யைப் போலிருக்கும். தனவான்கள் இவனை வரும்படி அடிக்கடி சமாசாரம் அனுப்புவார்கள். ஆனால் இவன் போவதில்லை. ஏனென்றாலோ தான் செய்வது ஏழைக ளுக்கே தவிர மற்றவர்களுக் கல்ல என்பான். தனவான் கள் தயாதாட்சிண்ய மற்றவர்கள். அவர்களுக்குக் கொஞ்சமேனும் பரிதாபமென்பது கிடையாது என் றும் சொல்வது வழக்கம். இவன் நன்றாகப் படித்தவன். எப்படி தெரிகிறதென்றால், சில சமயங்களில் இவன் ஒப்பற்ற செய்யுள்களையும், அடி முதலானதுகளையும் உபயோகப் படுத்துவான். அவைகளும் இடத்துக்கும், சமயத்துக்கும் தகுந்ததாகவே யிருக்கும். இவனுக்கு ஆங்கிலபாஷையும் தெரியும்.

இவனைப் பார்த்தால் செல்வமுள்ளவன் என்று சொல்வது கஷ்டம். இவன் உடைகளோ கந்தைகள். உண்பதோ சாதாரணமான ஏழை ஜனங்களின் உணவு சாதம், பால், மரக்கறி இவை தவிரவேறொன்றும் சாப் பிடுவதில்லை. தன்னிடம் வரும் ஜனங்களுக்கு சில காலங்கள் குறித்திருக்கிறான். அந்த சமயத்தில் போனால்தான் அவனைப் பார்க்கலாம். அன்னியோன் னியமானவர்கள் வந்தால் அவர்களுக்குத் தனியாக இடம் ஏர்ப்படுத்தி யிருக்கிறான்.

இந்தவிடத்தில், ஓர்நாள் இராத்திரி எட்டுமணிக்கு ஒருமனிதனும், இரண்டு ஸ்திரீகளும் வந்து சேர்ந்தார் கள். இவர்கள்தான் ரஹிமன்னிஸ்ஸாவினுடைய வேலைக் காரர்கள். ஸ்திரீகளுடன் வந்த வேலைக்காரன் யாரென் றால் பெண் வேஷத்தோடு ரஹிமன்னிஸ்ஸாவினிடத்தில் சென்று வார்த்தை யாடினவனே.

இவர்களுடைய கதையை வெகுநேரம் வரையில் பொறுமையோடு பிராஜ்ஆலி கேட்டுக்கொண் டிருந் தான். பிறகு இவனும் ஆச்சரிய மடைந்தவனாய், இவர் களைச் சற்று நேரம் வரையில் இருக்கச் சொல்லிவிட்டு, வெளியே போய், சில நிமிஷங் கழித்துத் திரும்பி வந்தான்.

பிராஜ்ஆலி வரும்பொழுது தன் கையில் இரண்டு எலிமிச்சம்பழங்களும், ஒரு பேனா கத்தியும் கொண்டு வந்தான். உடனே அவர்களுக் கெதிரில் உட்கார்ந்துக் கொண்டு ஒவ்வொரு கையிலும் ஒரு பழம் வைத்துக் கொண்டு பின் வருமாறு சொல்லுகிறான் —

“இந்த எலிமிச்சம் பழங்களைப் பாருங்கள். நீங் கள் இவைகளுக்கு உயிரிருக்கிறதென்று அறிய மாட்டீர்

கள். ஆனல் மனிதனை விட அதிகமான உயிரும், புத்தியு மிருக்கின்றன. ஒரு மனிதனுடைய உடலை கத்தி கொண்டு இரண்டாகப் பிரித்தோமாகில், பிறகு அவனுக்கு உயிரில்லை. அவன் செத்த பிணமாகிறுன். ஆனல் அவன் இவ்வுலகி லில்லாவிடினும் மற்ருேர் உலகிலாவது உயிரோடு எழுகிறுனென்பதைப் பற்றி நாம் சந்தேகிப்பதில்லை. அப்படி அவனெழுவதையும் நாம் நம்முடைய கண்களால் பார்ப்பதில்லையே.

இந்தப் பழங்கள் ஒவ்வொன்றையும் இரண்டாகச் செய்வோமாகில் உடனே தங்களுக்கு உயிர் இருக்கிறதென்பதைக் காண்பிக்கும் — எல்லாருக்கு மல்ல, என்னைப் போலொத்த இந்த இரகஸியங்களை யறிந்தவர்களுக்கே. இப்பொழுது நீங்கள் பயப்படாமல் தைரியமாக யிருப்பதாய் வாக்குக் கொடுத்தீர்களாகில் நான் சில தேவதைகளை என் உதவிக்குக் கூப்பிட்டு உங்களுடைய கேள்விக்குப் பதிலறிந் துறைக்கிறேன்'' என்றுன்.

பிறகு மூவரும் ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டு அப்படியே யிருப்பதென்று தீர்மானித்தார்கள்.

பிராஜ்ஆலி — ''மூவரும் வரிசையாகக் கவிழ்ந்து படுத்துக் கொள்ளுங்கள். கைகளையும் நீட்டி விடுங்கள். தலையைத் தூக்கப்படாது. எந்தப் பக்கமும் திரும்பக் கூடாது. முகம் தரையோடு தரையாக விருக்க வேண்டும். என்னுடனவது உங்களுக்குள் ஒருவருக்கொருவராவது பேசப் போகிறீர்கள். அப்படிச் செய்தீர்களோ ஒரு நிமிஷத்தில் இறந்துவிடுவீர்கள். நான் உங்களை வாக்குத்தத்தம் செய்யும்படி கேட்கிறவரையில் நிச்சப்தமாயிருக்கவேண்டும். கொஞ்சம் சந்தடியுண்டானலும் நம்முடைய காரியம் கெட்டுப்போ

கும். ஆகவே என்ன கஷ்டமாயிருந்தாலும் சரி, எப்படிப்பட்ட ஆபத்து நேர்ந்தாலும் சரி — தேள் கொட்டினாலும், பாம்பு கடித்தாலும், வாயைத் திறக்கப் படாது."

இவைகளை யெல்லாம் கேட்ட மூவரும், எல்லாவற்றிற்கும் சம்மதித்துச் செத்த பிணங்கள்போல் நீட்டி விட்டார்கள். பிராஜ்ஆலி கதவுகளை யெல்லாம் தாளிட்டுவிட்டு, இருளில் அவர்களின் தலையண்டையில் நின்றுக்கொண்டு, யாரையோ கூப்பிடுவதுபோல் உரத்திக் கூவினான்.

"இரகஸியமான, மனிதர்களாலறியக்கூடாத செய்திகளை அறியும்படி இவ்விடத்திற்கு வந்திருக்கும் மானுட ஜென்மம் படைத்தவர்களே, என்னிடத்தில் யாதொன்றுக்கும் பயப்பட மாட்டோமென்று வாக்குக் கொடுத்தவர்களே, எழுந்திருங்கள், என்முன் வந்து நில்லுங்கள்" என்றான்.

உடனே மூவரு மெழுந்திருந்து அவனுக் கெதிரில் நின்றார்கள்.

பிராஜ் ஆலி — "என்முன் நிற்கும் மனிதர்களே, பழையபடி படுத்துக்கொள்ளுங்கள். மறுபடி யெழுந்திருங்கள். இம்மாதிரி மூன்று தடவை செய்யுங்கள்" என்றான்.

அவர்களும் அப்படியே செய்தார்கள். பிராஜ் ஆலியும் தான் முதலில் நின்றபடியே யிருந்துக்கொண்டு,

"மனிதர்களே, இப்பொழுது தாங்கள் பயப்பட மாட்டோமென்று வாக்குக் கொடுங்கள்."

"பயப்படமாட்டோம். இது சத்தியம்."

“இப்பொழுது நான் உங்களோடு என்ன வேண்டுமானலும் அதைச் செய்ய வல்லவன் என்பதை நம்புகிற தாக சத்தியம் பண்ணுங்கள்.”

“அப்படியே, எதுவும் செய்ய வல்லவன்.”

“நல்லது, அப்படியானல் நான் எழுந்திருக்கும்படி சொல்லுகிற வரையில் அப்படியே யிருங்கள்” என்று சொல்லிவிட்டு பிராஜ் ஆலி கொஞ்சதூரம் போய் ஏதோ முணுமுணுத்துக் கொண்டே படுத்தான். பிறகு எழுந்திருந்து சுவரண்டை போய் சுண்ணும்பு கொஞ்ச மெடுத்து வாயிற் போட்டுக் கொண்டான். சில நிமிஷங்கள் கழித்து, வாயிலிருந்தனவற்றை யெல்லாம் கையில் உமிழ்ந்தான். இப்பொழுது அவன் கையில் சுண்ணும்புக்குப் பதிலாக உலர்ந்த அரிசி யிருந்தது. அதோடு அவர்களுக்கு எதிராகவந்து அவர்களை எழுந்து உட்காரும்படி கட்டளை யிட்டான்.

“இந்த அரிசியை உங்கள் பேரில் எறிகிறேன். நாம் செய்யும் காரியம் கைகூடுமேயாகில் உடனே உங்களுடைய முகங்களிலிருந்து உதிரம் சொட்டும். பிறகு நாம் மற்ற காரியங்களைச் செய்யலாம்” என்று சொல்லிவிட்டு அரிசியை எறிந்தான். இரத்தம் சுளைச் சுளையாய் கொட்டிற்று. அவர்களுக்கு நடுக்க முண்டாயிற்று. ஆனல் பிராஜ் ஆலி அவர்களுக்குப் பயமூட்டி தைரியமாக யிருக்கச் சொன்னன். பிறகு ஒரு கோப்பை எடுத்து அதில் மூவருடைய உதிரத்திலும் கொஞ்சம் கொஞ்சம் பிடித்துக் கொண்டு, வத்தி போட்டு அதை விளக்காகக் கொளுத்தினன். கொஞ்சம் பிண நாற்றத்தோடு விளக்கு எறிந்தது. மூவரையும் உட்காரச் சொன்னன். பிறகு ஒவ்வொரு எலிமிச்சம் பழத்தையும் வரிசையாகக்

கோப்பையில் போட்டு சுவாலையில் காட்டினான். வர வர சுவாலை அதிகப் பிரகாசமாயிற்று. அந்த சிவப்பு சுவாலையின் முன் நின்ற நால்வரும் நான்கு பிசாசங்கள் போல் தோன்றினார்கள். இப்பொழுது மந்திரவாதி சிறு குரலோடு பின் வருமாறு அவர்களுக்குச் சொல்லுகிறான்:—

எல்லாம் சரியாகவும் கிரமமாகவும் நடந்துவிட்டது. நானிப்பொழுது இந்தப் பழத்தை உங்களெதிரில் இரண்டு துண்டுகளாக அருக்கிறேன். நாளைய தினம் உதய காலத்தில் இரண்டும் ஒன்ருய்ச் சேர்ந்து மத்தியில் ஒரு சிவத்த இரத்தக் கோடோடு ரஹிமன்னிஸ் ஸாவின் கட்டிலினுடைய காலண்டையி லிருக்கக் காண்பீர்கள். மற்ருெரு பழத்திற்கு உயிர் கொடுக்கிறேன். உடனே அது ஓட ஆரம்பிக்கும். அதை நீங்கள் தொடர வேண்டும். ஒரு மைல் தூரம் ஐம்பது மைல் தூரமாகத் தோன்றும். மத்தியில் திரும்பக் கூடாது. அதைப் பார்த்துக் கொண்டே போக வேண்டும். அது நிஸ் ஸாவின் பிரியம் எவ்விடத்தி லிருக்கிறதோ அவ்விடம் போகும். இதற்குள் அவளுடைய நினைவைப் பற்றிச் சொல்லுகிறேன் கேளுங்கள்.

அவளுக்குத் தோன்றின இரண்டு உருவமும் அவளை இரண்டு வழியாகக் கொண்டு போகப் பார்க்கின்றன. எந்த வழி போவதென்று அவளின்னம் தீர்மானிக்கவில்லை. ஆகையால் மத்தியில் சில கஷ்ட சம்பவங்களோடு அவளுடைய எண்ணம் நிறைவேறும். ஆகவே, அதைப் பற்றி கவலைப்பட வேண்டாம். இப்பொழுது நடுராத்திரியாகவே நீங்கள் யாதோர் தடையுமில்லாமல் பழத்தைத் தொடருங்கள்.''

என்று சொல்லிவிட்டு ஒரு பழத்தை இரண்டு துண்டுகளாக அருத்து மந்திரவாதி உயர எறிந்தான்.

அப்பழம் மறுபடி கீழே வராமல் மறைந்து விட்டது. மற்றொன்றுக்கு உயிருண்டாக்கி கீழே விடுத்தான். அது ஓட வாரம்பித்தது. அவர்களும் பின் தொடருவாராயினார்கள். பல தெருக்களையும் கடந்து சுமார் ஒரு மைல் தூரம் போயிற்று. உடனே திடீரென்று யாரோ நிறுத்தி விட்டதுபோல் நின்று விட்டது. அவர்களும் நின்றார்கள். நிதானித்துப் பார்த்தார்கள். கடைசியாக ஓர் ஊர்மாளிகையின் கேட்டண்டை வந்திருப்பதாகக் கண்டார்கள். உள்ளே யிருந்த வேலைக்காரர்களும் வார்த்தை குரல் கேட்கவே வெளியே வந்தார்கள்.

மணி சுமார் பத்தாயிருக்கும். வெளியே வந்த வாசற் காப்பாளர் கோபத்தோடு இவர்களை யாரென்றும், என்ன காரணத்திற்காக இரவில் அவ்வேளையில் அவ்விடத்திற்கு வந்தார்களென்றும் கேட்டார்கள்.

அக்கேள்விகளுக்குப் பதிலாக தாங்கள் திருடரல்லவென்றும், சோம்பேரிகளுமல்லவென்றும், ஆனால் ஆஸ்மன்ஷாவின் வேலைக்காரரென்றும், ரஹிமன்னிஸ்ஸா ஏதோ விஷயமாக அவர்களை அனுப்பி யிருக்கிறாளென்றும் சொன்னார்கள்.

ஆ! அப்படியா! அந்தப்பெண் ஓர் இளைய ஸர்தாரின் பேரில் காதல் கொண்டாளென்று கேழ்விப்பட்டேன். அந்த சமாசாரம் ஆஸ்மன்ஷாவுக்குத் தெரியுமோ? அது தெரியுமானால் நேற்று இராத்திரி இரண்டு போலீஸ் ஜவான்கள் திருடர்களால் அடிக்கப்பட்டு கொல்லப் பட்டார்கள் என்பதைக் கேட்கவும் விருப்பங் கொள்வார். அவர்களிடத்தில் ஏதோ கொஞ்சம் நகை

களிருந்ததாகவும் தெரிகிறது. திருடர்கள் பிடிக்கப் பட்ட பொழுது சொன்னதாவது :—

அவர்கள் இந்த நகைகளை ஆஸ்மன்ஷாவுக்கு 25,000 ரூபாய்க்கு விற்றுவிட்டதாகவும், அவைகளை அந்த ஜவான்கள் திருடிக்கொண்டு வந்துவிட்டார்களென்றும் சொன்னார்கள் என்றான்.

இதைக் கேட்டவுடனே தாதிகளுக்குப் பகீலென்று இடிஇடித்தாப்போ லிருந்தது. ஆயினும் பேசாமலிருந் தார்கள்.

"அது வேறு சமாசாரம். அதைப்பற்றி எங்களுக்கு முன்னமே தெரியும். அது கிடக்கட்டும். இந்த மாளி கையில் வசிப்பது யார்?"

"இது மீர் ஆலிகான்வீடு. அவர் வெளியே குல் பர்க்காவுக்குப் போயிருக்கிறார். வருவதற்கு இரண்டு மூன்று மாதம் பிடிக்கும். ஆனால், அவருடைய புத்திரன் ஆப்சல்கானிருக்கிறார். அவருக்கும் உடம்பு இரண்டு நாளாகச் சரியில்லை. காயலாவாயிருக்கிறதுபோல் காண்கிறது. அன்றையதினம் ஊர்வலம் வந்தது முதல் ஒருவாறு வாடியிருக்கிறார். டாக்டர் என்று பேர் சொல்லிக்கொண்டு வரும் ஒரு துரைசானியைத் தவிர வேறு யாவரையும் கண்ணெடுத்துப் பார்ப்பதில்லை. அவள் ஏதாவது விஷம் கிஷம் கலந்து கொடுத்து விடப் போகிறாளே என்று பயமாயிருக்கிறது. அதைப் பற்றி அவருடன் சொல்லியும் அவர் கேட்கிறதில்லை. அவரோ மிகவும் நல்லவர். அழகிலோ அவருக்குச் சமானமில்லை. எங்களிடத்தில் மிகவும் பக்ஷமாயிருக்கிறார். அவரிருக் கிறவரையில் எங்களுக்கு யாதோர் குறையுமில்லை."

"அவருடைய பெயர் ஆப்சல்கான் அல்லவா?"

"ஆம்."

"ஊர்வலம்வந்தது முதலா காயலாவாயிருக்கிறார்?"

"ஆமாம், வந்தவுடனே ஏதோ முகம் வெளுத்திருந்தது. டாக்டரை வரவழைக்கச் சொன்னார். அவள் வந்ததும் அவரைப் பார்த்து ஏதோ மருந்து கொடுத்தாள். அதனால் யாதோர் குணத்தையும் காணோம்."

"அவரைப் பற்றி நாங்களும் கேட்டிருக்கிறோம். அவர் மிக்க அழகு வாய்ந்தவர் என்றும் தெரியும். ஆனால் அவருடைய அடையாளங்களில் சிலவற்றைதான் கேட்டிருக்கிறோம். முழுதும் சொல் பார்ப்போம்."

"அவர் தாயார் காஸ்மீர தேசத்தவர். ஆகவே அவருடைய அழகுக்குக் கேழ்க்க வேண்டியதில்லை. ஆ! ஆ! சற்று முன் வந்திருந்தால் அவருடைய படத்தையே காண்பிப்போமே. அரபிக்குதிரையின் பேரில் ஏறிக்கொண்டிருக்கிறார். அந்தப்படியே அன்றைய தினம் ஊர்வலம் வருவதற்கு முன்னால் போடோ பிடித்திருக்கிறது. ஆ! ஆ! என்ன அழகு! என்ன அழகு!"

"இப்பொழுது காண்பிக்கப் படாதோ?"

"இவ்வளவு தூரம் அவரைப்பற்றிக் கேட்டதனால் அவருடைய படத்தைப் பார்க்க ஆவலதிகரித்து விட்டது. ஆகவே, தயவு செய்து கொண்டு வந்து காண்பிக்க வேண்டுகிறோம்."

"கஷ்டம். ஆனாலும் உங்களுக்காக பார்ப்போம்" என்று சொல்லிக் கொண்டே உள்ளே நுழைந்தான்.

இரண்டு நிமிஷத்தில் ஒரு படத்தோடு வெளியே வந்தான். மூவரும் பார்த்தார்கள்.

ஒருத்தி — "ஐயா, இந்தப் படத்தை தயவு செய்து இன்றைய தினம் எங்களிடம் கொடுத்தால் தவருமல் நாளைக்குக் கொண்டுவந்து கொடுத்து விடுகிறோம். நாங்களப்படி கேட்பதில் காரணமிருக்கிறது. அதனல் அவசியமான காரியமிருக்கிறது. ஆகவே தயவு செய்து கொடுக்க வேண்டும்."

வாசற்காப்போன் — "அது முடியாது. ஏனென்ருல் சட்டம் விலையுயர்ந்தது. அவருக்குத் தெரிந்தால் பல கஷ்டங்கள் நேரிடும்."

ஒருத்தி — "சட்டம் எங்களுக்கு வேண்டியதில்லை. படம் மாத்திரந்தான் வேண்டும். நாங்கள் வெறுங் கையோடு வரவில்லை. பயப்படாதே. சில ரூபாய்கள் கொண்டு வந்திருக்கிறோம். அதைப் பரிசாக அளிக்கிறோம். தடை சொல்லாமல் கொடுக்க வேண்டும்."

வாசல் — "ஒரு பெண் பிள்ளையை மறுப்பது நன்றல்ல. ஆகையினுல் இந்தப் படத்தைக் கொடுக்கிறேன். திருப்பிக் கொடுக்க வேண்டியதைப் பற்றி கவலைப்பட வேண்டியதில்லை. ஏனென்ருல் இதைப் போல் இன்னும் அனேக மிருக்கின்றன. அவைகளில் ஒன்றை எடுத்து அதன் இடத்தில் வைத்து விடுகிறேன். ரூபாயைக் கொடு."

என்று சொல்லி ரூபாயை வாங்கிக் கொண்டு படத்தைக் கொடுத்து விட்டான். அவர்களும் அதை வாங்கிக் கொண்டு சந்தோஷத்தோடு நடந்தார்கள்.

மூவரும் வழியில் சற்றும் தங்காமல் நேராக ஆஸ்மன்ஷா அரண்மனைக்குச் சென்று, சொல்லொணுத சந்தோஷத்தோடு ரஹிமன்னிஸ்ஸாவின் அந்தப் புரத்தை யடைந்தார்கள். (சந்தோஷத்துக்குக் காரண மென்ன

வென்ருல் ரஹிமன்னிஸ்ஸாவி னிடத்தில் இந்தப் படத்தைக் கொண்டு கொடுத்த வுடனே, தாங்கள் செய்த மற்ற மோசச் செய்கைகளையெல்லாம் மறந்து விடுவாள் என்பதே.) இவர்கள் அந்தப்புறத்துக்குப் போனபோது இரவு பனிரண்டு மணிக்கு மேலானதால் ரஹிமன்னிஸ்ஸாவை அவளுடைய தூக்கத்தினின்றும் எழுப்புவது தகுதியல்ல வென்று வெளியேயே படுத்துத் தூங்கி விட்டார்கள். சூரிய உதயமானதும் எழுந்திருந்து அறையில் போய்ப் பார்த்தார்கள். ரஹிமன்னிஸ்ஸா இன்னும் தூங்கிக் கொண்டிருக்கிருள். கட்டில் காலண்டை பார்த்தார்கள். பிராஜ் ஆலி சொன்னபடி எலிமிச்சம் பழம் ஒரு சுற்றுக்கோடோடு அருத்த இடம் தெரியாமல் விழுந்துகிடந்தது. அதை எடுத்து ஒரு மூலையாக எறிய எத்தனித்தார்கள். இதற்குள் நிஸ்ஸா விழித்துக் கொண்டாள். இவர்கள் வழக்கம் போல் அவளுக்குக் காலை வந்தனமளித்து பிறகு தங்களுடைய துணிகரமான செய்கைகளை ஒருவாறு சொல்ல வாரம்பித்தார்கள். சொல்லி முடிந்தவுடன் தாங்கள் கொண்டு வந்த படத்தை அவளிடம் கொடுக்க அவள் அதைக் கண்டு மிகவும் ஆச்சரியப்பட்டாள். சந்தோஷம் ஒரு பக்கமும் ஆச்சரியம் மற்ருெரு பக்கமுமாக யிருக்க, அதை யெல்லாம் கவனியாமல் காதல் முதிர்ச்சியால் படத்தைப் பார்ப்பதும், முத்தமிடுவதும், மறுபடி பார்ப்பதும், மறுபடி முத்த மிடுவதும், "ஆ, என் மனதிற் கிசைந்த மணவாளனே" என்பதும், "என் காதலனே" என்பதுமாகச் சொல்லிக் கொண்டே அப்படத்தைத் தனது மார்மீது வைத்துக்கொண்டு கட்டிலின்மீது சாய்ந்து விட்டாள்.

ஆறும் அத்தியாயம்

மகம்மதீயர் தங்கள் மத சம்மதப் பிரகாரம் தங்கள் ஸ்திரீகளை கோஷாக்களாக அவர்கள் மற்ற புருஷர்களைப் பாராமலும், அன்னிய புருஷாள் அவர்களைப் பாராமலுமிருக்கும்படி வைத்து கவனித்து வருகிறார்கள்.

ரஹிமன்னிஸ்ஸா தன் கோஷாச்ரமமாகிய அந்தப் புரத்தில் தனிமையாக விருந்துக்கொண்டு தான் எப்பொழுது தன் உள்ளம் கவர்ந்த கள்வனைக் காண்பாளோ வென்று ஏங்கிக்கொண்டும், அவனைக் காணாவிட்டாலும் அவனுடைய படத்தையாவது வைத்துக்கொண்டு அதன் முகமாகவாவது அவனைத் தெரிசித்துத் திருப்தியடைவோ மென்று நினைத்துக்கொண்டும், தங்கள் கடவுளாகிய அல்லாவைப் பிரார்த்தித்துக் கொண்டுமிருக்கும் சமயம் அவளுடைய தகப்பனாராகிய ஆஸ்மன்ஷா அவ்விடம் வந்தார். அவர் வந்ததும் நிஸ்ஸா எழுந்திருந்து ஓடி, தன் முகவாட்டம் அவருக்குத் தெரியப்படாதென்று மறைக்கும் பொருட்டு, வந்தனங்களைச் செய்து சந்தோஷமாக ஓர் முத்தம் கொடுத்தாள்.

உடனே ஆஸ்மன்ஷா, அவள் சொல்லா விட்டாலும் அவளுடைய மனோவியாகூலத்தைத் தானேயறிந்து,

"குழந்தாய்! என்ன உடம்புனக்கு? பழையபடி சந்தோஷமாகக் காணப் படாமல் ஒருவாறு விசனமாக விருக்கிறாயே" என்று கேட்க அவள்,

"என் தந்தையே! வேறொன்று மில்லை. சிறிது மாறுபாடு என் ஸௌக்கியத்தி லுண்டா யிருப்ப துண்

மையே. ஆனால் அதன் காரணம் என்னால் சொல்ல முடியாது. நான் என்ன செய்வேன்'' என்றாள்.

அதற்கு அவர், ''கண்மணீ! உனக்கென்ன கஷ்டமிருந்தாலும் அவைகளைத் தீர்ப்பது என் கடமையாயிருக்க நீ ஒன்றும் விஸனப்படவேண்டாம். ஏதாயிருந்தாலும் என்னுடன் சொல்.'' என்று கேட்க நிஸ்ஸா,

''என் அன்புள்ள தந்தையே! தங்களுடைய குணமெனக்குத் தெரியாதா. தாங்களிதுவரையில் என் விஷயமாக யாதொன்றும் குறைவு பண்ணினதில்லை'' என்று சொல்லிக் கொண்டே கண்ணீரைப் பெருக்கினாள். இதைக் கண்டவுடனே, ''ஆஸ்மன்ஷா வெகு ஆவலோடு நிஸ்ஸாவைப் பார்த்து, ''விஸனப் படாதே, கண்ணீர் விடாதே, எது வேண்டுமானாலும் சொல்லு, வரவழைக்கிறேன்'' என்றார்.

நிஸ்ஸா, ''அப்பா! தாங்கள் சொல்லுவது சரியே. ஆனாலும் இப்பொழுது எனக்கு வேண்டியதைத் தங்களால் கொடுக்க முடியாது என்று நினைக்கிறேன்'' என்றாள்.

ஆஸ்—''என்னால் முடியாதா? வேண்டிய பணத்தைச் செலவு செய்தால்கூட முடியாதோ? அல்லது கஷ்டப் பட்டாலாகாதோ? என்னவென்றுதான் சொல்லேன். நான் கேழ்க்கப் படாதா?''

நிஸ்ஸா—''அது இவைகளாலடையக் கூடியதன்று, என் தந்தையே. அல்லாவாகிய நம் கடவுளே தயவு செய்தால் தவிர வேறொன்றாலு மாகக் கூடியதல்ல.'' என்று சொல்லிக் கொண்டிருக்கும் பொழுது ஒரு அரண்மனை வேலைக்காரனோடி வந்து,

"ஸர்கார்! ஸர்கார்!" என்று அவசரத்தோடு கூச்சலிட,

ஆஸ்மன்ஷா — "கோன்ஹை?"

"சர்கார்; கொத்வால் ஸாஹெப் ஆப்கூ மில்னா சாதேஹீங்?"

"கொத்வால் ஸாஹெப் என்னைப் பார்க்க வேண்டி வந்திருக்கிறாரா? ஆனால் நான் போய் வருகிறேன். அல்லா உன்மீது கிருபை பண்ணட்டும்" என்று சொல்லிவிட்டுப் போகும் பொழுது மருபடியோர் முத்தம் தந்துப் போனார்.

ஆஸ்மன்ஷாவும், கொத்வாலாகிய போலீஸ் கமிஷனரும் ஒருவரை யொருவர் சந்தித்த வுடனே இருவரும் தங்கள் தங்கள் வந்தனங்களைச் செய்து விட்டு உட்கார்ந்து சம்பாஷணை செய்யத் துடங்கினார்கள்.

ஆஸ் — "தாங்கள் இம்மாதிரி அவசரமாக ஒரு பொழுது மிவ்விடம் வந்ததில்லையே. இப்பொழுது என்ன அவசரமோ? செய்தி!யென்ன?"

கொத் — "ஐயா! ஒரு கேஸ் ஒன்றைப்பற்றி தான் தங்களுடன் பேசும்படி வந்தேன். அதென்ன வென்றால் நேற்றையதினம் இரண்டு போலீஸ் ஜவான்கள் இரண்டு பெயர்போன போக்கிரிப் பயல்களால் கொலை செய்யப்பட்டார்கள். கொன்ற இருவரையும் பிடித்துக் காவலில் கொண்டுவந்திருக்கிறோம். அவர்களைப் பிடிக்கும்பொழுது அவர்களிட மிருந்து சில நகைகள் கிடைத்தன. விசாரிக்குமிடத்து அவைகள் தங்களுக்குச் சில காலங்களுக்கு முன் இந்த இருவராலேயே விக்கிரயம் செய்யப்பட்டதாகவும், அவைகள் எவ்விதமாகவோ

அந்த கொலை செய்யப்பட்ட போலீஸ் ஜவான்களிடம் போனதாகவும், அவர்களிடமிருந்து இவர்கள் கைப் பற்றினதாகவும் தெரிகிறது. ஆகையால் அவைகள் தங்களுடைய அரண்மனையிலிருந்து திருடப்பட்டிருக்க வேண்டுமென்று வெளிப்படுகிறது.''

ஆஸ் — (ஆச்சரியத்தோடு) "ஆ! அப்படியா! இப் படிப்பட்ட சமாசாரம் நடந்திருந்தால் எனக்குத் தெரி யாமலிருக்காதே, காவற்காரர்கள் வந்து சொல்லியிருக்க வேண்டுமே, என்ன ஆச்சரியமாக யிருக்கிறது.''

கொத் — "என்ன, அப்படிச் சொல்லுகிறீர்களே, நாங்கள் கொண்டுவந்திருக்கும் ஆபரணங்களைப் பாருங் கள். தங்களுடையதுதானு அல்லவா வென்று'' என்று சொல்லிக்கொண்டே அவைகளை யெடுத்துக் கொடுத் தார். ஆஸ்மன்ஷாவும் அவைகளை உற்றுப் பார்த்து தன்னுடைய குறிப்பும் அவைகளிலிருப்பது கண்டு,

ஆஸ் — "ஆம், இவைகள் என்னுடையதே. இவை வெளியில் போனவிதம்? எப்படி போயிருக்கலாம்? என் பெண்ணுக்கு இரண்டு தாதிகள். அவர்கள் எப்பொழு தும் அவளை விட்டுப் பிரிகிறதில்லை, மேலும் அவர்கள் எனக்குத் தெரிந்தவரையில் அயோக்கியமாகக் காணப் படவில்லை.''

கொத் — "இருக்கட்டும்; இப்பொழுது அவர்க ளிருவரையும் இவ்விடம் வரவழைக்கவேண்டும்.''

ஆஸ் — "ஆகா, வேண்டுமானல் வரவழைப்போம், ஆனல் அவர்களை யொன்றும் இகழ்ச்சியாகப் பேச வேண்டாமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஏனென் ருல் அவர்கள் என் குமாரத்தி யிடத்தில் திருடுவதற்குக் காரணமில்லை. அவர்கள் அவளையே ஓர் தெய்வமாக

யெண்ணி வணங்கிவருகிறுர்கள். இவை எனக்குத் தெரிந்த விஷயமே.''

கொத் — "ஐயா! என்ன, மனிதருடைய குணு குணங்களை யறியாமல் பேசுகிரீரே. ஒரு மனிதன் எவ்வளவுதான் யோக்கியனுகயிருக்கட்டும். ஒருபவுன் ஒன்று வைத்து மரந்தால்போதும், கண்ணிமை கொட்டுமளவில்........'பணமென்ருல் பிணமும் வாய்திரக்கு' மென்ற பழமொழி கேட்டதில்லையா.''

ஆஸ் — "நீர் என்ன சொன்னுலும் சரி. இவர்கள் ஒரு காலத்திலாவது கெட்ட நடத்தையைக் காண்பித்திருப்பார்களா?''

கொத் — "சமயம் வந்தால்தானையா தெரியும். இப்பொழுது நகைகள் தங்களுடையது என்பதற்குச் சந்தேக மில்லையே. இவைகளை ஜவான்களிடமிருந்து கைப்பற்றிக் கொண்டவர்களு மிருக்கிறுர்கள். அதற்கும் சந்தேக மில்லை. ஜவான்களிடம் போனவிதம்தான் தெரியவேண்டும். அவர்கள் யாராவது அரண்மனையிலிருப்பவர்கள் மூலமாய்த்தான் பெற்றிருக்கவேண்டும். அன்ரு?

ஆகையாலிதை விசாரிக்காம லிருந்தாலாகாது. தயவுசெய்தால் அந்த வேலைக்காரிகளின் வாக்மூலங்களைக் கேட்டு அவர்களிட மிருந்து நிச்சயத்தை யறியலாம். இதை மருப்பதில் பிரயோஜன மில்லை.''

ஆஸ் — "ஆனுல் தங்களிஷ்டப் படியே செய்யுங்கள். அவர்களை வரவழைப்போம். என்று சொல்லிவிட்டு அவ்விடத்திலிருந்த ஓர் வேலைக்காரனை யனுப்பி அவர்களை யழைத்துவரும்படி சொன்னுர்.''

ஏழாம் அத்தியாயம்.

வேலைக்காரன் போய் மாமாஜீக்களாகிய இரண்டு தாதிகளுக்கும் ஆஸ்மன்ஷா அழைப்பதைத் தெரிவித்தவுடனே அவர்கள் பரபரப்புடனெழுந்து என்னமோவென்று தெரியாதவர்களாய் பயந்துக் கொண்டு வழியிலிருக்கும் காவற்காரர்களையெல்லாம் எதற்காகக் கூப்பிடுகிறாரென்று கேட்டுக்கொண்டே வந்தார்கள். வந்தவுடனே தங்கள் எஜமானனாகிய ஆஸ்மன்ஷாவுக்கும் போலீசாருக்கும் வந்தனங்கள் செய்ய வேண்டியபடி செய்து விட்டு ஒரு புரமாய் நின்றார்கள். ஆஸ்மன்ஷா இவர்களைக் கண்டவுடனே கொத்வாலைப் பார்த்து இவர்கள் தான் தாதிகள் என்று சொல்லி சுட்டிக்காட்டி பின் வருமாறு கேட்க வாரம்பித்தார்.

ஆஸ் — "ஆமாம், நீங்களிருவரு மிவ்விடத்தில் எவ்வளவு நாளாக வேலை செய்துக் கொண்டிருக்கிறீர்கள்?" இப்படிக் கேட்டவுடனே ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டு ஒன்றும் தோன்றாதவர்களாய் ஒரு நிமிஷம் பேசாமல் நின்றார்கள்.

ஆஸ் — "பயப்படாதீர்கள். உங்களைப் பற்றி எனக்கு வெகுவாகத் தெரியும். யாதொன்றும் பயமில்லாமல் பதில் கூறுங்கள்."

மாமாஜி — "ஐயா, சுமார் 4 வருஷங்களாகிறது. நாங்களிருவரும் ஒன்றாகவே வேலைக்கு வந்தவர்கள்."

கொத் — "கிடக்கட்டும்! நீங்களிவ்விடம் வருவதற்கு முன்னால் எங்கே வேலையாயிருந்தீர்கள்?"

ஆஸ் — "அதைப்பற்றி நமக்கென்ன?"

கொத் — "ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள். அது தான் முக்கியம். அதனால் தான் நிஜத்தை யறியவேண்டும். கேட்பதற்கு மறுமொழி கூறுங்கள்."

மாமாஜி — "நான் ஆலிஹுஸெயினுடைய மனைவி. அவரிறந்துவிட்ட பிறகு இவ்விடம் வந்தேன். இவளும் என்னுடன் கூடத்தான் வெகுநாளாகவிருந்தவள். ஆனால் கலியாணம் மாத்திரமிவளுக்கு நடக்கவில்லை. எப்பொழுது மொன்றாகவே யிருக்கவேண்டு மென்று தீர்மானம் பண்ணிக்கொண்டு இவ்விடத்தில் வேலையில் புகுந்தோமே யன்றி வேறில்லை."

கொத் — "உனக்கும் கல்யாணமாகவே யில்லை யென்றால் அதை நீ மருத்து ரூபிப்பையா?"

மாமாஜி — "என்ன இப்படிக் கெல்லாம் கேழ்க்கிறீர்களே, பொய்யா சொல்லப் போகிறேன்." என்று சொன்னதை யருகிலிருந்த போலீஸார்களி லொருவன் காகிதத்தில் பதிந்துக் கொண்டான்.

கொத் — "அதெல்லாம் கிடக்கட்டும், நீங்கள் குடிக்குப் பழக்கப் பட்டிருக்கிறீர்களா?"

மாமாஜி — "தாங்களிம்மாதிரி கேழ்பது நன்றாகவில்லை. இப்படி தங்களுக்கு யாரையா சொன்னது?"

கொத்—"சந்தோஷம், உங்களுக்குக் குடிக்கும்படியான சினேகிதைகள் யாராவது இருக்கிறார்களா?"

மாமாஜி — "அவர்களுடைய இஷ்டங்களைச் சொல்ல நாங்களென்ன. எங்களுக் கெப்படித் தெரியும். நிச்சயமாகவே எங்களுக்குத் தெரிந்த வரையில் ஒருவருமில்லை."

கொத் — "ஆனல் சரி, அப்படியானல் போன இரவு எப்படி நீங்கள் குடி வெறியுடன் காணப்பட்டீர்கள்?"

மாமாஜி — "என்றிறவு?"

கொத் — "இரண்டு நாள் முன்பாக."

மாமாஜி — "சத்தியமாக நாங்கள் இவ்விடத்தை விட்டு வெளியே போகவே யில்லையே! ஒரு பாவமு மறியோமே!"

கொத் — "உங்களுக்குச் சம்பளம் தவிர வேறு ஏதாவது வரும்படி யுண்டா?"

மாமாஜி — "கிடையவே கிடையாது."

கொத் — "இப்பொழுது உங்களுக்கு ரூ. 500 கொடுக்கிரும். ஒரு உபகாரம் செய்ய வேண்டுமென்ருல் செய்வீர்களா மாட்டீர்களா?"

மாமாஜி — "எப்படிச் சொல்லுகிறது. காரியத்தை யோசித்துதான் செய்யக் கூடுமானல் செய்யலாம்."

கொத் — "கிடக்கட்டும். இவைகளைப் பாருங்கள். உங்களைப் போலொத்த ஸ்திரீகளுக்கு இவைகளைப் போல ஹாரங்களணிவதற்கு ஆசை யிருக்குமல்லவா?"

மாமாஜி — "ஆமாம். நன்ருகத்தா னிருக்கிறது. ஆனலும் நாங்களென்ன செய்கிறது?"

கொத் — "என்னதான் செய்வீர்கள் கொடுத்து விட்டால்?"

மாமாஜி — "எங்கள் எஜமானிக்குக் கொண்டு போய்க் கொடுப்போம்."

கொத்—"நல்லது. உங்களுடைய எஜமானிக்கு ஏர்க்கனவே இரண்டு ஹாரங்க ளிருப்பதாகத் தெரிகிறது. நிச்சயந்தானா?"

மாமாஜி—"இதென்ன இது. அதெப்படி தங்களுக்குத் தெரியும். இவ்விடத்தில் நடப்பது யாதொன்றும் வெளியில் தெரியப்படாதே, உத்திரவுப்படிக்கு நாங்கள் தங்களுடைய இக்கேள்விக்கும் பதில் கூறுவது ஞாயமில்லையே."

ஆஸ் — "பரவாயில்லை. கேழ்விக்கு உத்தரம் கொடுங்கள்."

மாமாஜி—"ஆனால் தெரிந்த வரையில் சொல்லுவதற்குத் தடையில்லை. நிஸ்ஸாவுக்கு எவ்வளவோ ஆபரணங்க ளிருக்கிறது. ஆகையால் அவள் அவைகளை மாற்றி மாற்றி அணிவது வழக்கம். நாங்கள் அவள் ஹாரம் அணிந்திருக்கும் பொழுது கவனிக்கவில்லை."

கொத்—"சரிதான். நான் கொஞ்சம் ஞாபகப் படுத்தினலாவது சொல்லுவீர்களா?"

மாமாஜி — "எப்படிச் சொல்லுகிறது? கவனிக்கவே யில்லை யென்கிறேனே."

கொத்—(மற்றவளைப் பார்த்து) "நீயாவது சொல்லுவாயோ?"

மாமாஜி—"நானும் கவனிக்க வில்லையே."

கொத்—"நல்லது. இவைகளை உங்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று நானிவ்விடம் வந்தேன். ஆனல் நீங்களோ ஒன்றும் சொல்ல மாட்டோமென்று கர்வத்தினல் பிடிவாதம் பிடிக்கிறீர்கள். சரி."

மாமாஜி — "மன்னிக்க வேண்டும். அப்படியொன்றுமில்லை."

கொத் — "கிடக்கட்டும். நீங்கள் எப்பொழுதும் வெளியே போனதில்லையோ நிஸ்ஸாவை விட்டு?"

மாமாஜி — "எங்களுக்குப் போக இடம் ஏது?"

கொத் — "உங்கள் எஜமானியிட மிருந்து உத்திரவு வாங்கிக் கொண்டு போனதாக அவளே ஒத்துக் கொண்டால்?"

மாமாஜி — "அவள் பொய் சொல்ல மாட்டாள். நாங்கள் எங்கேயாவது வெளியே போகவேண்டு மென்றால் அவளுடைய உத்திரவில்லாமல் போவதே யில்லை."

கொத் — "சரிதான், எங்கே போனீர்கள் இரண்டு நாள் முன்னதாக?"

மாமாஜி — "எங்கே போனோம்? எங்களுக்குத் தெரிந்தவர்கள் யாவருமில்லையே. அப்படி யிருந்தாலும் நாங்கள் மத்தியான வேளையில் வெளியில் போகவே மாட்டோம்."

கொத் — "உங்களுக்குத் தெரிந்தவர்கள் ஒருவருமில்லையா? உரவின்முரையாராகிலுமில்லையோ?"

மாமாஜி — "இல்லை."

கொத் — "ஐயோ பாவம்! சரி. எல்லாம் ஈசுவரன் செயல். நாமென்ன செய்யலாம். ஆனால் நீங்கள் இரவில்தான் வெளியில் போவது வழக்கம்?"

மாமாஜி — "இல்லை. இல்லை. இரவில் குளிர்ந்த காற்று வீசிக்கொண்டும், நிலா அழகாகவும், மனதுக்கு ரம்மியமாகவும் அல்லவோ யிருக்கிறது."

கொத் — "இப்பொழுது கவிதைகள் ஆக வேண்டிய தில்லை. கேட்பதற்கு பதில் கூறுங்கள். எத்தனை நாளுக்கு முன்னதாக வெளியே போனீர்கள்?"

மாமாஜி — "இரண்டு, மூன்று, நான்கு. சரி. நாலுநாளுக்கு முன்பாகத்தான்."

கொத் — "நீங்கள் போனீர்களே, அப்பொழுது நிஸ்ஸா கழுத்தில் ஹாரமணிந்திருந்தாளா?"

இப்படிக் கேட்டவுடனே இருவருடைய முகங்களும் மாறிவிட்டன. ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டார்கள். விழி கலங்கி விட்டது. என்ன செய்வார்கள். இதுவரையில் சமாசாரமே இன்னதென்று அறியாதவர்களா யிருந்தார்கள். இப்பொழுது திருடு வெளியாகி விட்டதென்ற பயம் மேலிட்டு விட்டது. மருண்டு மருண்டு விழிக்கிறார்கள்.

இவர்கள் இப்படி யிருக்கும்பொழுது வாக்குமூலங்களை காகிதத்தில் பதிந்துக் கொண்டிருந்த ஜவான் எழுந்துவந்து "இவைகளே போதுமானவை. இவர்கள் பொய் சொல்வதற்கு அஞ்சவில்லை. இவர்களேதான் அன்றையதினம் குடிவெறியில் தெருவில் விழுந்துக் கிடந்தவர்கள். இவர்களை உடனே நான் டாணாவுக்கு இழுத்துக் கொண்டு போனேன். இப்பொழுது இல்லையென்று மறுக்கிறார்கள்."

கொத் — "அப்படியானல் இதுவரையில் ஏனப்பா சும்மா விருந்தாய்?"

மாமாஜி — "அவனே பொய் சொல்லுகிறான், நம்பாதீர்கள்........"

ஜவான் — "இவர்கள் என்னென்ன பொய் சொல்லுகிறார்கள் என்பதைக் கவனித்தேன். அசாத்தியமாகவிருக்கிறது. இவர்களை போலீசுக்குக் கொண்டு போனதும் மகா யோக்யதை யுடையவர்களென்றும் ஆஸ்மன்ஷா அரண்மனையில் வேலையாயிருப்பதாகவும் தெரிவித்தார்கள். அதன் பேரில்தான் இவர்களை விட்டு விட்டேன். பிறகு ஒரு சக்கர் சுற்றிக் கொண்டு வரும்பொழுது சாராயக் கடைக்காரன் ஜவான்கள் வந்து இரண்டுதரம் இரவு 3 மணிக்கு சாராயபுட்டிகள் வாங்கினதாகவும் இந்த நாலுபேரும் அவைகளைக் குடித்ததாகவும் சொன்னான்."

3990

கொத் — "நீ சொல்லும் இவைகள் இவர்களுடைய திருட்டை ருஜு பண்ணவில்லையே."

கைதி — (பக்கத்தில் நின்றுக்கொண்டு) "நான் ருசு பண்ணுவிக்கிறேன் எனக்கு உத்திரவு கொடுத்தால்."

கொத் — "எப்படி சொல். பார்ப்போம்?"

கைதி — "ஸர்க்கார், நாங்கள் செய்த கொலைக் குற்றத்துக்காக எமதூதாக்கள் கையில் அகப்பட்டுக் கொண்டோம். இனி தப்பிப் பிழைக்க யாதொரு வழியுமில்லை. ஆகையால் கடைசியாகவாவது நிச்சயத்தைச் சொல்லி விடுகிறோம். நாங்கள் இவர்களிருவரும் கொல்லப்பட்ட இரண்டு ஜவான்களோடு குடித்ததையும் பிறகு இவர்கள் கீழே விழுந்து விட்டதையும் மறைவிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தோம். அதற்குப் பிறகு அவர்கள் இவர்களுடைய மடியிலிருந்து சில விலையுயர்ந்த ஆபரணங்களை எடுத்துக் கொண்டு புரப்பட்டார்கள்.

உடனே நாங்களும் பின் தொடர்ந்தோம். கொஞ்ச தூரம் சென்றபிறகு ஒருவன் ஹாரங்களை எடுத்து மற்றவனுக்குக் காண்பித்து தன்னுடைய சந்தோஷத்தை வெளியிட்டான். உடனே நாங்கள் அவர்களின்மேல் பாய்ந்து அவர்களைக் கொன்று, இந்த ஆபரணங்களை எடுத்துக் கொண்டு வந்தோம். இவ்வளவுதான் நடந்த சமாசாரம். ஆகையால் இவர்கள்தான் ஜவான்களுக்கு இவைகளைக் கொண்டுவந்து கொடுத்தது என்கிற வரையில் சந்தேகமேயில்லை!'' என்று சொல்லி முடித்தான்.

எட்டாம் அத்தியாயம்

போலீஸ் உத்தியோகஸ்தராகிய கொத்வால் சாஹெபு ஆஸ்மன்ஷாவைப் பார்த்து பின் வருமாறு சொல்லுகிறார்:—

"ஐயா, இதுவரையில் நாம் வாங்கின வாக்குமூலங்களையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தீர்கள். அவைகளின்படி இந்த இரண்டு ஸ்திரீகளின் மேலும் குற்றம் உண்டென்பது தெரிகிறது. ஆகையால் இவர்களை இப்பொழுது முதலில்கேஸ் விசாரணையாகித் தீர்மானமாகிற வரையில் காவலில் வைக்க வேண்டியதாயிருக்கிறது. இது தங்களுக்குத் தெரியாததல்ல. ஆனாலும் சொல்லி வைத்தேன். சரி, இவர்கள் தவிர இன்னும் யாராவது வேலைக்காரர்களிருக்கிறார்களா?

ஆஸ் — "இன்னும் ஒரு வேலைக்காரப் பெண் தவிர வேறு யாருமில்லை. அந்தப் பெண் வேலைக்கு வந்து ஒரு மாதமாகிறது. ஏனென்றால் அவள் ஒரு மாதத்

திற்கு முன்பு உடம்பு அசௌக்கியமா யிருப்பதாகச் சொல்லி விட்டுத் தன்னுடைய உறவினர் வீட்டுக்குப் போய் இன்னும் வரவில்லை.''

கொத்—''சரி, அவளைப்பற்றி பேசி பயனில்லை. இன்னும் யாராவது தங்களுக்கு வேலைக்காரனில்லையா?''

ஆஸ்—(சுட்டிக் காட்டிக் கொண்டே) ''அதோ நிற்கிறானே அவன்தான். அவன் பெயர் அப்துல்காதர். அவன்தான் என்னுடைய சொந்த வேலைக்காரன்.''

கொத்—''அவனைச் சற்று அழைப்பிக்க வேண்டும்.''

ஆஸ்—''ஆகா, அப்படியே'' என்று சொல்லி விட்டு அவ்விடத்திலிருந்த ஒருவனைப் பார்த்து அவனைக் கூப்பிடும்படி கட்டளை யிட்டார். இந்த ''அப்துல் காதர்'' என்பவன்தான் ஸ்திரீ வேஷம் போட்டுக் கொண்டு ரஹீமன்னிஸ்ஸாவிடம் போய் "ஏதோ சமாசாரம் கொண்டு வந்திருப்பவன் போல நடித்தவன். இவன் இதுவரையில் நடந்த சங்கதிகளை யெல்லாம் பார்த்துக்கொண்டும் கேட்டுக்கொண்டு மிருந்தும் ஒன்றும் தெரியாதவன் போலவும், அவர்கள் ஏதோ பேசிக் கொண்டிருப்பதாகவும், அதைப்பற்றி தான் கவனிக்க யாதோர் காரணமுமில்லை போலவும், பாவித்துக் கொண்டு நின்றுக் கொண்டிருந்தான். அவர்கள் இவன் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டும் காதில் போட்டுக் கொள்ளவில்லை. இப்படியாக கவனியாதவன் போல் நின்றுக் கொண்டிருந்தபொழுது ஒரு சேவகன் எழுந்து இவனிடம் போய் கையைப் பிடித்துப் பரபரவென்று இழுத்துக் கொண்டு வந்து கொத்வாலெதிரில் விட்டான். உடனே,

கொத் —"உன் பெயர் அப்துல் காதர் என்று தெரிகிறது, நிச்சயந்தானா?"

அப் — "ஆம்."

கொத் — "நீ இவ்விடத்திய ஊழியக்காரன்போ லிருக்கிறது?"

அப் — "ஆமாம். எனக்கு உடம்பு கொஞ்சம் சௌக்கியமில்லை. பேசச்சக்தியற்றவனாக இருக்கிறேன். தயவு செய்து என்னை கேள்விகளால் வருத்தாமல் விட்டு விடும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்."

ஆஸ் — "ஆமாமப்படித்தா னிருக்கிறது. மேலும் இவன் அயோக்கியனல்ல. அப்படிப்பட்ட காரியங்களைச் செய்யத் துணிவானென்று எனக்குத் தோன்றவில்லை.........."

கொத் — உஸ், "உங்களுக் கென்ன தெரியும். இவனுடைய முகத்தைப் பாருங்கள். அசல்.........."

ஆஸ் — "ஆனால் தங்களிஷ்டப்படி செய்யுங்கள்."

கொத் — "நீ ஏனப்பா இம்மாதிரி மீசை தாடி முதலியவைகளை யெல்லாம் க்ஷவரம் செய்து விட்டாய்? அப்படிச் செய்வது உன்னுடைய மதவிரோதமல்லவா?"

அப் — "இதற்குக் காரணம் என்னால் சொல்ல முடியாது. ஏனென்றால் என்னமோ அப்படித் தோன்றிற்று. ஆஸ்மன்ஷாவும் உத்திரவு கொடுத்தார். எடுத்து விட்டேன். அவ்வளவுதான்."

கொத்—"அப்படிக்கல்ல. நிச்சயத்தைச் சொல்லு. எனக்குத் தெரியும்."

அப் — "மேலும் என் முகத்தில் சில கட்டிகள் வெடித்திருந்தன."

கொத் — "உம். அப்படிச் சொல்லு. இதை அப்பொழுதே சொல்லி விடுகிறதுதானே. கிடக்கட்டும். நீ சொல்வது எனக்கு நிஜமாகப் புலப்படவில்லை. இன்னுமொரு காரணம் சொல் பார்ப்போம்."

அப் — "நான் என்ன சொல்வேன்?"

கொத் — "ஆனல் சொல்லமாட்டாய்? சரி அப்படியானல் இன்னொரு கேள்வி கேட்கிறேன். உனக்குக் கல்யாணமாகி யிருக்கிறதா?"

அப் — "இல்லை."

கொத் — "சரி போதும், ஹூம்" என்று முடித்தவுடனே ஆஸ்மன்ஷா கொத்வாலைப் பார்த்து "இவர்களைக் காவலில் வைக்கவேண்டுமென்று சொன்னீர்களே. அப்படிச் செய்வதவசியமானல் இவர்களுக்கு இரண்டு நிமிஷம் லீவு கொடுக்க வேண்டும். ஏனென்றல் இவர்கள் நிஸ்ஸாவிடம் போய் சமாசாரத்தைச் சொல்லி உத்திரவு பெற்று வரவேண்டும்."

கொத் — "ஆகா. அப்படியே போய்வரட்டும்."

ஆஸ் — "ஆமாம். இவர்கள் எவ்வளவு நேரம் காவலில் வைக்கப் படுவார்களோ?"

கொத் — "அதை நானெப்படிச் சொல்வது."

ஆஸ் — "நல்லது, நீங்கள் போய் சீக்கிரம் வாருங்கள்" என்று சொன்னவுடனே இருவரும் மனதில் பயத்தோடும், வெளியில் ஆஸ்மன்ஷா நம்மைக் கைவிடமாட்டார் என்னும் தைரியத்தால் சந்தோஷத்தோடும் வேகமாய்ச் சென்றர்கள். இப்படி இவர்கள் போய்க் கொண்டிருக்கும் பொழுது அப்துல் காதர் போலீசாருக்குத் தெரியாமல் ஒரு புரமாய் ஓடிவந்து இவர்களைப்

பார்த்து "பத்திரம், பத்திரம், சாக்கிரதை. சமாசாரத்தை வெளியிடப் போகிறீர்கள். வெளியிட்டீர்களோ குடி கெட்டு விட்டது. பேசும்போது வெகு ஜாக்கிரதையாய்ப் பேசுங்கள்..........."

இருவர் — "எங்களைப் பற்றி நீ கவலைப் படாதே. நீ ஜாக்கிரதையா யிருந்தால் போதும். மற்றவைகளை நாங்கள் பார்த்துக் கொள்ளுகிறோம். வெளியிடவே மாட்டோம். இது ரத்தியம். நாங்கள் வருகிறவரையில் ஐயாவுக்கு ஸகலத்தையும் சொல்வதற்கு முன்னால் சந்தோஷ முண்டாகும்படி செய்துக்கொண்டிரு. நாங்கள் சீக்கிரம் வந்து விடுகிறோம். கவலைப்படாதே. எப்பொழுதும் சந்தோஷமாகவே யிரு. தலையைத் தொங்க விட்டாயானால்..........."

இஃதோடு இவர்கள் பிரிந்து ரஹிமன்னிஸ்ஸாவைப்பார்க்கப்போக அவள் 'நாவல்' ஒன்றை வாசித்துக் கொண்டிருப்பதைப் பார்த்து சற்று நின்று அவளுடன் தங்களுக்கு சற்று நேரம் வெளியே போக வேண்டி யிருப்பதாகவும் ஆஸ்மன்ஷா உத்திரவு வாங்கிக் கொண்டு வரச்சொன்னதாகவும் சொல்லிக் கேட்டுக் கொண்டு வந்து விட்டார்கள்.

இவர்களும் போலீஸ் உத்தியோகஸ்தர்களும் சென்ற உடனே ஆஸ்மன்ஷா அப்துல் காதரைப் பார்த்து ஹுக்காவைத் தயார் செய்துக் கொண்டு வரும்படி சொன்னார். அவனும் அதைத் தாமஸஞ் செய்யாமல் கொண்டு வந்து கொடுக்க அவர் அதைச் சற்று நேரம் பிடித்துவிட்டு அப்படியே உறங்கி விட்டார். அப்துல் காதர் நடந்தவைகளை யெல்லாம் யோசித்து யோசித்து மனம் பொறுதவனாய் சற்றுநேரம் தானும்

மற்ற இரண்டு ஸ்திரீகளும் இறந்து விட்டால் நல்லதென்றும், சற்றுநேரம் நிஸ்ஸா தவிர வேறொருவருக்கும் நகைகள் மாமாஜிக்களிடம் போனது தெரியாததால், அவளால் மற்றவர்களுக்குத் தெரிந்து விடுமே யென்ற பயத்தினால் அவளே போய்விட்டால் நல்லதென்றும் நினைத்துக் கொண்டு, வெகுநேரம் கவலைப் பட்டுக் கடைசியாக ஒரு தீர்மானத்தை யடைந்து அதன்படி நிஸ்ஸாவைக் கொன்று விடுவதாக எண்ணி கடைக்குப் போய் கொஞ்சம் அபினிப் பாஷாணம் வாங்கி வந்தான். கடைக்காரன் இவன் எப்படி உபயோகிப்பானோ என்கிற பயத்தினால் இவனுடைய பெயரையும் இவன் வாங்கின அளவையும் எப்பொழுது வாங்கினானென்பதையும் பதிந்துக் கொண்டு கொடுத்தான். இதை வாங்கிக் கொண்டு தன்னறைக்குள் வந்து ஸ்திரீ வேஷம் போட ஆரம்பித்தவுடனே யாரோ கதவைத் தட்டினார்கள். யாரென்று பார்க்க மாமாஜீக்களாக இருக்கவே என்ன சமாசாரமென்று கேட்க அவர்கள் தாங்கள் போலீஸார் கையில் பட்ட துன்பங்களை யெல்லாம் சொல்லி வருத்தப்பட்டார்கள். ஆனால் இவ்வளவுக்கும் தாங்கள் நிச்சயத்தை வெளிவிடவில்லை என்பதை உறுதியாகக் கூறி அவர்கள் அன்றைய தினம் மருபடி அவ்விடம் வந்து ரஹிமன்னிஸ்ஸாவின் வாக்கு மூலத்தையும் வாங்கிக்கொள்வார்கள் போலிருக்கிறது. அப்படிச் செய்தார்களே யானால் நம் கதி அதோகதிதான். ஏனெனில் அவள் பொய் சொல்ல மாட்டாள். நடந்ததைச் சொல்லி விடுவாள். என்ன செய்கிறது என்று யோசித்தார்கள்.

அப்துல்—"இந்த சந்தேகம் எனக்கு முன்னமே தோன்றியது. நீங்களும் சமயத்தில் தான் வந்தீர்கள். எனக்கு ஒத்தாசை செய்ய வேண்டும். இப்பொழுது

நான் என்னிடம் கொஞ்சம் அபினி வைத்துக்கொண்டிருக்கிறேன். அதை ரஹிமன்னிஸ்ஸாவுக்கு எப்படியாவது கொடுத்து விடவேண்டும். கொடுத்து விட்டால் ஒருவேளை அவளிறந்து விடுவாள். நம் காரியம் ஜெயமாகி விடும்.''

மாமாஜி — ''சரி. அப்படியே செய்யலாம். ஆனல் அதை எப்படிக் கொடுக்கிறது ?''

அப்துல் — ''அதைப்பற்றி யோசிக்க வேண்டியதில்லை. கொஞ்சம் மிட்டாய் வாங்கி அதில் கலந்து அப்ஸல்கான் அனுப்பியதாகச் சொல்லி கொடுத்து விடலாம்.''

மாமாஜி — ''ஆமாம். நல்ல யோசனை.''

அப்துல் — ''நான் ஸ்திரீ வேஷம் போட்டுக் கொள்ளுகிறேன். இதற்குள்ளாக நீங்கள் அவைகளையெல்லாம் ஒன்ருய்க் கலவுங்கள். பிறகு நான் அதை எடுத்துக் கொண்டு போய்ப் பக்குவமாய்க் கொடுத்து விடுகிறேன். ஆகட்டும் சீக்கிரம்.''

மாமாஜி — (பர பரப்புடன்) ''இதோ ஆகிவிட்டது. ஆமாம், அந்த வைரக்கல் புதைத்த ஹாரத்தை என்ன செய்தாய்?''

அப்துல் — நான் மோசஞ் செய்ய மாட்டேன். நிச்சயமாய் அதை விற்று நாம் மூவருமே எடுத்துக் கொள்ளலாம். அதை வாசல் கேட்டுக்கு வலது பக்கத்தில் 2 அடி மண்ணின் கீழ் புதைத்து அதன் பேரில் அடையாளத்துக்காக ஓர் கல் வைத்திருக்கிறேன். அதை ஒருபோதும் உற்றுப் பார்க்காதீர்கள். சாக்கிரதை. பார்த்தாலகப்பட்டுக் கொள்வீர்கள்.

ஒன்பதாம் அத்தியாயம்.

மாமாஜீக்களாகிய இருவரும் அப்துல் காதராகிய ஆப்ஸல்கானின் வேலைக்காரியும் ரஹிமன்னிஸ்ஸாவின் அந்தப்புரம் வந்தவுடனே அவள் வெகு சந்தோஷத்தோடு அவர்களை வரவழைத்து அவர்களுடைய கதைகளைக் கேட்டு முதலில் மாமாஜீக்கள் அவர்கள் சொன்னபடி அனுவசியமாய் போலீஸார் கையிலகப்பட்டுக் கொண்டதற்காக மனவருத்தப்பட்டு பிறகு அப்துல் காதராகிய வேலைக் காரியைப் பார்த்து அவளுடைய இரண்டாவது வருகைக்காக சந்தோஷப்பட்டு இந்த சமயம் அவள் முதல் தடவையைவிட அதிகமான க்ஷேம சமாசாரமும், சந்தோஷத்தைத்தரத்தக்கதும், கொண்டு வந்திருப்பதாகவு மெண்ணுவதாகச் சொன்னாள். அதற்கவன் அப்படியே தான் நல்ல சமாசாரத்தோடு வந்திருப்பதாகத் தெரிவித்து பின் வருமாறு சொல்லலுற்றான்.

“எஜமானியே! நான் நாலு நாட்களாக உன்னுடைய பிரியநாயகனாகிய ஆப்ஸல்கானுடன் இருந்தேன். அவர் உன்னை லங்கர் பண்டிகையன்று பார்த்தது முதல் நீ எவ்விதமாக அவர் மீது காதல் கொண்டிருக்கின்றனேயோ அவ்விதமாகவே உன் மீது காதல் மிகுதியாலொன்றுந் தோன்றாது தவித்துக்கொண்டிருக்கிறார். இப்பொழுது அவருனக்குக் கொஞ்சம் மிட்டாய் கொடுத்தனுப்பி அதை தயவுசெய்து அங்கீகரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளச் சொன்னார்: அவர் அப்படிச் சொல்வது அனுவசியமாயிருந்தபோதிலும் காதல் முதிர்ச்சியால் அப்படிச் சொன்னாரென்று

நான் ஒன்றும் பேசாமலதை எடுத்துக் கொண்டு வந்தேன்'' என்று சொன்ன வுடனே ரஹிமன்னிஸ்ஸா, "அப்படியா, கொடுத்தனுப்பினாரா, என்ன மனது! என்ன காருண்யம்! எளியேன் என்மீதில் அவருக்குண்டான அன்பை யானென்னென்று சொல்லட்டும். இப்படிப்பட்ட அன்பை அவருக்கு உண்டாக்கின ஓ! அல்லா! இவ்வளவும் செய்துவிட்டு எங்களிருவரையும் ஒன்றாகக் கொண்டு சேர்க்காமல் விடமாட்டாய் என்று மனப்பூர்வமாய் நான் நம்புகிறேன்!'' என்று சொல்லிக் கொண்டே அந்தத் தட்டை யருகிலிழுத்து அதிலிருந்தனவற்றை யெல்லாம் புசித்து விட்டாள். அவைகளின் சுவை நன்றாக விருந்தனவோ என்பது சந்தேகந்தான். இருப்பினும் அன்பினால் கொடுக்கப்பட்டதாதலால் அவை சுவையுள்ளனவாகவே தோன்றின. சற்று நேரம் சென்றதும் உள்ளே போன அபினி தன்னுடைய வேலையை யாரம்பிக்கத் துடங்கிற்று. சிறிது மயக்கமானாள். ஒருவாறு சாய்ந்தாள். ஒரு அரைமணி நாழிகை யாவதற்குள் மூச்சுப் பேச்சில்லாமல் வாயிலிருந்து நுரைதள்ள கீழே விழுந்து விட்டாள்.

இதைக்கண்ட இரண்டு மாமாஜீக்களும் நடுநடுங்கினவர்களாய் உளரிக் கொண்டு கதர வாரம்பித்தார்கள். அப்துல் காதர் என்ன செய்வான். கொலையோ முடிந்து விட்டது. அவர்களும் இதுவரையில் ஒத்துக் கொண்டார்கள். இப்பொழுது அவன் காலில் விழுந்து "அடே கொலைபாதகா! நாசகாலா! கொன்று விட்டாயே! எங்களருமைக் கண்மணியைக் கொன்று விட்டாயே!'' என்று கூச்சலிட்டழ வாரம்பிக்கவே அவனுக்குக் கோபமதிகரித்து "ஏ, பிசாசங்களே! மறுபேச்சு பேசாதீர்கள்.

வாயைத் திரந்தால் இதோ பாருங்கள்........'' என்று சொல்லிக் கொண்டே உரையிலிருந்து ஓர் உடைவாளை உருவினன். ''நான்தானு கொலைபாதகன். நீங்களு மென்னுடன் சேரவில்லையா? அந்தக் குற்றமுங்களையும் சாரவில்லையா? அப்படியிருக்க உளருகிறீர்களென்ன? சாக்ரதை! எப்படியும் செய்து விட்டோம். இனி தப்பித்துக் கொண்டோடிப் போவதைப் பார்ப்போம். புரப்படுங்கள். இனித் தாமதம் வேண்டாம்'' என்று சொல்ல ஒரு மாமாஜி கொஞ்ச மிளமனதுடையவளாகையாலும், மேலும் இவள் அவளை அவளுடைய அழகுக்கும் புத்திக்கும் அன்புக்கும் வியந்து தெய்வத்தைப் போல வணங்கினவளாகையாலும் பொருக்க முடியாத துயரப்பட்டு, ''இனி நாங்களுன்னைப் பார்க்கப் போகிறதில்லை. இதுதான் கடைசி வந்தனம்.'' என்று சொல்லிவிட்டு அவளுடைய அழகிய பாபமே செய்தறியாத இளங்கையை யெடுத்துத் தன் கண்களி லொத்திக் கொண்டு கடைசியாக ஒருதரம் முத்த மிட்டுப் பிரிந்து விட்டார்கள். அப்துல்காதர் அவர்களை சமாசாரத்தை வெளியிட்டார்களென்று தெரிந்தால் வாளுக்கு இரையாக வேண்டுமென்று பய முருத்திவிட்டு ஓடிவிட்டான். மற்ற இருவரும் நேராக ஆஸ்மன்ஷாவிடம் போய்த் தாங்கள் போலீசாரிட மிருந்து வந்த செய்தியை யறிவித்தார்கள். அவரும் இவர்களைப் பார்த்து சந்தோஷமடைந்து ஒன்றும் பயமில்லை என்று வாக்குக் கொடுத்து இந்த விஷயமாக இவர்கள் போலீசாரிடத்தில் வெகுவாகக் கஷ்டப்படும்படி நேர்ந்ததால் கூடிய சீக்கிரத்தி லிவர்களுக்குச் சம்பளத்தை உயர்த்துவதாகவுஞ் சொன்னர். பிறகு அங்கிருந்த ஓர் வேலைக்காரனைப்பார்த்து அப்துல்காதரைப் போயழைத்து வரும்

படி சொல்ல அவன் போய் அப்துல்காதர் வயிற்றுவலியால் அவஸ்த்தைப் பட்டுக்கொண்டிருப்பதாகவும் அன்றையதினம் வேலைக்கு வர சாத்தியமில்லையாகையால் மன்னிக்க வேணும் என்கிற சமாசாரத்தோடு திரும்பி வந்துவிட்டான். இதைக்கேட்டதும் ஆஸ்மன்ஷா அந்தப்புரம் போய் தன் குமாரத்தியைப் பார்க்க வேண்டுமென்று புரப்பட்டார். கிழவிகளிருவரும் குற்றவாளிகளாகையால் அவ்விடம் போகாமலங்கேயே நின்று விட்டார்கள். அவரங்கே போனதும் கதவைத்தட்டி,

"குழந்தாய்! நான்தான் உன் தகப்பனர். உள்ளே வரலாமா?" என்று கேட்டான்.

பதிலில்லை.

"நான்தான் உன் தகப்பனர், என் கண்மணி, உன்னைப் பார்க்க வந்திருக்கிறேன். உள்ளே வரலாமா?"

இதற்கும் பதிலில்லை.

மறுபடி கூப்பிட்டார். பயனில்லை.

ஆகவே சந்தேகப்பட்டு ஆஸ்மன்ஷா கதவைத்திரந்துக் கொண்டுள்ளே நுழைந்தார். ரஹிமன்னிஸ்ஸா ஸோபாவின்மேல் படுத்த வண்ணமிருக்கவே அவர் தூங்குகிருளென்று நினைத்துக் கொண்டார். அருகில் போனதும் கண்கள் திரந்திருப்பதைக் கண்டார். வாயின் வழியாய் நுரைதள்ளி யிருந்தது. "என்ன நிஸ்ஸா! உடம்பென்ன? தூங்கக்கூட வில்லையே. கண்ணைத் திரந்துக் கொண்டு படுத்துக் கொண்டிருக்கிருய். ஆனாலும் பேசமாட்டேனென்கிருயே! உடம்பென்ன தான் சொல்லேன்."

பதிலில்லை.

"என்னுடன் பேசக்கூடாதா? நான் உன் தகப்பனாரில்லையா?"

இன்னும் பதிலில்லை.

"ஓ, தெய்வமே! தெய்வமே! ஒன்றும் தோன்றவில்லையே!" என்று பலமுறை கதறினார். அவ்விடம் வந்த ஓர் வேலைக்காரப் பெண் உள்ளே நுழைந்து, "என்ன ஐயா! என்ன ஐயா!" என்று கேட்டாள்.

"ஐயோ, நான் என்ன சொல்லப் போகிறேன். சீக்கிரம்போய் மிஸ். கர்க்பாட்ரிக் துரைசானியையழைத்துக் கொண்டு வரமாட்டாயா? என் குழந்தை மூச்சுப் பேச்சில்லாமல் கிடக்கிறாளே! என்னமோ தெரியவில்லையே."

"ஓ, அல்லா! ஓ, அல்லா! என்னழகிய சிறிய எஜமானிக்கு உயிர்ப்பிச்சை கொடுக்க மாட்டாயா? நாங்கள் அவளை அவளுடைய அழகுக்கும் புத்திக்கும் நேசித்ததுபோல் நீயும் நேசித்திருக்கிறாயோ? ஆ! என்ன வுலகம். நல்லவர்களுக்கு யிவ்விடத்திலிடமில்லைபோலும்" என்று கூச்சலிட்டுக் கொண்டேயோடினாள்.

பத்தாம் அத்தியாயம்

ஆஸ்மன்ஷாவின் உத்திரவுப்படி புரப்பட்ட வேலைக்காரப் பெண் தெருக்களின் வழியாய் தலை யவிழ்ந்ததும் தெரியாமல் உடல் குலுங்க பெரு மூச்சு விட்டுக் கொண்டே ஓடினதைப் பார்த்து ஜனங்கள் "என்ன, என்ன" வென்று கேட்டும் சிலர் அவளுடன் சற்று தூரம் ஓடியும் அவள் ஒருவருக்கும் பதில் கூறுமல் நேராக வயித்தியத்தில் வல்லவளாகிய மிஸ். கர்க் பாட்ரிக் துரைசானி வீட்டுக்குட் பிரவேசித்து யாதொன்றும் தோன்ருதவளாய் அவளெதிரில் சென்று ஆஸ்மன்ஷாவின் குமாரத்திக்கு ஏதோ அபாயமாயிருப்பதாகவும் அந்த க்ஷணமே ஆஸ்மன்ஷா அவளை யழைத்துக் கொண்டு வரும்படி சொன்னு ரென்றும் சொல்ல அவள் ஒரு நிமிஷங்கூட தாமதியாமல் உடனே வண்டியை வரவழைத்து இரண்டொரு நிமிஷத்திற்குள் ஆஸ்மன்ஷா வரண்மனை வந்து சேர்ந்தாள். ஆஸ்மன்ஷா ரஹிமன்னிஸ்ஸாவின் பக்கத்தில் முகவாட்டத்தோடு ஒன்றும் சொல்லத் தோன்ருதவராய் உட்கார்ந்திருக்க கர்க் பாட்ரிக் ரஹிமன்னிஸ்ஸாவின் உடம்பைப் பரிசோதித்து ஸர்க்காரைப் பார்த்து, "என்ன நடந்திருக்கிறது தெரியுமா?" என்று கேட்டாள்.

என்ன?

யாரோ விஷம் கலந்து கொடுத்து விட்டார்கள் போலிருக்கிறது.

விஷமா? ஓ, அல்லா! அப்படியா?

ஆம். நன்ருகத் தெரிகிறது.

இதைக் கேட்ட வுடனே ஆஸ்மன்ஷா பயித்தியம் பிடித்தவர் போலெழுந்திருந்து அங்கு மிங்கும் ஓடி கடைசியாக ஒரரைக்குட் பிரவேசித்து "ஐயோ, என் குழந்தை யிறந்து விட்டனளே" என்றுறக்கக் கூச்சலிட்டுக் கொண்டே கதவை மூடிக் கொண்டார். இதைக் கேட்டுக் கொண்டிருந்த ஜனங்களோடி வந்து ஒருவருக் கொருவர் தங்கள் தங்களுக்குத் தோன்றினபடி பேசிக் கொண்டார்கள். அனேகம் ஸ்திரீகள் மாரிலடித்துக் கொண்டு கதரிக் கொண்டே ரஹிமன்னிஸ்ஸாவி னரைக்குட் போக யத்தனித்தார்கள். ஆனல் மிஸ் கர்க் பாட்ரிக்கின் உத்திரவின்படி யாரும் உள்ளே விடப்படவில்லை. இரண்டு மாமாஜிக்கள் மாத்திரம் உள்ளேயே வருத்தப்பட்டுக் கொண்டு காவலாக விருந்தார்கள். அவர்கள் செய்தது குற்றமே. ஆனு லவர்கள் தங்கள் பேதைமையினுல் "பெண்புத்தி பின் புத்தி" என்னும் வாக்கியத்தின்படி தெரியாமல் செய்து விட்டாலு மிப்பொழுது சொல்ல முடியாத துயரத்துள் ளாழ்ந்து என்ன செய்தால் பிழைப்பாளோ வென்று எப்படிப்பட்ட காரியமானுலும் செய்யச் சித்தமா யிருந்தார்கள். மிஸ் கர்க் பாட்ரிக் துரைசானி தன்னுடைய வயித்திய வல்லமையை இவ்விடத்தில் காண்பிக்கும் பொருட்டும் மேலும் ரஹிமன்னிஸ்ஸாவினிடம் அவ ளுக்குண்டான அன்பினுலும் உடனே வயித்தியசாலைக் குச் சென்று தன் வேலைக்கு வேண்டிய ஆயுதங்களையும், மற்றச் சாமான்களையு மெடுத்துக்கொண்டோடி வந் தாள். இதுவரையில் இரண்டு மாமாஜிக்களும் துரைசா னியி னுத்திரவுப்பிரகாரம் ரஹிமன்னிஸ்ஸாவின் காதில் "கூ" வென்று இரைந்துக்கொண்டிருந்தார்கள். அவள் வந்ததும் நிஸ்ஸாவைத் தூக்கி உட்கார வைத்தும், மறு

படி படுக்க வைத்தும், ஒருசமயம் பக்கவாட்டாகவும் மற்றொரு சமயம் முதுகிலுமாக வைத்து ஏதேதோ மருந்துகளை உள்ளே புகும்படி செய்து நிஸ்ஸாவி னுடம்பை சலத்தினாலும் மருந்துகளினாலும் சுத்திசெய்ய சற்று நேரம் சென்றதும் கொஞ்சம் மூச்சு வர வாரம் பித்தது. இன்னும் சற்றுநேரம் கழிந்ததும் தலையைத் தூக்க வாரம்பித்தாள். உடனே மாமாஜிக்க ளவளைப் பார்த்து "நிஸ்ஸா! நாங்கள் யார் தெரிகிறதா?" என்று கேட்க அவள் பெருமூச்சு விட்டுக்கொண்டே "ஓ, மாமாஜி!" என்று மெதுவாக பதில் சொன்னாள்.

போதும், இப்பொழுது அவளைத் தொந்தரவு செய்ய வேண்டாம், விட்டுவிடுங்கள். கதவைச் சாக்கி ரதையாகத் தாளிட்டு வைத்திருக்கவேண்டும். யாரும் உள்ளே வரக்கூடாது. மேல் ஜன்னல்கள் திரந்திருக்கட் டும். ஆஸ்மன்ஷாவுக்கு சமாச்சாரம் இப்பொழுது தெரிவிக்கவேண்டாம். இப்பொழுது தெரிவித்தால் சந் தோஷத்தால் பைத்தியம் பிடித்துவிடும். சற்று நேரம் பொருக்கட்டும்; என்று கர்க் பாட்ரிக் சொல்ல,

இதற்குள் வெளியில் யாரோ "மாமாஜி, மாமாஜி" என்று கூப்பிடவே இருவரும் போய்ப் பார்க்க மிஸ்கர்க் பாட்ரிக்கின் வீட்டுக்கு ஓடின வேலைக்காரப் பெண்ணோடி வந்து "என்ன சமாச்சார" மென்று கேட்டவுடனே அவளுக்கு நல்ல செய்தியை யறிவித்து அவளை உள்ளே வரக்கூடாதென்று தடுத்துவிட்டு ஆஸ்மன்ஷாவுக்கு "இனி யாதொரு பயமுமில்லை" யென்று தெரிவிக்கும் படி சொல்லி அவர்கூட இரண்டுநாள் வரையில் உள்ளே வரக்கூடா தென்பதையும் தெரிவிக்கும்படி சொன்னார்கள். அந்தப் பெண் போனவுடனே மாமாஜிக்

கள் இருவரும் துரைசானியும் சற்றுநேரம் பேச வாரம்பித்தார்கள்.

இவளுக்கு அபினிப் பாஷாணம் கொடுத்தவர் யாரென்பது உங்களுக்குத் தெரிந்திருக்கலாம்?

எங்களுக்கா? எங்களுக் கெப்படித் தெரியும். மாஜினம் இவ்விடம் வரக் காரணமில்லையே முதல் முதல்.

எப்படியோ வந்திருக்கிறது. அதைத்தானறியவேண்டும். இருக்கட்டும் இன்னொரு சமாச்சாரம். நீங்களாவது அல்லது மற்ற யாராவது ரஹிமன்னிஸ்ஸாவுடன் விஷங் கலந்த சமாச்சாரம் தெரிவிக்கவே கூடாது. இது தான் முக்கியம். சாக்கிரதை. ஏனென்ருல், அப்படித் தெரிவித்தால் அவள் எப்பொழுதும் எல்லாவற்றின் மீதும் சந்தேகப்படுவாள். மனம் ஒருவாறு நிர்மலமாயிராது. ஆகையால் எப்பொழுதும் தெரிவிக்கவே கூடாது.

ஆகா, அப்படியே. ஒருவேளை எலிகள் கொண்டு வந்திருக்கக் கூடும். இவ்விடத்தில் அநேகமான எலிகள் வாசஞ்செய்கின்றன.

ப்பூ! என்ன யுக்தி! நன்ருயிருக்கிறது! ஆனல் வரக்காரண மில்லையே?

ஆப்ஸல்கான் அப்துல்காதர் மூலமாய் மிட்டாய் கொடுத்தனுப்பியதை ஏன் தெரிவிக்கக்கூடாது நம்முடைய துரைசானிக்கு? என்று மற்ருெருத்தி ஞாபகமில்லாமல் கூறிவிட,

சரி, எனக்குத் தெரியும். உன்னை யாரிப்பொழுது கூப்பிட்டது. இடையிலேன் பேசுகிருய் கேட்கும்பொ

ழுது பதில் சொல்லாமல். தூர கிட; என்று கோபத்துடன் சொன்னாள்.

'ஆப்ஸல்கான்' என்கிற சப்தம் தன் காதில் பட்டவுடனே மிஸ் கர்க் பாட்ரிக் "சற்று இரு, அவள் சொல்வதைக் கேழ்ப்போம். ஆப்ஸல்கானா? எவனவன்?

அவனா? அவன்தான் மீர் ஆலிகானுடைய குமாரன். அவனைத் தெரியுமோ தங்களுக்கு?

தெரியுமாவா? ஒரு வாரமாய் அவன்காயலாவாயிருக்கிறான். நான்தானே மருந்து கொடுக்கிறேன். கிடக்கட்டும். அவன் உங்களுக்கு எப்படித் தெரியும்? அதுவுங் கிடக்கட்டும். இப்பொழுது அப்துல்காதர் மூலமாய் மிட்டாய் அனுப்பினானென்றாயே அந்த அப்துல் காதர் யார்?

அவன்தான் ஆஸ்மன்ஷாவின் சொந்த வேலைக்காரன்.

இவர்களிப்படிப் பேச வாரம்பிக்கவே பெரியவளாகிய மாமாஜி எழுந்து தனக்கு உடம்பு ஏதோ அசௌக்கியமா யிருப்பதாயும், தலை வலி பொறுக்க முடியாமலு மிருப்பதால் வெளியே போய் சற்றுநேரம் படுத்திருக்கவேண்டு மென்று சொல்லிவிட்டுப் போய் விட்டாள்.

பதினொன்றும் அத்தியாயம்.

மிஸ் கர்க் பாட்ரிக், மாமாஜியுடன் முன்னத்தியாயத்தில் ஆரம்பித்த சம்பாஷணையைப் பின்வருமாறு நடத்திக்கொண்டு போகிருள்.

நீ ஏதாவது பொய் சொல்லி என்னை ஏமாற்றுவையோ? அப்படிச் செய்யமாட்டாயென்றே நம்புகிறேன்.

நானிதுவரையில் அம்மாதிரி பொய் சொல்லியே யறியேனே.

ஆமாம். தெரிகிறது. கிடக்கட்டும், இப்பொழுது உன்னுடைய சம்பளத்தை யுயர்த்தவாவது அல்லது உன்னை இவ்விடத்தை விட்டு ஓட்டிவிடவாவது, ஏதானுலுஞ் சரி, என்னுல் கூடும். தெரியுமா?

அதற்கென்ன சந்தேகமா.

நல்லது. இப்பொழுது அப்துல் காதர் ஆப்ஸல் கானிடமிருந்து மிட்டாய் கொண்டு வந்ததாகத் தெரிவித்தாயே. அவர்களிருவருக்கு மெப்படி பரிச்சியம்?

அதெப்படியோ தெரியாதே.

ஆமாம் அவன் கொடுத்தனுப்பினவைகளை நீங்கள் தின்று பார்த்தீர்களா?

அப்படிச் செய்யவேண்டியது எங்கள் வேலையாயிருந்தாலும் இந்தச் சமயமப்படிச் செய்யவில்லை. சந்தேகப்பட யிடமில்லை யென்று விட்டுவிட்டோம்.

நல்லது அவனெப்பொழுது அனுப்பினுன்?

இன்று உதயம். அதைத் தின்றதும் ரஹிமன்னிஸ்ஸா இம்மாதிரி யானுள்.

ஆமாம். ஆப்ஸல்கான் ரஹிமன்னிஸ்ஸாவுக்கு மிட்டாய் கொடுத் தனுப்பினனே, அவனெப்பொழுது இவளைக் கண்டான்?

அது ஒரு பெரிய கதை. அதைச் சொல்வதென் றால் நிஸ்ஸாவின் ரகஸியத்தை யெல்லாம் வெளிவிட வேண்டியதாக விருக்கிறது.

பாதகமில்லை. பிறகு அவளே என்னிடம் சொல்லி விடுவாள். ஆனலிப் பொழுதே நானறிய வேண்டும். என்று சொன்னவுடனே மாமாஜி தங்களுடைய குற்றங் களை மாத்திரம் வெளிவிடாமல் மற்ற சமாசாரங்களை யெல்லாம் விவரமாய்ச் சொல்லிவிட்டாள்.

பிறகு மிஸ் கர்க் பாட்ரிக் — நிச்சயமாக ரஹிமன் னிஸ்ஸா அவனை நேசிப்பதுபோல அவனும் அவளை நேசிக்கிறனா?

அப்படித் தான் நம்புகிறோம்.

இந்த சமாசாரம் ஆஸ்மன்ஷாவுக்குத் தெரியுமா?

தெரியாது. தயவு செய்து தாங்களும் அவருக்குத் தெரியப்படுத்தக் கூடாது. ஏனென்றால் எங்கள் மூல மாய் இவர்க ளிருவருக்கும் சிநேக முண்டாயிற் றென்று தெரிந்தால் அவருக்குக் கோபமுண்டாகும். அப்பொழுது எங்களுக்குத் தான் கெடுதி விளையும்.

இதைச் சிநேகமென்று சொல்லுகிறாய்? நல்லது. முதலில் லங்கர் பண்டிகை யன்று ஒருவரை யொருவர் பார்த்தார்களே. பிறகு அப்படிப்பட்ட சமயம் எப் பொழுதாவது வாய்த்ததா?

அதெப்படி வாய்க்கும்! இதென்ன தெரியாத்தன மாயிருக்கிறதே! அவள் அவனுடைய படத்தை வைத்

துக்கொண்டு எப்பொழுதும் அதையே பார்த்துப் பார்த்து மனமேங்கி இருவருமொன்ருய்ச் சேரவேண்டுமென்று கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டிருக்கிருள்.

என்ன! அவனுடைய படமா! ஆ! அது எப்படி கிடைத்தது?

அப்துல் காதர் கொண்டுவந்தான்.

அப்துல் காதரா? திருட்டுப்பயல். கிடக்கட்டும் நீ........ஆப்ஸல்கானே அந்தப் படத்தை நேராகக் கொடுத்தனுப்பினு னென்பதை சத்தியமாகச் சொல்லுவையா?

அதைப்பற்றிச் சொல்ல என்ஞல் முடியாது. அப்துல்காதர் கொண்டுவந்தா னென்கிற வரையில் தெரியும்.

நீ பொய் சொல்லுகிருய்!

என்ன அப்படிச் சொல்லுகிறீர்களே! நான் எப்பொழுதும் பொய் சொன்னதே யில்லை. என்பதை முன்னமே தெரிவித்தேனே. என்னைப் பற்றி கெட்ட அபிப்பிராயமேன்? தங்களுக்கு வேணுமாஞலும் அந்தப் படத்தைக் கொண்டு வந்து காண்பிக்கிறேன்.

கொண்டு காண்பிப்பையா, ஆஞல் காண்பி பார்ப்போம். என்று சொன்ன வுடனே எழுந்து போய் ரஹிமன்னிஸ்ஸாவின் தலையணையின் கீழிருந்த படத்தையெடுத்துக் காண்பித்தாள்.

மிஸ்கர்க் பாட்ரிக் இதைப் பார்த்த வுடனே ஆச்சரிய மடைந்து பின் வருமாறு யோசிக்கலுற்ருள் :—

இப்பொழுது இந்தப் படத்தை நாமே வைத்துக் கொள்ளலாமா அல்லது திருப்பிக் கொடுத்து விடலாமா. இதுவரையில் நாம் ஆப்ஸல்கானை எவ்வளவோ யோக்கியனென்றும் சிநேக பாத்திரனென்றும் நினைத்துக் கொண்டிருந்தோம். இப்பொழுதோ அவன் வேலைக்காரர் மூலமாய் இவ்வளவுவேலை செய்திருக்கிறான். ஆமாம். தன்னுடைய படத்தையும் கொடுத்தனுப்பினானே. ஆகையாலவன் இவளை நேசித்தே யிருக்கவேண்டும். அப்படியானால் விஷம்வைப்பானேன். இதை மத்தியில் யாராவது தான் செய்திருக்கவேண்டும். ஒருவேளை இவனே வேறு ஏதாவது காரணங்களுக்காக படத்தைக் கொடுத்தனுப்பி யிருக்கலாமோ? என்னமோ மோசம்தெரியவில்லை பார்ப்போம். என்று நினைத்துக் கொண்டே படத்தைக் கொடுத்து விட்டு ஒன்றும் தோன்றாதவளாய் ரஹிமன்னிஸ்ஸாவுக்கு சிகிச்சையும் செய்யாமல் எழுந்து நிஸ்ஸாவினருகில் போய் நன்றாகப் பார்த்துவிட்டு மாமாஜியுடன் ஜாக்கிரதையாக இராமுழுவதும் தூங்காமல் அடிக்கடி நிஸ்ஸாவிடம் போய்ப் பார்த்துக்கொண்டிருக்கும்படி சொல்லி தான் மறுநாள் காலையில் வருவதாகத் தெரிவித்துவிட்டு சரேலென்று வெளியில் போய் விட்டாள். உடனே மாமாஜியும் வெளியில்வர மற்றொருத்தியும் அப்துல் காதருடைய அரையிலிருந்து வெளியில் புரப்பட இருவரும் ஒருங்கு சேர்ந்து பேசவாரம்பித்தார்கள்.

என்னடி, ஒரு நிமிஷத்தில் மிஸ் கர்க் பாட்ரிக்கோடு சிநேகம் பண்ணி விட்டாயே. அவளைவிட்டுவர மனம் துணிந்ததா?

அவளிப்பொழுதுதான் வெளியே போனாள். இனி யாதொரு பயமு மில்லையாம் ரஹிமன்னிஸ்ஸாவைப்

பற்றி. நாளை காலையில் வருவதாகச் சொல்லிவிட்டுப் போனாள். அது வரையில் நாம் ஜாக்கிரதையாக யிருக்கவேண்டும். அடிக்கடி காப்பித் தண்ணீரும் தேயிலைத் தண்ணீரும் கொடுக்கச் சொன்னாள்.

சரி, சந்தோஷம். ஆமாம், உன்னைக் கண்டால் எனக்காவது அப்துல்காதருக்காவது கொஞ்சமேனும் பிடிக்கவில்லை.

ஏனப்படி, நான் என்ன செய்தேன்?

என்ன செய்தாயா? ஆப்ஸல்கானைப் பற்றியும் மிட்டாயைப் பற்றியு மவளுடன் சொல்லி விட்டாயே. நாங்கள் எவ்வளவு தூரம் சொல்லிவைத்தோம். கேட்டாயா? கடைசியாக உன் புத்தியைத் தானே காண்பித்து விட்டாய்.

அதிலென்ன தப்பு. ஒன்றுந் தெரியவில்லையே. மாஜினம் அந்தப்புரத்துக்கு வந்த விதத்தைக் கண்டு பிடிப்பதாகச் சொல்லிப் போனாள். இன்னும்...........

நீயும் கொஞ்சமேனும் புத்தியில்லாமல் எல்லாவற்றையுஞ் சொல்லிவிட்டாய். நீ ஏன் நடந்த கதையெல்லாம் சொன்னாய்?

நானெதோ சொன்னேன்?

எல்லாம் தெரியும். கேட்டுக்கொண்டுதானிருந்தேன், மறைக்காதே.

ஆமாம் சொன்னால்தானென்ன, உன்னுடைய பெயரை வெளியிடவில்லையே.

என்னுடைய பெயரை வெளிபிடாவிட்டால்? அப்துல்காதரைப்பற்றி ஏன் சொன்னாய்? சரி, அவனுன்னை

வரச் சொன்னான். அவனைப் போய் பார். இனி என்னுடன் பேசாதே. நான் அந்தப்புரம் போகிறேன், நீ போ என்று சொல்லிவிட்டுப் போய்விட்டாள். மற்றவளும் அப்துல்காதர் அறைக்குப் போனாள். இரவோ மந்தாரமாயும் இருட்டாயு மிருந்தது. இவள் அப்துல் காதர் அறைக்குட் பிரவேசித்தவுடனே அவன் திடீரென்று எழுந்திருந்து இவள்மீது பாய்ந்து கழுத்தைப் பிடித்துக்கொண்டான்.

என்ன, அப்துல் காதர் பயித்தியம் பிடித்துவிட்டதாயென்ன, இம்மாதிரி யெல்லாம் செய்கிறாயே?

(கோபத்தோடு) எனக்கா பயித்தியம். இது போதுமா உனக்கு (பல்லை நரநர வென்று கடித்துக்கொண்டு) உன்னை.......................

என்ன என் மீது அவ்வளவு கோபம்?

கோபமா? (கழுத்தை விட்டு விட்டு) சொல்லுகிறேன். என்னுடன் கூட வா.

கோபத்தை விட்டு விடு.

விட்டு விட்டேன். சற்று நேரமப்படி பேசிக்கொண்டே போவோம் வா. சில சமாசாரங்கள் சொல்ல வேண்டும்.

அப்படியே வருகிறேன். இதற்கு இவ்வளவு கோபமென்னத்துக்கு? இது வரையில் நான் வந்ததில்லையா? சரி தான். போவோம் வா.

இருவரும் புரப்பட்டார்கள். இரவோ அமாவாசை கருக்கலா யிருக்கிறது.

அப்துல் காதர் முகமோ கோபதாபத்தினால் நிமிஷத்துக்கு நிமிஷம் சிவந்துக் கொண்டே யிருக்கிறது. மீசை துடிக்கிறது. பேச்சோ படபட வென்று கோபக் குறியோடு பயங்கரமாக வெளிவருகிறது. அவைகளை யெல்லாம் இச்சமயம் அவன் தன்னாலானமட்டு மடக்குகிறான். தனக்கும் மிஞ்சிப் போகிறது. மாமாஜிக்கு அவனுடைய கோபத்தை எப்படியாவது தணிக்க வேண்டு மென்ற எண்ண மதிகரித்து அவனென்ன சொன்னாலும் அதைக் காட்டிக் கொள்ளாம லிருந்தாள். பிறகு அவனும் கொஞ்சம் முகத்தில் சந்தோஷக் குறியை யடைந்ததுபோ லபினயித்தான். இவளுக்கும் தைரிய முண்டாயிற்று. இருவரு மிப்படியாக ஏதேதோ சமாசாரங்களை யெல்லாம் பேசிக்கொண்டே போனார்கள். திடீரென்று அப்துல் காதர் ஓரிடத்தில் நின்று தனக்கு தாகமா யிருப்பதாகத் தெரிவித்தான். அவள் அவ்விடத்தி லோர் கிணறிருப்பதாகச் சொல்லி அவ்விடத்துக்கழைத்துக் கொண்டு போனாள். போனதும் அவன் தன்னுடைய பலத்தை யெல்லாம் கூட்டிக் கொண்டு இவளை இமை கொட்டு நேரத்திற்குள் தூக்கி கிணற்றுக்குள் எறிந்து விட்டான். இவள் கோவென்று கதறிக்கொண்டே முழுகி முழுகிக் கிளம்பினாள். அப்துல் காதர் தன்னுடைய வேலை நிறைவேறி விட்டதென்று திரும்பி விட்டான்.

பன்னிரண்டாம் அத்தியாயம்

இந்த அத்தியாயத்தில் நாமிதுவரையில் வயித்தியத்தில் மிகவும் தேர்ச்சியடைந்தவளென்று பேசிக்கொண்டிருந்த மிஸ் கர்க் பாட்ரிக்கினுடைய விருத்தாந்தங்களைக் கவனிப்போம். இவள் பூரணசந்திரனைப்போன்ற அவ்வளவு ஒளிவோடுங் கூடிய அழகிய முகமும், மற்ற ஆங்கில ஸ்திரீகளைப்போலல்லாமல் கருமேகம் போன்ற கூந்தலும், செந்தாமரையைப் பழிக்கக்கூடிய கைகளுமாகிய யிவைகளோடுங் கூடிய இருபத்திநாலு வயதுள்ள யௌவன ஸ்திரீ. இவளுடைய தகப்பனார் இங்கிலாந்தில் கர்னலுத்தியோகம் வகித்திருந்தார். அவருக்கு இவள் ஒரே குமாரத்தி. இவள் பதினெட்டு வயதாவதற்குள்ளாக வயித்திய சாஸ்திரத்தை முழுதும் கற்று பாண்டித்தியமுடையவளானாள். பிறகு இவளுடைய தாய் தந்தையர் இவளை தங்களோடுகூடவாவது அல்லது இவளுடைய அத்தையாகிய லேடி பீட்ரிஸ் பாய்லி என்பவளோடுகூடவாவது இருக்கும்படி சொன்னார்கள். ஆனால் இவளதற்கெல்லா மிஷ்டப்படவில்லை. தான் இந்தியாவுக்குப்போ யவ்விடத்தில் தன்னுடைய சாமர்த்தியங்களைக் காட்டிக்கொண்டு கொஞ்சகாலமிருக்க வேண்டுமென்ற ஒரே யெண்ணம் இவள் மனதில் குடிகொண்டது. சீக்கிரத்தில் தன் தாய் தகப்பனருக்கு ஒரு கடிதம் எழுதிவிட்டுப் புரப்பட்டு விட்டாள். ஆனாலிவள் தன்னோடுகூட கொஞ்சகாலம் வசித்திருந்த அந்தையாகிய லேடி பீட்ரிஸ் பாய்லிக்கு ஒரு கடிதங்கூட எழுதவில்லை. ஏனென்றுலோ அவளுக்கும் லேடி பீட்ரிஸ் பாய்லிக்கும் அவ்வளவு பிடிப்பில்லையென்று தெரிகிறது. அவள் கர்க் பாட்ரிக்குக்கு யாதொரு நன்மையுஞ் செய்ததா

கத் தெரியவில்லை. அவளுடைய செய்கைகள் இன்னும் போகப்போகத் தெரியும்.

மிஸ் கர்க் பாட்ரிக் இந்தியாவுச்கு வந்ததும் தான் கஷ்டப்படாமல் ஒரு காசாவது சம்பாதிப்பதில்லை என்றும் தனக்கு ஒருவருடைய சிபார்சும், தாக்ஷிண்யமும் வேண்டியதில்லை யென்றும் பிடிவாதமாய் ஒருவருடனும் சேராமல் தனியாகவே யிருந்துக்கொண்டு கவுரவமாய்க் காலத்தைக் கழித்து வந்தாள். ஆனால் அவளுடைய வயித்தியப் பயிர்ச்சி ஜனங்களுக்குத் தெரியாமல் போய் விட்டதா? இல்லை. மிஸ் கர்க் பாட்ரிக்கென்றால் சகலருக்குந் தெரியும். இவள் பெண்பிள்ளை யானதினாலே பெண்களுக்கு மாத்திரம் வயித்தியம் செய்தாளென்று நம்பவேண்டாம். ஆண் பெண் இருவகையாரிடத்தும் தன்னுடைய வல்லமையைக் காண்பித்தாள். நம் கதாநாயகனாகிய ஆப்ஸல்கானும், இன்னு மனேகரும் இவளைவிட கெட்டிக்காரர்க ளிருப்பினும் அவர்களை யெல்லாம் விட்டு, இவளையே தங்களுக்கு வேண்டியபோது கூப்பிடச் சொல்லுவது வழக்கம். இதன் காரணத்தைப் பலரும் பலவிதமாகச் சொல்லுவார்கள். ஆனாலவர்களுடைய அபிப்பிராயங்களெல்லாம் பிசகு என்பது சீக்கிரத்தில் தானே தெரியவரும்.

மிஸ் கர்க் பாட்ரிக் ஆஸ்மன்ஷா அரண்மனையை விட்டவுடனே நேராக ஆப்ஸல்கான் வீட்டுக்கு இரவு 10 மணிக்கு வந்து சேர்ந்தாள். இந்த சமயம் ஆப்ஸல்கான் ஏதோ புஸ்தகத்தை வைத்துக்கொண்டு தன் கவனத்தை யெல்லா மதிற் செலுத்தி வாசித்துக்கொண்டிருந்தான். இவளைக் கண்டவுடனே புஸ்தகத்தை வைத்துவிட்டு எழுந்திருந்து வந்தனங்களைச் செய்து உட்காரச் சொல்ல இவள் நின்றுக்கொண்டே யிருந்தாள்.

என்ன சமாசாரம்? இதுவரையி லிந்த மாதிரி இரவு பத்து மணிக்கு வந்ததில்லையே. இப்பொழுது முகம் வாட்டமடைந்திருக்கக் காரணமென்ன?

ஆப்ஸல்கான்! உனக்கென்ன மனச்சாட்சி, தெய்வ மென்பவை யில்லையோ?

என்ன யிது, இம் மாதிரி கேள்விக்குக் காரண மென்ன? திடீரென்று இம்மாதிரி கேட்கும்படி என்ன நேரிட்டது?

ஆப்ஸல்கான்! நானிப்பொழுது உனக்கு மெனக் கும் பின் வரப் போகும் சமாசாரத்தை வெளியிடும்படி வந்தேன்.

ஆனல் சந்தோஷம், உனக்கென்ன செய்யவேண் டுமானலுஞ் செய்யச் சித்தமா யிருக்கிறேன்.

ஆப்ஸல்கானே சந்தோஷமாகவும் விளையாட்டா கவு மிருக்கிறன். மிஸ்கர்க் பாட்ரிக்கோ மனச் சஞ்சல மடைந்தவளாயும் முகவாட்டத்தோடு கூடினவளாயு மிருக்கிறள். இவளுக்கோ ஒன்றும் தோன்றவில்லை. முகத்தைப் பார்த்தால் கோபத்தால் பயங்கரமா யிருக் கிறது.

எட்ஞ! உனக்கென்ன நேரிட்டது. இதுவரையில் நீ யிம்மாதிரி யிருந்ததில்லையே. இப்பொழுது கையைக் கூட மேலே படக்கூடாதென்று எடுத்து விடுகிறயே. என்ன நான் எதாவது உன் விஷயமாகத் தப்பு செய் தேனே?

தப்பு செய்தாயா? வெகு நன்ரு யிருக்கிறது உன் செய்கைகள். கிடக்கட்டும், உனக்கு ரஹிமன்னிஸ்ஸா தெரியுமா, ஆஸ்மன்ஷாவின் குமாரத்தி?

ஆமாம் தெரியும். அதற்கென்ன ?

எப்படித் தெரியும் ?

இதென்ன வேடிக்கையாக விருக்கிறதே. அவளைப் பற்றி சகலமும் அவள் தகப்பனார் என்னுடன் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

அவர் உன்னுடன் சொல்லக் கேட்டிருக்கிருயா ? அவருனக்கெப்படித் தெரியும். அப்படிக்குத் தெரிந்திருந்தாலு மிவைகளை யெல்லா முன்னுடன் சொல்ல அவ்வளவு சினேக முங்களுக்குண்டோ ?

அவரும் என் தகப்பனாரும் எப்பொழுதும் பிரியாத சினேகர்கள். அவர் மூலமாய் எனக்குத் தெரியும்.

ஆனாலிதுவரையி லிந்த சமாசாரத்தை நீ என்னுடன் தெரிவித்ததில்லையே.

இல்லை. காரணமேதாவ திருந்தாலன்றோ தெரிவிக்கவேண்டும். மேலும் நான் உன்னுடன் கூட விருக்கும்போது என் மனது வேறொன்றிலும் செல்வதில்லை.

கிடக்கட்டும். ரஹிமன்னிஸ்ஸாவின் சௌக்கியத்தைப்பற்றி உனக்கேதாவது தெரியுமா ?

(ஆச்சரியத்தோடு) ஒன்றும் தெரியாதே. என்ன உடம்பு ?

நிஜமாகவா கேட்கிருய் ?

ஆமாம் நிச்சயமாக !

அவளுக்கு யாரோ விஷம் வைத்து விட்டதாகத் தெரிகிறது.

விஷமா ! ஆச்சரியமாகவன்றோ விருக்கிறது. அப்படியானால் ஆஸ்மன்ஷா சும்மா விருக்கமட்டாரே.

இதைத் தெரிவிப்பதற்காகத் தான் வந்தாயோ? எத்தனை நாழிகை தான் நிற்பாய், உட்காரேன்.

மிஸ் கர்க் பாட்ரிக் உட்கார்ந்து ஆப்ஸல்கானுடைய முகத்தையு மவனுடைய செய்கைகளையும் கவனித்துக் கொண்டே, ஆனாலவளுக்கினி பயமில்லை. நாளைய தினம் சாதாரணமாக எழுந்து விடுவாள் என்றாள்.

சந்தோஷம். இஃதெல்லாம் எப்படி நேர்ந்ததாகத் தெரிகிறது. யார் விஷம் வைத்தது தெரிகிறதா?

யாரோ அவளை விரும்பினவர்கள் கொஞ்சம் மிட்டாய் கொடுத்தனுப்பினார்களாம். அதில் மாஜினம் கலந்திருந்தது.

அப்படியா. இதேமாதிரி யனேக தடவை அனேக விடங்களில் நடந்திருக்கிறது...........

இன்னும் உனக்கு யாதொன்றும் புலப்படவில்லையா?

சத்தியமாகச் சொல்லுகிறேன் ஒன்றும் ஏற்படவில்லை. இதைப்பற்றி பிறகு பேசிக்கொள்ளலாம். கேட்கக் கர்ண கடூரமாக விருக்கிறது. ஆனால் நீ இவ்விடம் வந்தபொழுது உன் முகத்தைப் பார்த்தா லுனக்குத் தான் ஏதாவது நடந்துவிட்டதென்று மயங்கும்படியாக விருந்தது. இப்பொழுது அப்படி யொன்றுமில்லை யென்று தெரிகிறது. சந்தோஷம். ரஹிமன்னிஸ்ஸாவும் என்ன அபாயத்திலிருந்தாலும் பிழைத்துவிட்டாளாகையால் அதுவே போதும். நாளையதினம் நான் ஆஸ்மன்ஷாவைப் பார்க்கும்பொழுது அவரைக் கேட்கிறேன். அவரிடத்தி லுன்னுடைய திறமையைப்பற்றி கூடப் பேசவேண்டும். இப்பொழுது ஒரு முத்தம் கொடு,

என்று சொல்லிக்கொண்டே யருகில்போக அவள் கோபத்தோடு கொஞ்சம் தூரமாகப் போய் கண்கள் சிவக்கப் பயங்கரமாகப் பார்த்தாள்.

எட்னு! இதென்ன யிது. இந்த மாதிரி ஒருபோது மிருந்ததில்லையே. இப்பொழு தென்ன நேரிட்டது இம் மாதிரி யிருப்பதற்கு?

என்னவா? சமாசாரத்தைச் சொல்லுகிறேன் கேள். நானும் நீயும் பிரைட்டன் பட்டணத்திலிருந்த பொழுது என்னுடைய அத்தையாகிய பீட்ரிஸ் பாய்ஷி என்பவளும் இன்னுமனேகரும் நம்மிருவருக்கு முண் டான ப்ரீதியைக் கவனிப்பது வழக்கமல்லவா? ஞாபக மிருக்கிறதா? அப்பொழுது நான் புத்தியறியாத சிறு பெண்ணுயிருந்தும் எனக்கு உன்மீதுண்டான அன்பின் அளவு எவ்வளவு தெரியுமோ? இதைப்பற்றி என்னு டைய அத்தை இரண்டொரு சமயங்களில் என்னைக் கண்டித்து மிருக்கிறுள். அப்படி யிருந்தும் நானதைக் கவனியாமல் உன்னுடனேயே பேசிக்கொண்டும் விளை யாடிக்கொண்டு மல்லவோ யிருந்தேன். வெகுநாள் வரைக்கு மிப்படியாக யிருந்து கடைசியாக நாமிருவ ரும் கலியாணம் பண்ணிக்கொள்வதாகத் தீர்மானிக்க வில்லையா? நீ என்னை இதைப்பற்றி கேட்டபொழுது இன்னும் கொஞ்சகாலம் பொரு. நான் பரீக்ஷைக்குப் படித்து முடித்தபிறகு பண்ணிக்கொள்ளலாமென்றல் லவோ சொன்னேன். அப்பொழுது நீ என்னை யொரு போதுங் கைவிடமாட்டேனென்று சொல்லவில்லையா? நானிவ்விடம் வந்தபிறகு கூட அதைப்பற்றி ஒருதரம் கேட்டபொழுது நீ ஏதோ விரத மனுஷ்டிப்பதாயும் இரண்டு மாதம் கழியட்டுமென்று மல்லவோ சொன் ஞய். இன்னும் நாம்......

பொரு. ஒரு நிமிஷம், ஒரு நிமிஷம். ஆமாம் இவைக ளெல்லாமெதற்கு?

இதோ சொல்லுகிறேன். நானிதுவரையி லுன் னேயே நம்பி யிருந்தே னென்பதைப்பற்றிச் சந்தேக முண்டோ?

கிடையவே கிடையாது.

நிச்சயந்தானு? ஆனுல் நீ மாத்திரம் என்னே ஏமாற் றலாமா?

ஏமாற்றுவதா? நானு ஏமாற்றினேன்? இல்லவே யில்லேயே. திருஷ்டாந்தம் வேண்டுமானுலுங் காண்பிக் கிறேன்.

எப்படி?

முத்தங்களினுல். என்று சொல்லிக் கொண்டே மோவாய்க்கட்டையைப் பிடிக்க அவள், 'ஆப்ஸன் கான், நீ எனக்கு முத்தங் கொடுப்பதாவது என்ன வென்று நினேத்தாய்? நீ என் கையைக்கூடத் தொடப்ப டாது. தூரயிரு. எத்தனே நாளேக்குத் தான் உன்னுடைய மோசம் வெளி வராமலிருக்கும் பார்ப்போம்.'

என்ன, மிஸ். கர்க் பாட்ரிக், பயித்தியம் பிடித்து விட்டதா?

எனக்கா பயித்தியம்? உனக்கல்லவோ பயித்தியம் பிடித்துவிட்டது. மோசத்திலன்ருே மனதைச் செலுத்தி விட்டாய்?

இம்மாதிரிக்கெல்லாம் சொல்லுவது நன்ருகயில்லே. நீ என்னுட னிதுவரையி லிருந்ததுபோலிருக்கமாட் டாயோ?

இருக்க முடியாது. நானிப்போதுதான் உன்னுடைய செயல்களைப்பற்றிக் கேட்டேன்......

கேட்டதைத் தான் சொல்லேன்.

சொல்லுகிறேன் கேள். நீ ரஹிமன்னிஸ்ஸாவைக் கலியாணம் பண்ணிக்கொள்ளப் போகிறதாகக் கேள்விப் பட்டேன்......

எனக் கதைப்பற்றி ஒன்றுந் தெரியாதே. நானம் மாதிரி கேழ்விப்படக் கூடயில்லையே. உனக்கு யார் சொன்னது?

ஆப்ஸல்கான், நானுன்னை யிப்பொழுது பொய்யனென்று கூப்பிட என்ன தடையிருக்கிறது. முதலில் மாஜீனத்தைப்பற்றி உனக்கொன்றும் தெரியாதென்று சொன்னாய். அது நிச்சயமாக விருக்கலாம். இதைப் பற்றி யொன்றும் தெரியாதென்கிறாயே. இது பொய் யல்லவா?

எட்ணா, எனக்குக் கோபத்தை மூட்டுகிறாய். இனி யந்தமாதிரி பேசாதே.

ஆப்ஸல்கான், நீ என்னை என்னசெய்யக் கூடும்? தொடமுடியுமா? நான் தனியாக யிருக்கிறேனென்று நினையாதே. இதோ பார். என்று உறையிலிருந்து ஓர் கத்தியை வீசினாள்.

மிஸ். கர்க் பாட்ரிக், போதும், போதும். இனி நானுன்னுடன் பேச சாத்தியப்படாது. இன்றையதினமிதோடிருக்கட்டும். போகலாம்.

சரிதான். நான் போகிறேன். நீ வழிகாட்ட வேண்டாம். என்று சொல்லிவிட்டுப் போய்விட்டாள்.

அவள் போனபிறகு ஆப்ஸல்கான் தனியாக உட்கார்ந்துக்கொண்டு தன்னுடைய விருத்தாந்தங்களையெல்லாம் யோசனை பண்ணினான். இவன்தான் அவளுடைய இந்தியாவுக்கு வருகையின் காரணம். இவனுடைய அழகுதானவளுடைய மனதைக் கவர்ந்தது. இவன் லண்டனிலிருந்தபோது அவளைத் தான் மணம்புரிவதாயும் வாக்குக் கொடுத்தான். இப்பொழுது தானிந்தியாவுக்கு வந்துவிட்டதால் தன்னுடைய மதத்தைவிட்டு ஆங்கிலேய மதத்தைச் சேர்ந்து மிஸ். கர்க் பாட்ரிக்கை மணம்புரிவதாவது உசிதமாகப் புலப்படவில்லை. மேலுமிவன் தன் தேசத்துக்கு வந்தபிறகு இரண்டு வருஷகாலம் அவளைப்பற்றி யொன்றும் கேள்விப்படவில்லை. அவளும் ஒன்றும் கடிதமெழுதாம லிருந்துவிடவே இவன் அவளை முற்றிலும் மறந்துவிட்டான். பிறகு அவளிவ்விடம் வந்து சேர்ந்தாள். இவனுக்கவளைக் கலியாணம் பண்ணிக்கொள்ள யிஷ்டமில்லையாதலால் காலதாமதஞ் செய்துக்கொண்டு வந்தான். ஆகையால் அவள் இவன்மீது குற்றஞ்சாட்டினது சரியே. என்பவைகளையெல்லாம் ஞாபகப்படுத்திக்கொண்டே சற்றுநேர மிருந்துவிட்டு பிறகு அல்லாவைப் பிரார்த்தித்துக்கொண்டே படுத்துத் தூங்கிவிட்டான்.

பதின்மூன்றும் அத்தியாயம்.

மிஸ். கர்க் பாட்ரிக் என்னசெய்வாள் பாவம்! ஆப்ஸல்கானிடத்தில் எவ்வளவோ நம்பிக்கை வைத்து தன் தேசமென்றும் தாய் தகப்பன் உரவின் முறையாரென்றும் பாராமல் இவ்வளவு தூரம் வந்து, வந்த பிறகும் தன்னெண்ணம் நிறைவேறும், நிறைவேறுமென்று நம்பி,

யிருந்து கடைசியாக இவ்வளவு நாட்கள் கழித்து மோசம் போனே மென்று தெரிந்துக் கொண்ட அவளுடைய மனது எப்படி யிருக்கும்! நம்பின பொருளை யிழந்தவர் கள் என்ன வானார்கள். தங்கள் மனம் தங்களுக்கு ஸ்வாதீன மில்லாமலும், பயித்தியம் பிடித்தும், அப்படிப் பயித்தியமே பிடிக்கா விட்டாலும் உலகத்திலுள்ள சகல சுகபோகங்களையு மனுபவியாமல் இழந்தவர்களாக வல்லவோ வானார்கள். இவை யிப்படி யிருக்க மிஸ். கர்க் பாட்ரிக்கின் மனம் எப்படி துடித்திருக்கு மென்பதை இதைப் படிக்கும் அறிஞர்கள் நீங்களே யறிந்து கொள் ளக் கூடும். இவள் தன் வீட்டுக்குப் போனதும் கட்டி லின்மீ துட்கார்ந்தது தான் தெரியும். மறுபடி மறு நாட்காலையில் எழுந்திருந்து ஏழு மணியாவதற்குள்ளாக ஆஸ்மன்ஷாவின் அரண்மனை வந்து சேர்ந்தாள். உள்ளே நுழைந்ததும் ஆஸ்மன்ஷா முகமலர்ச்சியோடு எழுந் திருந்து “மிஸ். கர்க் பாட்ரிக்! உனக்கு அனேக வந்த னம். என்னுடைய குமாரத்திக்கு உயிர்ப்பிச்சை தந்த தற்காக நான் என்னதான் செய்யப் போகிறேன். எனக் கொன்றும் தோன்றவில்லையே” என்று ஆனந்தக் கண் ணீர் பெருக்கினார்.

மிஸ். கர்க் பாட்ரிக் — ஆனால் தாங்களின்னும் அவளைப் பார்க்கவில்லைபோ லிருக்கிறது?

ஆஸ்மன்ஷா — இல்லை. யாரும் உள்ளே போகக் கூடாதென்று உத்திரவு கொடுத்திருப்பதாகத் தெரி வித்தார்கள். ஆகையினால் நான் போக வில்லை. மேலும்

....

மிஸ். கர்க் பாட்ரிக் — அது தான் சரி. போகாம லிருந்ததே நல்லது. நடந்த சமாசாரத்தை யாராவது ரஹீமாவுக்குத் தெரிவித் திருப்பார்களா?

ஆஸ்மன்ஷா — இல்லை போல்தா னிருக்கிறது. அவளுடைய தாதிகளில் ஒருத்தி நேற்றைய தினம் ஏதோ ஒரு மாதிரியாக வெளியில் போனாள். அவ ளின்னு மிதுவரையில் காணோம்.

மிஸ். கர்க் பாட்ரிக் — யாரைச் சொல்லுகிறீர்? பெரியவளா அல்லது சிறியவளா?

ஆஸ்மன்ஷா — சிறியவள் தான்போ லிருக்கிறது. அப்துல் காதர் நேற்று சுமார் பத்து பதினொரு மணிக்கு அவள் தன்னுடைய அரையின் வழியாய்ப் போன தாகத் தெரிவித்தான். இன்னொருத்தி அந்தப்புரத்தி லிருக்கிறாள்.

மிஸ். கர்க் பாட்ரிக் — சரி இருக்கட்டும், நேரமாய் விட்டது. நான் போய் நிஸ்ஸாவைப் பார்க்க வேண்டும்.

ஆஸ்மன்ஷா — ஆனால் போகலாம். மருபடி வீட் டுக்குப் போகும்போது என்னைப் பார்த்து விட்டுப் போக முடியுமானால் நல்லது. சில சமாசாரம் பேச வேண்டும். நான் ரஹிமாவை எப்பொழுது காணலாம்?

மிஸ். கர்க் பாட்ரிக் — இன்னு மிரண்டு மூன்று நாள் செல்லட்டுமே நல்லது தான். ஏனென்றால் அவ ளுடைய தேகஸ்திதி ....

ஆஸ்மன்ஷா — ஆமாம் ஆமாம், சரிதான்.

மிஸ். கர்க் பாட்ரிக் — நான் போய் வருகிறேன். எட்னகர்க் பாட்ரிக் கந்தப்புரஞ் சென்ற பொழுது ரஹிமா எழுந்து உட்கார்ந்து தன் தாதியுடன் பேசிக் கொண்டிருக்கவே அவளுடைய தேகஸ்திதி எவ்வளவோ குணத்தை யடைந்திருக்கிற தென்று தெரிந்துக் கொண்

டாள். உள்ளே நுழைந்ததும் அவளுக்கொரு முத்தந் தந்து விட்டு "ரஹிமா! திடீரென்று என்னை இவ்விடத்தில் காண நீ யாச்சரியப்படலாம். ஆமாம், வெகு நாளாயிற்று."

ரஹிமா — மிக்க சந்தோஷம். எப்பொழுதும் தங்களைக் கண்டாலே எனக்கோர்வித ஆனந்த முண்டாகிறது வழக்கம். இன்றைய தினம் நாமிருவரும் ஒன்ருக தேயிலைத் தண்ணீர் குடிக்க வேண்டும். (வெளியில் பார்த்துக் கொண்டே) இவ்விடத்தில் யாராவது வேலைக்காரர்க ளிருக்கிருர்களா?

மிஸ். கர்க் பாட்ரிக் — அதைப்பற்றி என்ன, ஆகட்டுமே. நேற்று நீ எப்படி யிருந்தா யென்பது தெரியுமா உனக்கு?

ரஹிமா — ஆமாம். நேற்றைய தினம் கொஞ்சம் மிட்டாய் சாப்பிட்டேன். உடனே உடம்பு ஒரு மாதிரியாயிருக்கவே அப்படியே தூங்கி விட்டேன். பிறகு என்ன நடந்தது?

மிஸ். கர்க் பாட்ரிக் — நேற்று முழுதும் நான் உன்னுடன் கூடத்தா னிருந்தேன்.

ரஹிமா — அப்படியா! என்ன சமாச்சாரம்?

மிஸ். கர்க் பாட்ரிக் — நேற்று நீ பிரக்ஞையற்றல்லவோ கிடந்தாய். ஆகையால்தான் நானுன்னுடன் கூட விருக்கும்படி நேறிட்டது.

ரஹிமா — உண்மையாகவா?

மிஸ். கர்க் பாட்ரிக் — ஆமாம். நான் வராவிட்டால் என்ன நேரிடுமோ?

ரஹிமா — ஆகா! எல்லாம் கடவுளின் செய்கை. கடவுள் நல்லவர்களுக்கு நல்லவரே. இந்த உலகமோ மகாகெட்டது. துஷ்டர்களாலேயே யடைபட் டிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். கடவுளை யடைவதே பேரானந்தம்.

மிஸ். கர்க் பாட்ரிக் — ஆமாம் அதற்கென்ன சந்தேகம். (ஆப்ஸல்கானை நினைத்துக் கொண்டே) உலகம் முழுதும் துஷ்டர்தான். துஷ்டரிடத்தில் சகவாசஞ் செய்யும்பொழுது துஷ்டத்தனமாகவேதான் நடக்க வேண்டும். உலகத்தில் தருமமென்பதே கிடையாது. ஆகையினால்தான் எல்லாவற்றையும் மறந்துவிட்டு பணம் பறிக்கும் வழியையே பார்த்துக் கொண்டிருக்கிறேன். நாம் உலகத்திலிருக்கும் வரையில் அதன்படி நடத்தல் வேண்டாமோ?

ரஹிமா — வேண்டாம். அப்படிச் சொல்லாதீர். கடவுள் ஒருவரிருக்கிறார். அவரன்றி ஓரணுவும் அசையாது. ஆகையால் அவரைப் பிரார்த்தித்துக் கொண்டு எப்பொழுதும் பிறருக்கு நன்மைகளையே செய்தல் வேண்டும். கடவுளை மரத்தலாகாது. தருமத்தையும் விடுத்தல் கூடாது.

மிஸ். கர்க் பாட்ரிக் — உனக்கென்ன தெரியும்? உலகப் பழக்கமில்லை. குழந்தையாகவே யிருக்கிறாய். உலகத்தின் வழியை யறிந்தால் நீ யப்படிச் சொல்ல மாட்டாய். தெய்வமென்ன. தேவாதிகளென்ன. இவைகளை யெல்லாம் நான் விட்டுவிட்டேன்.

ரஹிமா — அம்மா! தாங்கள் சொல்வதைக் கேட்க கஷ்டமா யிருக்கிறது. மேலும் சில சமயங்களில் நான் யாதொரு தீமைகளைச் செய்யாதிருக்கும்போதும் மனம்

ஒருவாறு ஏக்கமடைகின்றது. என்ன காரணமோ? நான் ஒரு பொருளை நம்பியிருக்கிறேன். அதைத் தவிர வேறொன்றின்மீதும் என் மனஞ் செல்வதில்லை..........."

மிஸ். கர்க் பாட்ரிக் — என்ன பொருளது? எனக்குத் தெரிந்தால் என்னாலாகும் உதவிகளைப் புரிவேன்.

ரஹிமா — அதுவா? மனிதரா லாகக்கூடியதா அது?

மிஸ். கர்க் பாட்ரிக் — என்ன அப்படி நினைக்கிறாய். நான் வயித்தியசாஸ்திரத்தில் மாத்திரம் பயின்றவளல்ல. மனோ சாஸ்திரத்திலும் பயிற்சியுண்டு. உன் மனதிலிருப்பதை வேணுமென்றால் இப்பொழுதே யறிவேன். நீ யாரையோ விரும்பியிருக்கிறாய் யாரோ ஒரு புருடன் மீது காதல் கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

ரஹிமா — ஆமாம். நிச்சயமாகவே நான் ஆப்ஸல்கான் மீது காதல் கொண்டேன். அவனை யடைந்தால் சரி. இல்லாவிடில் பிராணனை விடச் சித்தமா யிருக்கிறேன். எப்பொழுதும் அவரையே நேராகப் பாராவிட்டாலும் அவருடைய படத்தையாவது பார்த்துக் கொண்டிருக்கிறேன். என்று தலையணையின் கீழிருந்த படத்தை எடுத்துக் கொடுத்தாள்.

மிஸ். கர்க் பாட்ரிக் — ஆமாம், நீயவனை விரும்புவது வாஸ்தவந்தான். என்னைக் கேட்டால் நான் வேண்டாமென்றுதான் சொல்லுவேன்.

நிஸ்ஸா — அம்மம்மா! அது முடியவே முடியாது.

மிஸ். கர்க் பாட்ரிக் — கிடக்கட்டும். அவன் உனக்கு படத்தோடு கூட சில சமாசார மனுப்பினானே அதென்ன?

நிஸ்ஸா — "நானுன்னை மனப் பூர்வமாய் அடைய விரும்புகிறேன். கிழக்கிலுதிக்கும் சூரியன் மேர்க்கிலுதித்த போதிலும் நானதை விடேன்" என்பதுதான்.

மிஸ். கர்க் பாட்ரிக் — ஆனல் சரி. நானென்ருல் கூடியமட்டும் பார்க்கிறேன். (உடனே ரஹீமா கதவின் பக்கமாகத் திரும்பிக்கொண்டு திரந்த கண்ணை மூடாமல் விழித்துக் கொண்டு பேசாம லிருந்தாள்.)

மிஸ். கர்க் பாட்ரிக் — நிஸ்ஸா! என்ன! என்ன பார்க்கிருய். என்ன! பயப்படாதே.

நிஸ்ஸா — அதோ பார். சிவப்புடை தரித்துக் கொண்டு அந்த உருவம் என்னை நோக்கி வருகின்றதே. என்று சொல்லிக் கொண்டே மிஸ். கர்க் பாட்ரிக் பக்கமாகச் சாய்ந்தாள்.

மிஸ். கர்க் பாட்ரிக் — அவ்விடத்திலென்ன யிருக்கிறது. ஒன்றையுங் காணேமே.

நிஸ்ஸா — (கண்ணைத் திரந்து பார்த்து) ஐயோ! அதோ வருகின்றதே என்று சொல்லி மெல்லிய குரலுடன் மூர்ச்சை யானுள். சற்று நேரஞ் சென்ற பிறகு கொஞ்சம் மூர்ச்சை தெளிந்து, "நான் ஆப்ஸல்கானைப் பாராவிடில் பிராணனை யிழப்பது நிச்சயம். மிஸ். கர்க் பாட்ரிக் என்ன சொன்னுலுஞ் சரி" என்று மெதுவாகச் சொன்னுள்.

இதற்குள் மாமாஜியானவள் "நிஸ்ஸா, நிஸ்ஸா, என்னைக் காப்பாற்று, என்னைக் காப்பாற்று" என்று கதரிக் கொண்டே தலைவிரி கோலத்துடன் ஓடிவந்தாள்.

பதினுன்காம் அத்தியாயம்.

மிஸ். கர்க் பாட்ரிக் ரஹீமா சொன்னவைகளைக் கேட்டு அடக்கமுடியாத ஆச்சரியத்துடன் சற்றுநேர மிருந்து யோசித்துப் பிறகு ஆஸ்மன்ஷாவி னிருப்பிடஞ் சென்ருள். அவ்விடத்தில் அப்துல்காதரும், ஆஸ்மன்ஷாவு மாகப் பேசிக்கொண்டிருக்க அப்துல்காதர் துரைசானி யைக் கண்டவுடன் ஒதுங்கி வெளியில் வந்துவிட்டான். இதையறிந்த ஆஸ்மன்ஷா துரைசானியை வரவழைத்து ஓராஸனத்திலிருத்தி ரஹீமாவின் சமாசாரத்தைப் பற்றி கேட்டார். அதற்கவள் மாஜீனத்தால் அவளைக் கொல்ல முயன்றது நிச்சயமென்றும், அப்படிக் கொல்ல முயன் றவர் இன்னரென்று கண்டுபிடிப்ப தவசியமாயிருப்ப தாகவும் சொல்லி பிறகு ரஹீமாவும் கடவுள் கிருபை யால் தப்பிப் பிழைத்தாளென்றுஞ் சொன்னுள். உடனே ஆஸ்மன்ஷா ஆனல் நானிப்பொழுது போய் என் கண் மணியைக் காணலாமோ? என்று கேட்க.

மிஸ். கர்க் பாட்ரிக் — ஆகா. அப்படியே போய்ப் பார்க்கலாம். ஆனலவளுக்கு மாத்திரம் நடந்தவைக ளைத் தெரிவித்தல் கூடாது. அப்படித் தெரிவித்தால் அவளுக்கு அது தீமையைப் பயக்குமன்றி யாதொரு நன்மையையும் விளைக்காது.

ஆஸ்மன்ஷா — சரிதான். அப்படியே யாகட்டும். இந்த கேஸைக் கண்டுபிடிக்க என்ன செய்யலாமென்று தோன்றுகிறது?

மிஸ். கர்க் பாட்ரிக்—அதைப்பற்றி நீங்கள் கவலைப் படவேண்டாம். நானே கண்டுபிடிக்கிறேன். இரண்டு

மாமாஜீக்களை மாத்திரம் என்னுடன்கூட அனுப்புங்கள். அவர்களைக் கொண்டுதான் இதைக் கண்டுபிடிக்கவேண்டி யிருக்கிறது. ஆகையினால் அவர்களை விசாரித்துக் கொண்டு சீக்கிரத்திலேயே யனுப்பி விடுகிறேன்.

அப்துல்காதர் — அம்மா, ஒரு சமாசாரம். அந்த இருவரில் ஒருத்திதா னிவ்விடத்தி லிருக்கிருள். மற்ற வள் நேற்று இராத்திரிமுதல் இதுவரையிலுங் காணேம்.

மிஸ். கர்க் பாட்ரிக்—நான் யாரும் உள்ளே போகக் கூடாதென்றேனே என்று வீட்டுக்குப் போயிருப்பாளா?

அப்துல்காதர் — அப்படியிராது. ஏனென்றல் இவர்களிருவரும் ரஹிமா அல்லது எஜமான் உத்திரவில் லாமல் வெளியே போகமாட்டார்கள். என்னமோ தெரியவில்லை.

ஆஸ்மன்ஷா — சரி. மற்றவளைக் கேட்டால் தெரி கிறது. அப்துல்காதர், நீபோய் அவளை யழைத்துக் கொண்டுவா.

உடனே அப்துல்காதர் ஒடி தாதியை யழைத்துக் கொண்டுவந்து சேர்ந்தான். மிஸ். கர்க் பாட்ரிக் மாமாஜி யையும் அப்துல்காதரையும் அழைத்துக்கொண்டு தன் வீடு சென்ருள்.

மிஸ். கர்க் பாட்ரிக்—நானுங்களை யிவ்விடம் அழைத் துக்கொண்டு வந்த காரணம் தெரியுமா?

மாமாஜி — என்னமோ?

மிஸ். கர்க் பாட்ரிக் — சில விஷயங்கள் கேழ்க்க வேண்டியிருக்கிறது. அதற்காகத்தான் ஆஸ்மன்ஷா வும் உத்திரவு கொடுத்திருக்கிருர். ஆகையினல் கேட்

கிறவரையில் உண்மையைத் தெரிவிக்கவேண்டும். ஆப்ஸல்கானைப்பற்றி உங்களுக் கென்ன தெரியும்?

மாமாஜி — ஆஸ்மன்ஷாவின் அரண்மனையைச் சேர்ந்தவரைத் தவிர மற்றவர்களைப்பற்றி எங்களுக் கென்ன தெரியப்போகிறது? ஆகையினால் கேழ்க்க வேண்டியதே யில்லை.

மிஸ். கர்க் பாட்ரிக் — கிடக்கட்டும். ரஹிமாவைக் கொல்ல முயன்றார்களே. யார் தெரியுமா அல்லது எதனால்?

மாமாஜி — கொல்ல முயன்றார்களா!

மிஸ். கர்க் பாட்ரிக் — யாராவது அவளுக்கு மிட்டாய் கொடுத்தனுப்பினார்களா?

அப்துல் காதர் — யார்? தெரியாதே.

மிஸ். கர்க் பாட்ரிக் — மீராலிகானுடைய குமாரன் ஆப்ஸல்கான் தெரியுமா?

அப்துல் காதர் — கேழ்விப் பட்டிருக்கிறேன்.

மிஸ். கர்க் பாட்ரிக் — அவனனுப்பினதாக உங்களுக்குத் தெரியாதா?

மாமாஜி — தெரியாதே. உங்களுக்கு யார் சொன்னது?

மிஸ். கர்க்பாட்ரிக் — சொல்லவும் வேண்டுமோ, அவனுடைய முகத்திலிருந்தே யறிந்துக் கொண்டேன். நான் நேற்றைய தினம் அவனுடன் இதைப்பற்றி பேசினபொழுது அவன் பயித்தியம் பிடித்தவன் போல் ஓடினான். மேலும் அவன்தா னனுப்பினதாகக் கேள்வி.

மாமாஜி — அவன் அவளிடத்தி லிச்சை வைத்தி ருப்பதனால் ஒருவேளை இந்தக் கொடூரமான செய்கை யைப்பற்றி கேட்ட பொழுது மனங் கலங்கி யிருக்க லாம். இப்படிக்கெல்லாம் தங்களுக்கு யார் சொன்னார் கள்? மற்றொரு தாதிபோ லிருக்கிறது?

மிஸ். கர்க் பாட்ரிக் — யாராயிருந்தாலென்ன? எப் படியோ யறிந்துக் கொண்டேன். அந்தப் பயல் துஷ் டப் பயலே. அவனை எப்படியாவது தொலைத்து விட வேண்டும். இப்படிப் பட்டவர்களை விட்டு விடுவது நன்றல்ல கேவலம் ஒன்றுமறியாத ஓர் பெண்ணை ஏன் கொல்ல நினைக்க வேண்டும். ஆமாம். ரஹிமாவும் அவ னையே விரும்புகிறாளோ?

மாமாஜி — ஆமாம். அவனையே நினைத்து நினைத்து உருகுகிறாள். தூக்கத்தில்கூட. அவனுடைய பெயரையே உச்சரிக்கிறாள்.

மிஸ். கர்க் பாட்ரிக் — சரி. ஆஸ்மன்ஷா அவனைப் பற்றி என்ன நினைக்கிறார் தெரியுமா?

அப்துல்காதர் — ஆஸ்மன்ஷாவுக்கு அவனிடம் விசேஷ நம்பிக்கை. நானும் அனேக தடவை கேட் டிருக்கிறேன்.

மிஸ். கர்க் பாட்ரிக் — ஆமாம். துஷ்டர் முதல்முத லில் தங்களுடைய வேலையைக் காண்பிப்பதில்லை நம்ப வைத்துக் கழுத்தறுப்பதே யவர்களுடைய வேலை.

மாமாஜி — என்ன அவன் அதற்காகவாவது அடிக் கடி வருகிறானா அல்லது நல்லவனென்று நம்பும்படி ஆஸ்மன்ஷாவிடம் வெகுவாகப் பேசுகிறானா? இப்படி யிருக்க அவன்மீது குற்றஞ் சாட்டுவது நன்றாகப் புலப் படவில்லை.

மிஸ். கர்க் பாட்ரிக் — அதைப்பற்றி எங்களுக்குத் தெரியும். நீங்கள் சொல்லவேண்டியதில்லை. அவனிப்பொழுதுதான் எனக்குத் தெரியும். இருக்கட்டும். மிட்டாய் கொடுத்தனுப்பினது அவன்தானே? அதை வாங்கி மற்றொரு மாமாஜியிடத்தில் கொடுத்தது, அப்துல்காதர், நீயல்லவா?

அப்துல்காதர் — அவர்களெப்படியிருந்தால் நமக்கென்ன. பந்தியில் வேண்டாமென்றால் இலை பொத்தலென்று நாமேன் நுழையவேண்டும்.

மிஸ். கர்க் பாட்ரிக்—இந்த கதையெல்லாம் எனக்குத் தெரியும். இப்பொழுது எனக்கு வேண்டிய சாட்சிகளுமிருக்கிறது. ஆகையால் கோர்ட்டாரவர்கள் சமூகத்தில் உள்ளதை யுள்ளபடி தெரிவிக்காவிட்டால் வருவதை யனுபவிக்கவேண்டியது நீங்கள்தான், பத்திரம்.

மாமாஜி — கோர்ட்டில்தானே. போலீஸி லில்லையே? ஆனால் பாதகமில்லை. போலீஸாரிடம் நாங்கள் பட்ட பாடு எங்களுக்குத்தான் தெரியும்.

அப்துல் காதர் —(சற்று நேரம் யோசித்து மிஸ். கர்க் பாட்ரிக் சொல்லுகிறபடி சொல்லிவிட்டால் தன் மீது யாதோர் குற்றமு மேற்படாதென்று) ஆமாம். மிட்டாயை மாத்திரம் நான்தான் வாங்கி யனுப்பினேன். ஆனால் அதில் மாஜினம் கலந்திருப்பது எனக் கெப்படித் தெரியும்?

மிஸ். கர்க் பாட்ரிக் — உன்மீது குற்ற மேற்படாது. பயமில்லை. உள்ளதைச் சொல்லிவிடு. உன்னிடம் மிட்டாய் கொடுத்தது யார்?

அப்துல் காதர் — அவருடைய பெயர் எனக்குத் தெரியாது. வேண்டுமானால் நேரில் காண்பிப்பேன்.

மிஸ். கர்க் பாட்ரிக் — சரி. இப்பொழுது நீங்கள் போகலாம். இவ்விடத்தில் பேசிய யாவும் ரகஸியமாகவே யிருக்கட்டும். ஆஸ்மன்ஷா கேட்டாலும் நான் வெளியிட வேண்டாமென்று சொன்னதாகத் தெரிவித்து விடுங்கள்.

அப்துல் காதர் — இதுவரையில் பேசியவைகளை நினைத்துக் கொண்டால் எனக்கு பகீர் பகீர் என்கிறது. இவைகளை ஆஸ்மன்ஷாவுக்குத் தெரிவித்தால் குதிரைச் சவுக்கெடுத்து வளாசி விடுவார். நாங்கள் அயலாரிடம் அந்தப்புர விஷயங்களை வெளிவிடல் குற்றமன்றோ? நான் சொல்லக் கூடாதென்றுதான் நினைத்தேன். ஆனல் தங்களுடைய சாமர்த்தியமே சாமர்த்தியம். எப்படியோ இச்சகமாகப் பேசி வெளிக்குக் கொண்டு வந்து விட்டீர்கள். இந்தக் கிழவியினுல்தான் எல்லாம், இல்லாவிடில் நான் சொல்லவே மாட்டேன்.

மாமாஜி — ஆமாம் என்னை மன்னித்து விடு. நான் செய்தது குற்றமே. ஆனல் துரைசாணியின் திறமை நம்மை யப்படி செய்து விட்டது. பாதகமில்லை. இவ்விடத்தில் நாம் மூவர்தானே யிருக்கிறோம்.

மிஸ். கர்க் பாட்ரிக் — நாம் மூவர் தானே யிருக்கிறோம். பிறகு சொன்னவைகளை வேண்டுமானல் மாற்றி விடலாம் என்று நினைக்க வேண்டாம். இவ்விடத்திலேயே யின்னொருவரு மிருக்கிறார். என்று சொன்னவுடனே ஓர் போலீஸ் உத்தியோகஸ்தர் திரையின் மறைவிலிருந்து வெளியே வந்தார். அவர் இந்த வாக்மூலங்களை யெல்லாம் எழுதிக் கொண்டே வந்தார். இவரைப் பார்த்த வுடனே இதென்ன ஆச்சரியமென்று நடுங்கி விட்டார்கள்.

போலீஸ் உத்தியோகஸ்தர் — இனி இவர்கள் போகலாம்.

அப்துல் காதர் — இவ்வளவையும் சொன்னோமே எங்களுக்கொன்று மில்லையா ?

மிஸ். கர்க் பாட்ரிக் — பிறகு எல்லாம் கிடைக்கும். இதோடு உங்களுடைய வேலை முடியவில்லை. போய் வாருங்கள்.

அப்துல் காதர்—(மாமாஜியைப் பார்த்து) முன்னமே பேசிக்கொண்டால் ? எல்லாம் உன்னால்தான் வந்தது. ஆகட்டும்..........

மிஸ். கர்க் பாட்ரிக் — போங்கள். சீக்கிரமே வருகிறேன் உங்கள் பின்னாலேயே. சண்டை வேண்டாம்.

பதினைந்தாம் அத்தியாயம்.

மிஸ். கர்க் பாட்ரிக் துரைசானியும் போலீஸ் உத்தியோகஸ்தருமாகச் சற்று நேரம் வரை ஆப்ஸல்கானை எப்படிக் காவலில் கொண்டுவருவது என்பதைப் பற்றி யோசித்து விட்டுப் பிறகு இருவரும் அவன் வீட்டுக்குப் போவதாகவும், அவ்விடம் போய் போலீஸ் உத்தியோகஸ்தர் கீழே யிருக்க வேண்டுமென்றும், மிஸ். கர்க் பாட்ரிக் துரைசானி வழக்கம்போல் மெத்தைமேல் போகவேண்டிய தென்றும், அதன் பிறகு சமயம் பார்த்து அவள் ஜாடை காட்ட போலீஸ் உத்தியோகஸ்தர் போய் வாரண்டைக் கையில் கொடுத்து பிடித்துக்கொள்ள வேண்டுமென்

றும் தீர்மானித்துக்கொண்டு இருவரும் புறப்பட்டார்கள். ஆப்ஸல்கான் வீடு சென்றதும் மிஸ். கர்க் பாட்ரிக் மாடியின் மேல் போய் ஆப்ஸல்கானைப் பார்த்தவுடனே அவன் அருகிலிருந்த ஓர் நாற்காலியின் மீது இவளை யிருக்கச் செய்து பின்வருமாறு பேசலானான் :—

ஆப்ஸல்கான் — மிஸ். கர்க் பாட்ரிக், மெத்த சந்தோஷம். நேற்றைய தினம் ஏதோ ஒரு மாதிரியாக விருந்தாயே. இன்றைக்கு எல்லாம் சரியாகப் போய்விட்டதா? நீயோ எல்லாம் வல்லவள். "வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்" என்பார்கள். உனக்கோ அதுகூட வேண்டியதில்லை.

மிஸ். கர்க் பாட்ரிக் — நானிப்பொழுது உன்னுடன் விளையாட வரவில்லை. ஓர் முக்கியமான சமாசாரத்தைப் பற்றி பேச வந்திருக்கிறேன்.

ஆப்ஸல்கான்—அப்படியா.; என்ன இனனும் கோபம் தணியவில்லையோ விருக்கிறது?

மிஸ். கர்க் பாட்ரிக் — கிடக்கட்டும். உன்னுடைய செய்கையே உன்னைக் காண்பித்துவிடுகிறது. நாமென்ன செய்யலாம்.

ஆப்ஸல்கான் — நீ சொல்வது எனக்குப் புலப்படவில்லை?

மிஸ். கர்க் பாட்ரிக் — நீ செய்தது தர்மமா? நம்பினவரைக் கைவிடலாமா? நான் உன்னை நம்பி என் மனதை உனக்கே அர்ப்பணஞ் செய்துவிட்டு இவ்விடம் வந்துவிட்ட பிறகு என்னைக் கவனிக்காமலிருப்பது சரியோ? உன்னைப் போலொத்தவ ரிருந்தால் போதும்.

ஆப்ஸல்கான் — நீ சொல்வது சரியாகயில்லை. என்னைப்போலொத்தவரா ?

மிஸ். கர்க்பாட்ரிக் — (நிமிர்ந்து பார்த்துக்கொண்டு) இருக்கட்டும். நம்மாலானதை நாம் பார்த்துக்கொள்ளுவோம்.

ஆப்ஸல்கான்—என்ன, நேற்றையதினமே ஏதேதோ பேசிவிட்டாய். இன்னும் இன்று அதற்குமேல் பேசுகிறாயே.

மிஸ். கர்க்பாட்ரிக்—உள்ளதைத்தானே சொன்னேன்.

ஆப்ஸல்கான் — இருக்கட்டும். நீ எப்படிப்பட்டவளோ ?

மிஸ். கர்க்பாட்ரிக்—அப்படியா? தெரிகிறது. நானேன் சொல்லவேண்டும். உன்னைப்போல மோசக்காரனு முளனோ? நீ சொன்னவை யெல்லாம் பொய்யே யல்லவா ?

ஆப்ஸல்கான் — என்ன, இன்றைக்கு ஏதோ என்று மில்லாததைக் கண்டுபிடித்ததுபோல் பேசுகிறாயே ?

மிஸ். கர்க்பாட்ரிக் — ஆம். கண்டுபிடித்துதானிருக்கிறேன். அது உன்னை இலேசில் விட்டதா பார்.

ஆப்ஸல்கான் — எதுதானாகட்டும், என் மனமார நான் குற்றஞ்செய்ததாக ஏற்படவில்லை. அதன் பேரில் கடவுளிருக்கிறார்.

மிஸ். கர்க்பாட்ரிக் — அப்படியா ? தெரியும் உன் யோக்யதை. என்று தலையசைத்து விட்டு சற்று நேரம் பேசாமலிருந்தாள். ஆப்ஸல்கானும் பேசவில்லை. பிறகு திடீரென்று அவள் கீழேபோய் போலீஸ் உத்தியோகஸ்தரை அழைத்துக் கொண்டுவந்து, "இவன்தான் ஆப்ஸல்கான்" என்று காண்பித்தாள்.

போலீஸ் உத்தியோகஸ்தர் — "நானுன்னை இப்பொழுது கைதியாகக் கொண்டுபோக வந்திருக்கிறேன். என்ன காரண மெனிலோ ஆஸ்மன்ஷாவின் புத்திரி ரஹிமாவை விஷத்தால் கொல்ல முயன்றதற்காக."

ஆப்ஸல்கான் — அப்படியா. வெகுசந்தோஷம். இதோ வருகிறேன். வண்டியிருக்கிறதோ அல்லது என் வண்டியைக் கொண்டுவரச்சொல்லட்டுமா ?

போலீஸ் — நான் வண்டி கொண்டுவரவில்லை.

ஆப்ஸல்கான் — (தன் வண்டிக்கு உத்திரவு பண்ணிவிட்டு மிஸ். கர்க் பாட்ரிக்கைப் பார்த்து) நீ செய்வன வெல்லாம் எனக்கு சந்தோஷத்தைத் தரத்தக்கனவே. ஆகையால் நான் வருத்தப்படவில்லை. இப்பொழுது என்மேல் சாட்டப்படும் குற்றத்துக்காக சிரசாக்கினையாகும் பொழுது நீயுமிருப்பாய்போல் தானிருக்கிறது. கிடக்கட்டும், நானிப்பொழுது உன்னெதிரில் போலீஸாரோடு போகிறேன். தயவுசெய்து அந்த மேஜைமேலிருக்கும் கடிதத்தைப்பார். இப்பொழுதுதான் இங்கிலாந்திலிருந்து வந்தது. வேண்டுமானால் பத்திரமாக எடுத்து வைத்துக் கொள்ளு. இதைச் சொன்னவுடனே மிஸ். கர்க் பாட்ரிக் அதை எடுத்துப்பார்க்க பின்வருமாறு எழுதியிருந்தது—

பிரைட்டன்,

செப்டம்பர்-12.

என் பிரிய நவாப் அவர்களுக்கு,

தாங்கள் இங்கிலாந்தை விட்டுப் போனபிறகு 4-வருஷங்களாகியும் இதுவரையில் ஓர் கடிதமு மெழுதவில்லை. எனக்குத்தான் எழுதவில்லை என்று நினைத்தாலோ என் குடும்பத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரும் தங்களுடைய கடி

தத்தை எதிர் பார்த்துக்கொண் டிருக்கிறார்கள். இப்பொழுது தங்களாலாகக்கூடிய ஓர் முக்கியமான வேலையை முன்னிட்டு இக் கடிதத்தை எழுத வாரம்பித்தேன். தங்களுக்கு இவ்விடத்தி லிருக்கும்பொழுதே நம்முடைய (Edna Kirk Patrick) எட்னா தெரியுமல்லவா ? அவளிரண்டு வருஷங்களுக்குமுன் எனக்காவது அல்லது தன் தாய்தகப்பன்மாருக்காவது தெரிவிக்காமலே எட்மண்ட் வெப்ஸ்டர் (Edmond Webster) என்னும் ஓர்பாரிஸ்டர் துரையைக்கலியாணம் பண்ணிக் கொண்டதாகத் தெரிகிறது. பிறகு அவள் தன் தகப்பனாருக் கெழுதின ஓர் கடிதத்தால் அவளுக்கு ஓர் குழந்தையும் பிறந்திருக்கிறதெனத் தெரிந்துக்கொண்டேன். ஆனால் அவள் எனக்கு நேராக யாதொரு கடிதமுமெழுதவில்லை. கடைசியாக ஏதோ என்மீது தயவு பிறந்து தான் இந்தியாவுக்குப் போவதாகவும் அவ்விடத்தில் தன்னுடைய உத்தியோகத்துக்கு அதிக கௌரவ முண்டென்றும் எழுதினாள். உடனே நானவளைப் பார்க்கும்பொருட்டு லண்டனுக்கு வந்ததில் அவள் புறப்பட்டுப் போய் விட்டாளென்பதை யறிந்தேன். பிறகு துப்பறியும் சில உத்தியோகஸ்த (Detectives) ருக்குத் தெரிவிக்க அவர்களால் அவள் வெப்ஸ்டர் துரையை விட்டதாகவும் இந்தியாவில் நிஜாம் இராஜ்ஜியத்தில் (Nizam's Dominions) இருப்பதாகவும் தெரிந்துக் கொண்டேன். அவள் போகும் பொழுது லண்டன் பாங்கி (London Bank) ல் 500 பவுனுக்கு என் பெயரை போர்ஜ் (Forge) செய்து விட்டுப் போனதாகத் தெரிகிறது. இந்த 500 பவுனும் போனால் போகிறது. அவளவ்விடத்தில் சௌக்கியமாயிருக்கிறாளா வென்பதைத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். அவள் செய்த குற்றத்தை மன்னித்து காண்பிக்காமல் விட்டு விடுகிறேன். இல்லாவிடில் என்

குடும்பத்துக்கே ஹானி வந்து விடுகிறது. அவள் என்னை மதிக்காமலே போய் விட்டாள். அதனால்தான் இந்தக் கடிதத்தை அவளுக்கு நேரில் எழுத மனந் துணியவில்லை.

உன்னுடைய பிரியமுள்ள,

பீட்ரிஸ் பாய்ஸி.

இந்தக் கடிதத்தை மிஸ். கர்க் பாட்ரிக் (Miss Kirk Patrik) வாசித்து முடிக்கும் வரையில் ஆப்ஸல்கான் அவளுடைய முகத்தைக் கவனித்து வந்தான்.

பிறகு அவளைப் பார்த்து, "திருப்திதானா? இப்பொழுது இந்தக் கடிதத்துக்குப் பதில் எழுதக்கூட சாவகாசமில்லை. ஒருவேளை கடவுளருளால் தப்பி வந்தேனானால் பீட்ரிஸ் பாய்ஸிக்குத் தெரிவிக்கிறேன். இப்பொழுது போய் வருகிறேன். எனக்காக நீ பட்ட கஷ்டங்களுக்கு அனேக வந்தனம்........".

மிஸ். கர்க்பாட்ரிக் — "தெரியும். பேசாமல் போ. இன்னுங்கூட உனக்கு வாயா? திரும்பியும் வரப் போகிறாயோ? ஹும்" என்று சொல்லிவிட்டு அவர்கள் கண்ணுக்கு மறைகிற வரையில் பார்த்துக் கொண்டிருந்து உடனே தந்தியாபீசுக்குப் போய்ப் பின் வருமாறு இங்கிலாந்துக்கு தந்தி கொடுத்து விட்டாள் :—

பிரைட்டன்,
இங்கிலாந்து.
லேடி பீட்ரிஸ் பாய்ஸிக்கு,

ஆப்ஸல்கான்............................ஐதராபாத்து.

உன் கடிதம் கிடைத்தது. அவள் சௌக்கியமாகவும் கவுரவமாகவு மிருக்கிறாள். அவளை மன்னித்து விடு.

பதினாறும் அத்தியாயம்.

இந்த உலகத்தில் சாதாரணமாக ஒரு மனிதனுடைய உண்மை கவுரவம் கண்ணியம் முதலியவை எப்பொழுது வெளிப்படுகிறது? ஏதாவது கஷ்டம் வருங்காலத்தி லன்றோ? ஆஸ்மன்ஷாவுக்கு ரஹிமன்னிஸ்ஸாவைப் பற்றி எவ்வளவு மனவருத்த முண்டாயிருக்கு மென்பதை யாவர்தா னறியக்கூடாது. இந்த ஸமயத்தி லவரை விசாரிக்க வேண்டி வந்தவர்கள் எவ்வளவோபேர், அவர்கள் தானென்றாலோ என்றும் இராஜ்ஜிய காரணமாகவன்றி மற்ற காரணமாக வெளியில் புரப்படாத நிஜாமும் ஆஸ்மன் ஷாவி னரண்மனை வந்து அவருடன் கூடவே ஒரே மஞ்சத்தில் உட்கார்ந் தல்லவோ பேசினார். இன்னு மவருடைய நிலைமையைப் பற்றி பேசவும் வேண்டுமோ?

இப்படி வெகுநேரம் வரையி லனேகர் வருவதும் போவதுமாக யிருந்தார்கள். கடைசியாக மிஸ். கர்க் பாட்ரிக் மறுபடியு மவ்விடம் வந்து சேர்ந்தாள். வந்ததும் ஆஸ்மன்ஷாவைப் பார்த்து போலீசாருடைய வேலைக் காரத்தனம் தெரியுமோ? என்று கேட்க அவர் என்ன வென்று தெரியாமல் சற்று நேரம் யோசித்து "என்ன தெரியவில்லை" என்றார்.

மிஸ். கர்க் பாட்ரிக்—"கண்டு பிடித்து விட்டார்களாம்."

ஆஸ்மன்ஷா—எதை?

மிஸ். கர்க் பாட்ரிக் — நம்முடைய குற்றவாளியை.

ஆஸ்மன்ஷா—அப்படியா! யாரது?

மிஸ். கர்க்பாட்ரிக் — யாரா யிருக்கலா மென்று யோசிக்கிறீர்?

ஆஸ்மன்ஷா—எனக்கு யாவரிடத்திலும் சந்தேக மில்லை.

மிஸ். கர்க் பாட்ரிக் — ஆயினும்?

ஆஸ்மன்ஷா — நிச்சயமாகவே.

மிஸ். கர்க் — ஆனல் சொல்லுகிறேன். மீர் ஆலிகான் தெரியுமோ?

ஆஸ்மன்ஷா — ஆமாம். தெரியும்.

மிஸ். கர்க் — அவருடைய குமாரன்.

ஆஸ்மன்ஷா — ஆப்ஸல்கான? இல்லவே யில்லை. விளையாட்டுக்குச் சொல்லுகிறயோ?

மிஸ். கர்க் — நிச்சயமாகவே தான்.

ஆஸ்மன்ஷா — நான் நம்பவே யில்லை.

மிஸ். கர்க்—இன்னுமிரண்டு நிமிஷம் பொரும். போலீசாரே யிவ்விடம் வந்து தெரிவிப்பார்கள்.

ஆஸ்மன்ஷா — இன்னும் யாராவது ஆப்ஸல்கானென்னும் பெயரோடிருக்கலாம்.

மிஸ். கர்க் — இல்லை. சீக்கிரத்திலேயே தெரிகிறது. என்று சொல்லிக் கொண்டே யிருக்கும் பொழுது போலீஸ் ஜெனரல் அவ்விடம் வந்து சேர்ந்தார். வந்ததும் ஆஸ்மன்ஷா யெழுந்து வந்தனமளித்து ஓர் ஆசனத்திலிருக்கும் படி செய்த பிறகு,

ஜெனரல்—என்ன, ஜனங்கள் என்னென்னமோ சொல்லுகிறார்களே. ஒன்றும் நிஜமாக யேற்படவில்லை. நடந்த

தென்ன? இரண்டு மூன்று நாளுக்கு முன் நடந்த தென்கிறீர்களே. போலீஸுக்குத் தெரிவிப்பதற் கென்ன? அவைகளைப்பற்றி பிறகு பேசிக் கொள்வோம். இப்பொழுது ரஹிமன்னிஸ்ஸா பிழைத்தாளோ யில்லையோ ?"

ஆஸ்மன்ஷா — கடவுளுடைய கிருபையால் பிழைத்தாள்.

ஜெனரல் — சந்தோஷம். ஆனால் ஞாபகத்துக்காக ஓர் தடவை 'வன போஜனம்' பண்ணும்.

ஆஸ்மன்ஷா — அப்படித்தான் நினைக்கிறேன். செய்ய வேண்டியதுதான்.

ஜெனரல் வந்ததும் எழுந்து மற்றொரு அறைக்குப் போயிருந்த மிஸ். கர்க்பாட்ரிக் தான் வெகுநேர மவ்விடத்தில் கார்க்க முடியாதென்றும் வெளியே போக வேண்டுமென்றும் ஆஸ்மன்ஷாவுக்கு சமாசார மனுப்பினாள்.

இதைக் கேட்டதும் ஜெனரலவர்கள் அவளைத் தான் பார்க்கவேண்டுமென்று சொல்ல மிஸ். கர்க்பாட்ரிக் கவ்விடம் வந்து சேர்ந்தாள். ஜெனரலவர்கள் அவளுடைய வைத்தியத் திறமையைப் பற்றி சற்று பேசிவிட்டு அவளுக்கு இந்த சமயம் ஓர் மெடல் ஒன்று பரிசாக வளிக்க வேண்டுமென்றார். பிறகு, தான் அன்றைக்கு முன் தினம் போன கிளப்பில் யாரோ ஓர் துரை தான் இங்கிலாந்திலிருந்து வந்திருப்பதாகவும் மிஸ். கர்க் பாட்ரிக்கைப்பற்றி வெகுவாகக் கேட்டதாகவும் சொல்ல துரைசானிக்கு சந்தேக முண்டாகி அவருடைய பெயரைத் தெரிந்துகொள்ள ஆவலா யிருந்தாள். இதைக் கண்ட ஜெனரல் அவருடைய பெயர் வெப்ஸ்டர் என்றும் அவர் லண்டனில் ஓர் பாரிஸ்டரென்றும் தெரிவிக்க, மிஸ். கர்க்பாட்ரிக்குக்கு கோபமுண்

டாய், "வெப்ஸ்டரா! லண்டன் பாரிஸ்டரா! லண்டனில் எனக்கு ஒருவரும் தெரியாதே. என்னைப்பற்றி யவன் கேட்கவேண்டிய தென்ன ?"

ஜெனரல் — அதென்னமோ. அவரொன்றும் விசேஷமாகச் சொல்லவில்லை. தாங்களும், தங்களுடைய தாய் தகப்பன்மார்களும் அவருக்குத் தெரியுமென்று சொன்னர்.

மிஸ். கர்க் — லண்டனில் எனக்கு யாருமே தெரியாதே!

ஜெனரல் — என்னமோ ஒருவேளை அவர் தங்களைப் பார்த்திருக்கலாம். அல்லது தங்களுடைய வைத்தியத் திறமையைப்பற்றிக் கேட்டிருக்கலாம்.

மிஸ். கர்க் — தெரிந்திருந்தாலும் அவன் என்னைப் பற்றி கேட்கவேண்டிய அவசியமில்லை, இருக்கட்டும் என்று சொல்லிவிட்டுப் போய்விட்டாள். ஜெனரலும் சற்றுநேர மிருந்துவிட்டு தானும் புறப்பட்டுப் போய் விட்டார்.

பதினேழாம் அத்தியாயம்.

ஜெனரல்துரை யவர்கள் போய்விட்டபிறகு அவ்வூர் கொத்வால் சாயிபும் இரண்டு போலீஸ் உத்தியோகஸ்தருமாக வந்துசேர்ந்தார்கள். வந்தவுடனே கொத்வால் சாயிபு தாங்கள் குற்றவாளியைக் கண்டுபிடித்ததாகவும் அவன் யாரெனில் மிராலிகானுடைய குமாரன் ஆப்ஸல் கானென்றும் தெரிவிக்க ஆஸ்மன்ஷாவுக்கு ஒன்றும் தோன்றாது "என்ன யிப்படிச் சொல்லுகிறீர்கள் ?" என்ப

தாக மனதிலேயே சிந்தித்துக்கொண்டு கடைசியாக கொத்வால் சாயிபைப் பார்த்து, "ஐயா, நீர் சொல்லுவது சரியாகத் தோன்றவில்லை. அந்த மனிதனிப்படிப்பட்ட காரியத்தில் தலையிட்டுக்கொள்ளத் துணியவேமாட்டா னென்பது நிச்சயமாகத் தெரியும். அப்படித்துணியினும் நம் விஷயத்திலும் ரஹிமன்னிஸ்ஸாவினுடைய விஷயத்திலுமா அவ்விதச் செய்கையைச் செய்யப்போகிறான். இல்லவேயில்லை. தாங்கள் சொல்வதை மறுக்கிறேனே யென்று கோபிக்கக்கூடாது. மன்னிக்கவேண்டும். ஆனால் அவன் செய்தானென்று சொல்லுகிறது இல்லாத காரியம். இப்பொழுதுதான் அப்படி நினைத்தாலும் பிறகாவது உண்மைவெளிப்படாமல் போகாது என்று சொல்ல கொத்வால் சாயிபு, ஆஸ்மன்ஷாவைப்பார்த்து "எதற்காக அப்படி நினைக்கிறீர்கள். நல்லவன் கெட்டவனாவதற்கு எவ்வளவுநேரம் செல்லும்? ஒருநிமிஷகாலம் போதாதோ? அப்படியிருக்க இவன் செய்திருக்கவே மாட்டானென்று சொல்ல என்னகாரண மிருக்கிறது? ரஹிமன்னிஸ்ஸா அபினி விஷமிடப்பட்டாளென்பது நிச்சயமாகத் தெரிகிறது. டாக்டரஸ் துரைசானியே யம்மாதிரி தெரிவிக்கிறாள். அவளேன் பொய்சொல்லவேண்டும். மேலும் அபினிகலந்த மிட்டாயை ஆப்ஸல்கானனுப்பினதாகவும் ருசுவாகிறது. ஆகையால் அவனே கொல்ல முயன்றான் என்பதற்கு என்ன தடையிருக்கிறது. கிடையவே கிடையாது. நீங்களப்படி நினைக்கவேண்டாம். பாருங்கள் சீக்கிரத்திலேயே கண்டுபிடித்து விடுகிறோம். அப்பொழுதாவது அறிவீர்கள்.

ஆஸ்மன்ஷா — என்னமோ எனக்கப்படித் தோன்றவில்லை. உங்களிஷ்டம் எப்படி வேண்டுமானாலும் செய்யுங்கள்.

கொத்வால்சாயிபு—இதுவரையில் உண்மையாக ஏற்பட்டிருக்கிறது. ரஹிமன்னிஸ்ஸாவைத் தவிர மற்ற சாக்ஷிகளின் வாக்கு மூலங்களெல்லாம் போலீசார் மூலமாய்த் தெரிந்து விட்டது. அவளுடைய வாக்கு மூலமும் மவசியமானதா லிப்பொழுதே மாஜிஸ்திரேட்டவர்கள் இவ்விடம் வருகிறதாகத் தெரிவித்தார். இந்த சமாச்சாரத்தை தங்களுடைய புத்திரி யறியட்டும் என்று சொல்லி முடிக்கு முன்னமே மாஜிஸ்திரேட்டவர்களும் வந்து சேர்ந்தார். பிறகு மூவருமாக ரஹிமன்னிஸ்ஸாவின் அந்தப்புறம் போக எழுந்திருக்க ஆஸ்மன்ஷா அவர்களை அழைத்துக்கொண்டு போய் தன் புத்திரியினரைக்கு அடுத்த அறையிலிருக்கும்படி செய்துத் தான் மாத்திரம் ரஹிமன்னிஸ்ஸாவைப் பார்க்கச் சென்றார். இவர் வருவதைக் கண்ட ரஹிமன்னிஸ்ஸா சந்தோஷத்தோடு வாசற்படி யண்டை வந்து இவர் வரவை எதிர் பார்த்துக்கொண்டிருந்தாள். அருகில் வந்ததும் இருவரும் ஒருவரையொருவர் கட்டி யணைத்து முத்தமிட்டுக்கொண்டு சற்று நேரம் வரையில் ஆனந்தபாஷ்பம் பொழிந்தார்கள். பிறகு ஆஸ்மன்ஷா தன் புத்திரியைப் பார்த்து "குழந்தாய், உன்னுடைய இருப்பிடத்திற்கு அபினிப் பாஷாண மெப்படி வந்தது தெரியுமோ?"

ரஹிமன்னிஸ்ஸா—நிச்சயமாக எனக்குத் தெரியாதே.

ஆஸ்மன்ஷா — இதுவரையில் எங்களுக் குண்டான மனவருத்த மெவ்வளவென்று தெரியுமா?

ரஹிமன்னிஸ்ஸா — என்ன?

ஆஸ்மன்ஷா — சொல்லத்தரமில்லை. அதுதான் நிவர்த்தியாயிற்றென்றால் இப்பொழுது இந்தக் கேசில் குற்ற

வாளியாக ஏர்ப்பட்டவன் என்னுடைய பிரிய நண்பனு டைய குமாரனும்.

ரஹிமன்னிஸ்ஸா — யாரது?

ஆஸ்மன்ஷா — "மீராலிகானுடைய குமாரன் ஆப் ஸல்கானும். அவனையுமெனக்கு நன்றாகத் தெரியும். கச டறக் கற்றவனவன். அவன் இப்பேற்கொத்த செய்கை களைச் செய்பவனல்லன். நானுன்னை நேசிக்குமளவு அவ னையும் நேசிக்கிறேன்........"

ரஹிமன்னிஸ்ஸா — தாங்கள் என்னை நேசிக்குமளவு அவரையும் நேசிக்கிறீரா? சந்தோஷம். நானுமவரையே நேசிக்கிறேன். தந்தையே கோபிக்க வேண்டாம். என் மனம் அவரையே நாடியது.

ஆஸ்மன்ஷா — அவனை நீ பார்த்ததே யில்லையே. எப்படித் தெரியு மவனுனக்கு?

ரஹிமன்னிஸ்ஸா — இல்லை. லங்கர் பண்டிகையன்று ஊர் வலம் வருகையில் பார்த்தேன். என்னைப்போல் தாங்களும் ஒரு காலத்தில் யௌவனத்தோடு கூடி யிருந் திருப்பீர்க ளல்லவா? அப்பொழுது என் தாயாரை யெவ் வளவு நேசித்திருப்பீர்கள். அதைப் போலவே என் மனம் அவரைப் பற்றியது. ஆகையினால் கோபிக்க வேண்டாம் தந்தையே. இனி கடவுளருள்தான் வேண்டும். அவரு டைய கிருபாகடாக்ஷத்தினால் தான் என் மனம் நிறைவேற வேண்டி யிருக்கிறது. என்மேல் கோபமோ?

ஆஸ்மன்ஷா — இல்லை, இல்லை, கடவுளுடைய பிஷ் டமு மப்படியேயானால் அதைத் தடுக்க யாவரால் முடியும். ஆகையினால் எனக்குக் கோபமே யில்லை. இப்பொழுது இந்த கேஸைப்பற்றி விசாரிக்கும்படி மாஜிஸ்திரேட்டவர்

களும் கொத்வால் சாயிபும் வந்திருக்கிறார்கள். அவர்கள் உன்னுடைய வாக்கு மூலங்களைக் கேட்க வேண்டுமாம். நான் போய் அவர்களை யழைத்துக் கொண்டு வருகிறேன். சித்தமாயிரு. என்று சொல்லிவிட்டுப் போய் அவர்களை அழைத்துக் கொண்டு வந்து வெளியிலேயே யிருக்கச் செய்து அவர்களுக்கும் ரஹிமன்னிஸ்ஸாவுக்கும் இடையில் திரை போட்டு கேட்கும் கேள்விகளுக்கு உத்திரவளிக்க ஏற்பாடு செய்தார்.

மாஜிஸ்திரேட்டு — "ஐயா, இப்பொழுது நான் கேட்கிற கேள்விகளுக்கு சத்தியமாக பதில்கூறவேண்டும். முதலில் அவளுடைய கையில் ஏதாவது அழியாத அடையாள மிருக்கிறதா? பார்த்துச்சொல்லவேண்டும்?"

ஆஸ்மன்ஷா — "ஆமாம், வலதுகை பெருவிரலில் மச்சமிருக்கிறது."

மாஜிஸ்திரேட்டு — "அல்லா சாக்ஷியாக நீர் கூறுவது உண்மைதானே?

ஆஸ்மன்ஷா — "ஆமாம்"

மாஜிஸ்திரேட்டு — "எத்தனை?"

ஆஸ்மன்ஷா — "ஒன்று"

மாஜிஸ்திரேட்டு — "கோரான் சாக்ஷியாக நீங்களிருவர் தவிர அவ்விடத்தில் வேறொருவருமில்லையே?"

ஆஸ்மன்ஷா — "இல்லை"

மாஜிஸ்திரேட்டு — "இருவர்தானே"

ஆஸ்மன்ஷா — "ஆமாம்"

மாஜிஸ்திரேட்டு — "சரி. இனி தாங்கள் வெளியே வந்து விடலாம்." உடனே ஆஸ்மன்ஷாவும் வெளியே

வந்து விட்டார். பிறகு மாஜிஸ்திரேட்டவர்கள் ரஹிமன்னிஸ்ஸாவின் கையைப் பரீக்ஷிக்கும்படி நீட்டச்சொல்லவே அவளும் சன்னல்வழியால் தன்னுடம்பின் யாதொரு பாகமும் தெரியாமல்படிக்கு கையை மாத்திரம் நீட்ட அதைப்பார்த்த மாஜிஸ்திரேட்டு ஒன்றுந்தோன்றுதவருய் மச்சியத்தைக்கூட கவனியாமல் அதனழகையே பார்த்துக்கொண்டிருந்தார். சிலசமயம் அந்தக்கையை ஒரு முத்தங் கொடுக்கலாமென்றுந் தோன்றியது. ஆனால் அப்படிச் செய்யாமல் கௌரவமாக விட்டு விட்டார். பிறகு அவளிடமிருந்து வேண்டிய சத்தியங்களை வாங்கிக்கொண்டு பின்வருமாறு கேட்க வாரம்பித்தார்.

மாஜிஸ்திரேட்டு — "உனக்கு ஆப்ஸல்கானைத் தெரியுமா?"

ரஹிமன்னிஸ்ஸா — "பார்த்திருக்கிறேன்."

மாஜிஸ்திரேட்டு—"எவ்வளவு காலமாகத் தெரியும்?"

ரஹிமன்னிஸ்ஸா — "லங்கர் பண்டிகை யன்றுமுதல் தெரியும். இனி யவரை என் பிராணன் போனாலும் மறவேன்."

மாஜிஸ்திரேட்டு — "கேட்கும் கேள்விக்குமேல் அனாவசியமாக பதில் கூறாதே. உனக்கு திரேகம் அசௌக்கியமாயிருந்தது தெரியுமா?"

ரஹிமன்னிஸ்ஸா — "ஆமாம் தெரியும். மிஸ். கர்க்பாட்ரிக் துரைசானி சொல்லி யிருக்கிறாள்."

மாஜிஸ்திரேட்டு—"கேட்கும் கேள்விக்கு மேல் பதில் கூற வேண்டாமென்று முன்னமே உனக்கு எச்சரிக்கை செய்திருக்க வில்லையா? இனியாவது ஜாக்கிரதையா யிரு. ஆப்ஸல்கானுக்கும் உனக்கும் ஏதாவது சமாசாரங்கள்

லெட்டர் மூலமாகவாவது அல்லது வேறு எப்படியாவது நடந்த துண்டா?"

ரஹிமன்னிஸ்ஸா—"ஆமாம். உண்டு. ஒருநாள் கொஞ்சம் மிட்டாய் கூடக் கொடுத்தனுப்பினர். அது மிகவும் நன்றாகவே ருசிகரமாக யிருந்தது. அதைச் சாப்பிட்டவுடனே நித்திரை போய்விட்டேன். அவ்வளவுதான் தெரியும்."

கொத்வால் — "அதுவே போதுமானது."

மாஜிஸ்திரேட்டு — "எனக்கு மப்படித்தான் தோன்றுகிறது. (ஆஸ்மன்ஷாவைப் பார்த்து) நீங்கள் ஏதாவது கேழ்க்க வேண்டி யிருந்தால் என்னெதிரில் கேழ்க்கலாம். பிறகு கேட்பதில் பிரயோஜனமில்லை."

ஆஸ்மன்ஷா — இல்லை. உங்களிஷ்டப்படிக்கும் அல்லாவினிஷ்டப்படிக்கும் விட்டு விட்டேன். நானொன்றும் கேட்க வேண்டியதில்லை. என்று சொன்னதும் இருவரும் உத்திரவு பெற்றுக்கொண்டு புறப்பட்டுப் போய்விட்டார்கள். ஆஸ்மன்ஷாவும் தன் புத்திரிக்கு இன்னொரு முத்தமளித்து விட்டுத் தானும் தன்னரைக்குப் போய் ரஹிமன்னிஸ்ஸாவையும் ஆப்ஸல்கானையும் யாதொரு இடையூறுகளிலும் அகப்படாமற்படி ரக்ஷிக்கவும் அவர்களுடைய மனோபீஷ்டத்தைப் பூர்த்தி செய்யவும் அல்லாவை அருள் புரியும்படி வேண்டிக் கொண்டார்.

பதினெட்டாம் அத்தியாயம்.

"தையலார் மதியிற் பட்டோர்
தமக்கோரு மதியு முண்டோ."

நம் தேசத்து ஜனங்களின் குணாதிசயங்களைப் பற்றி சற்று கவனிப்போம். அவர்களுக்கு எவ்விதத்தி லாயினும் விஷயங்களை யறிய வேண்டுமென்பதே முக்கிய எண்ணம். படித்தவர்கள் மாத்திரமல்ல. படிக்காத பட்டிக்காட்டு ஜனங்களுக்குக் கூட எவ்வளவோ விஷயங்கள் தெரியும். படித்தவர்களோ புத்தகங்களை யெல்லாஞ் சேர்த்து ஒரு வீடு நிரைய அடுக்கிக்கொண்டு ஏதாவது ஒரு சங்கதியைப் பற்றி அறிய வேண்டுமானல் அவைகளை எடுத்துப் புரட்டிக்கொண் டிருப்பார்கள். மேலும் ஒன்றுதெரிந்த வருக்கொன்று தெரியாது. டாக்டர் பரீக்ஷைக்குப் படித்தவரொருவரை லா (Law) விஷயத்தைப் பற்றிக் கேட்டால் எனக்குத் தெரியாது லாயரிடத்தில்போய் தெரிந்துகொள்ளென்பார். இப்படியே லாயரண்டை போய்க் கேட்டாலும். ஆனல் படியாதவர்கள் படியாதவர்களென்று சொல்லப்படுகிறவர்களை எது கேட்டாலும் சமாதானம் சொல்லுவார்கள். யுக்தியும் அவர்களுக்கு அதிகமே என்பதைப் பற்றி நான் சொல்லவேண்டுவதில்லை. இவைகளுக்குத் திருஷ்டாந்தமாக ஹைகோர்ட்டில் போய்ப்பாருங்கள். கேஸுகளை யார் கவனிக்கிறார்கள். அம்பட்டன் வண்ணான் முதல் ஒன்று இரண்டென்று சொல்லக்கூடாதவர்களுமல்லவோ மிக்க ஊக்கமாகக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஒன்றிரண்டே தெரியாதென்றால் ஆங்கிலேய பாஷையில் நடக்கிற கேஸுகள்

விவரம் அவர்களுக்கு எப்படி விளங்கப் போகிறது. ஆனாலும் கேளுங்கள். அவர்கள் நியாயாதிபதியின் முகத்தையும் வக்கீல்களின் முகங்களையும் பார்த்துக் கொண்டே சகலத்தையு மறிகிறார்கள். சந்தேக மிருக்கும் பக்ஷத்தில் உடனே யாரையாவது கேட்டு தீர தெரிந்துக் கொள்ளுகிறார்கள். அவர்களுடைய சாமர்த்தியத்தைப் பாருங்கள். படித்தவனோ தெரியாமல் போனால் போகிறது ஒருவரைக் கேட்கிறதா என்றல்லவோ வந்து விடுகிறான். அவர்களுக் ககங்கார முண்டா? அகங்கார மமகாரங்களை யொழித்தவர்க ளன்றோ அவர்கள். ஆகையால் அனேக ஜனங்கள் ஆப்ஸல்கா னுடைய கேஸ் நடக்கப் போகிறதென்று மாஜிஸ்திரேட்டு கோர்ட்டில் கார்த்துக்கொண்டிருந்தார்கள். லாயர்களும் அவ்விடத்தில் இரண்டு வரிசையாக உட்கார்ந்துக் கொண்டு சிலர் தூங்கி விழுவதும் சிலர் கொச கொச வென்று பேசுவதுமாக விருந்தார்கள். ஒவ்வொருவருடைய எதிரிலும் சில காகிதங்களும் எழுது கோலும் வைக்கப்பட் டிருந்தன. மணி பதினொன்றாயிற்று. மாஜிஸ்திரேட்டும் வந்து சேர்ந்தார். அவர் வந்ததும் ஆஸ்மன்ஷா எழுந்திருந்து வந்தன மளித்தவுடனே மாஜிஸ்திரேட்டவர்கள் தான் கொஞ்சம் பருமனானதால் தன்னுடைய இடத்தில் ஏறி உட்காரும்பொழுது பங்கா தலையின் மீது பட்டு தவரி கீழே யிருந்த காகிதக் கட்டையின் பேரில் விழ அவரைத் தூக்கவந்த சேவகன் தான் அப்படிச் செய்யும் பொழுது மசிக்கூடின்மீது விழுந்து வேஷம் போட்டுக் கொண்டான். இவை யெல்லாம் சற்று நேரம் ஜனங்களுக்கு விடா நகைப்பை யுண்டு பண்ணியது.

மாஜிஸ்திரேட் கஷ்டத்தோடு எழுந்து உட்கார்ந்தவுடன் கோர்ட்டு குமாஸ்தா அருகில்வந்து கேஸை ஆரம்பிக்கச் சித்தமாயிருக்கிறரா வென்று கேட்க அந்தக்

கேஸில் முக்கிய சாக்ஷியாக விருக்கப்பட்ட மிஸ். கர்க் பாட்ரிக் இன்னும் வராததால் அவள் வருகிறவரையில் ஆரம்பிக்கக் கூடாதென்று சொல்லிவிட்டு ஷூங்கில் பேனுவைச் சீவிக்கொண்டே கவர்ன்மெண்ட் தருப் வக்கீல் யாரென்று கேட்க அவ்விடத்தில் தூங்கி விழுந்துக்கொண் டிருந்தவர்களிலொருவர் பக்கத்திலிருந்தவருடைய தூண் டுகோலால் விழித்துக்கொண்டு "நான்தான்" என்றார். இவர் தூங்கிவிழுந்துக் கொண்டிருந்தாரென்ற பிறகு இவ ருடைய திரத்தைப்பற்றி பேசுவதனுவசியம்.

மாஜிஸ்திரேட் — (கைதியைப்பார்த்து) உனக்காக யார் வருகிறது ?

கைதி — மிஸ்டர் வெப்ஸ்டர் என்னும் ஓர் பாரிஸ்டர் துரை.

மாஜிஸ்திரேட் — யாரது? அவரைப்பற்றி நானிது வரையில் கேள்விப்பட்டதில்லையே.

கைதி — அவரோர் ஆங்கில பாரிஸ்டர்.

மாஜிஸ்திரேட் — ஆங்கில பாரிஸ்டரா? அவரெப்படி இந்தக்கோர்ட்டில் வரலாம். கூடவே கூடாது. எங்கே யவர்?

கைதி — இன்னும் வரவில்லை போலிருக்கிறது. சீக் கிரத்தில் வந்து விடுவார்.

மாஜிஸ்திரேட் — ஓ இல்லை இல்லை. நான் அவருக்கு பேசும்படி உத்திரவு கொடுக்க மாட்டேன். நம்முடைய கோர்ட்டிலேயே எவ்வளவோ பேர் வேலை யில்லாமல் உட்கார்ந்திருக்கிறார்கள். அவர்களில் யாரையாவது நிய மிப்பதற்கென்ன ?

கைதி — கனம் பொருந்திய கோர்ட்டாரவர்களே! தாங்கள் அவரை ஒத்துக்கொள்ளா விட்டால் நானே வக்கீ லில்லாமல் பேசுகிறேன்.

மாஜிஸ்திரேட் — ஓஹோ! நீ பலே கெட்டிக்காரன் போலிருக்கிறது. உனக்கெதிர்த் தட்டாக தீர்மானம் செய்து விட்டால் என்ன செய்வாய்?

கைதி—அபீல் செய்ய எனக்கு பாத்திய மில்லையோ?

மாஜிஸ்திரேட் — என்ன? நானின்னாரென்று உனக் குத் தெரியவில்லை போலிருக்கிறது. வாயில் வந்தபடி உளருகிறாயென்ன? வேணுமென்று உன்னைச் சிரசாக் கினைக்கு உத்திரவு பண்ணக்கூடாதா?

கைதி — தாங்கள் மிக்ககனம் பொருந்தியவர்க ளென்றே தெரிகிறது. ஆயினும் அகாரணமாக யார்தான் என் தலைக்கு தீம்புவைக்க முடியும்?

மாஜிஸ்திரேட் — தெரியும் வாயைமூடு உளராதே.

இந்தச் சமயத்தில் மிஸ்டர் வெப்ஸ்டரும் இன்னு மிரண்டு ஆங்கிலேய துரைமார்களும் வந்து சேர்ந்தார்கள். வெப்ஸ்டர் வந்ததும் ஆப்ஸல்கானண்டைபோய் ஏதோ சில வார்த்தைகள் பேசிவிட்டு உட்கார இடம் தேடினார். இடமகப்படாததால் மாஜிஸ்திரேட்டவர்களுக்குத் தான் ஓர் பாரிஸ்டரென்றும் ஆப்ஸல்கானுக்காக வந்திருக்கிற தாகவும் தெரிவிக்க அவர் உத்திரவு கொடுக்க மாட்டே னென்று மறுத்துவிட்டார். உடனே மறுவார்த்தைபேசா மல் தான் நிஜாமிடத்திலிருந்து வாங்கிக்கொண்டுவந்த ஓர் கடிதத்தை அவர்கையில் கொடுத்தார். இதை வாசித் துக்கொண்டிருக்கும் பொழுது ஓர் சேவகன் வந்து அவர் காதண்டை ஏதோ ரகஸியமாகப் பேசினான். உடனே

மாஜிஸ்திரேட்டவர்கள் எழுந்து "ஆமாம் இதைப்பற்றி நான் யோசிக்க வேண்டியதா யிருக்கிறது——."

மிஸ்டர் வெப்ஸ்டர் — இதற்கு மாறுதலாகக் கூடச் செய்வீர்களோ?

மாஜிஸ்திரேட் — எனக் கவ்வளவு தூரம் தெரியாது. இதை எப்பொழுது பெற்றுக்கொண்டீர்?

மிஸ்டர் வெப்ஸ்டர் — நேற்றைய தினம் நேரில் பெற்றுக் கொண்டேன்.

மாஜிஸ்திரேட் — ஆமாம் இந்தக் கோர்ட்டில் உபயோகப்படும் பாஷை ஊர்டு Urdu ஆகையால் என்ன செய்கிறதாக யோசிக்கிறீர்?

மிஸ்டர் வெப்ஸ்டர் — நாஞெரிண்டர்பிரடரை Interpreter யழைத்துக் கொண்டு வந்திருக்கிறேன். என்று சொன்னதும் தனக்காக யாரோ காத்துக்கொண் டிருக்கிறதாகவும் போய் பேசிவிட்டு வருகிறதாகவுஞ் சொல்லி விட்டுப்போய் விட்டார். உள்ளே மிஸ். கர்க் பாட்ரிக் உட்கார்ந்திருந்தாள்.

மிஸ். கர்க் பாட்ரிக் — தங்களைக் கோர்ட்டிலிருந்து யிவ்விடம் வரும்படி செய்ததற்கு என்னை மன்னிக்க வேண்டும்.

மாஜிஸ்திரேட் — பாதகமில்லை. உனக்காகத்தான் கார்த்துக்கொண் டிருந்தேன்.

மிஸ். கர்க் பாட்ரிக் — கைதியின் வக்கீல் யார்?

மாஜிஸ்திரேட் — வெப்ஸ்டராம், பாரிஸ்டராம். நிஜாமிடத்திலிருந்து உத்திரவு சீட்டு பெற்றுக் கொண்டு வந்து விட்டார்.

மிஸ். கர்க்பாட்ரிக் — ஆமாம் அது பொய் கையெழுத்தாக யிருக்கப் படாதோ?

மாஜிஸ்திரேட்—அதைப்பற்றி சந்தேகிக்கயிடமில்லை.

மிஸ். கர்க்பாட்ரிக் — "நான் தங்களை ஒரு மனு கேட்டுக்கொள்ளுகிறேன், என்னை மாத்திரம் கோர்ட்டிலிழுக்கப் படாது. கொத்வாலைக் கேட்டேன். அவர் நான் முக்கியமாக வரவேண்டுமென்று தெரிவித்தார். தாங்களைப் படியாவது.........." மேலும் இந்தக் கேஸில் ஆப்ஸல்கான் குற்றவாளி யென்பது வெளிப் படையா யிருக்கிறது. ஆகையால் உடனே உத்திரவு கொடுத்து விடலாம். அவனெதற்காக ஆங்கிலேய பாரிஸ்டரை நியமித் திருக்கிறான் தெரியுமோ? தங்களைப் பயப் படுத்தத்தான்.

மாஜிஸ்திரேட் — நானேன் பயப்பட வேண்டும். வேலையிலிருந்து நீக்கப் பட்டாலும் பயமில்லை. வேண்டிய பணம் சம்பாதித்திருக்கிறேன். மேலும் உன்னுடைய சிநேக மிருக்கிறவரையிலெனக்கென்ன குறைவு.

மிஸ். கர்க்பாட்ரிக் —"நான் கடைசி வரையில் தங்களுடைய சிநேகிதையே" என்று சொல்லிக்கொண்டே தன் அழகிய கையை அவருடைய கையில் கொடுத்தாள். உடனே அவருக்கு எப்பொழுதுமில்லாத ஆனந்தமுண்டாகி அவளுடைய கையை தன்னால் கூடியவரையில் அழுத்திப் பிடித்துக் கொண்டார். பிறகு அவள் மற்றொரு கையால் அவரைக் கட்டிக் கொள்ளவே அவர் அவளுடைய வலையிலகப்பட்டுக் கொண்டு அவளுடைய இஷ்டப்படி நடக்கத் தீர்மானித்தார்.

மிஸ். கர்க்பாட்ரிக்—என்னுடைய மனு தெரிந்ததா?

மாஜிஸ்திரேட் — மனுவா? உத்திரவென்று சொல்லு. நானுன்னுடைய வேலைக்காரனென்று நினை.

மிஸ். கர்க்பாட்ரிக்—(i) அவனைத் துலைத்துவிட வேண்டும். (ii) என்னைக் கோர்ட்டிலிழுக்கப்படாது.

மாஜிஸ்திரேட் — இவ்வளவுதானே. நானப்படியே செய்து விடுகிறேன். அதற்காக நீ பயப்படவேண்டாம். மேலும் நான் சிறியவனா யிருக்கும்பொழுது நான் விரும்பின பெண்ணை அவனுடைய தகப்பன் மீராலிகான் கவர்ந்துகொண்டான். அந்தப் பெண்ணுக்குப் பிறந்தவன் தான் ஆப்ஸல்கான். நல்ல சமயம் வாய்த்தது. மீராலிகானுக்குப் புத்திவரும்படி செய்கிறேன். நீ மறுபடி சாயங்காலம் என்னுடைய பங்களாவண்டை வா. நல்ல சமாசாரம் தெரிவிக்கிறேன். என்று சொல்லிப் பிரிந்துவிட்டார். அவளும் தன்னுடைய எண்ணம் நிறைவேறிவிடுமென்ற நிச்சயத்துடன் சந்தோஷமாகப் போய்விட்டாள்.

ஆஹா! பார்த்தீர்களா! பெண்பித்து என்பார்கள். சரியாகவே தளுக்கிலும் மினுக்கிலும் ஆஸாமியை அப்படியே அழுத்தி விடுகிறார்கள். ஆகையினால் ஸ்திரீகளினால் கெட்டவர்கள் எவ்வளவோ பேர். இந்திரன் அகலிகையின் அழகைப் பார்த்து மயங்கவில்லையோ. இராவணன் சீதையினால் மாளவில்லையோ. இன்னு மெவ்வளவோ பேர்களை எப்படி எப்படியோ கேட்டிருக்கிறோம். ஞாயாதிபதி என்றால் ஞாயத்தை யல்லவோ பேசவேண்டும். அவளுக்கு தானோர் வேலைக்காரனென்றார். வேலைபோனாலும் போகிறதென்றார். இனி தன்னுயிரையும் கொடுப்பேனென்பார். இப்படிக்கல்லவோ யிருக்கிறது உலகம். இம்மாதிரியாக ஜனங்கள் மாய்வதற்கல்லவோ சிருட்டித்தான் ஸ்திரீகளை. இவர்களுக்குத் தகுந்த சிக்ஷை நடக்குமென்பதில் சந்தேகமே இல்லை. இவளுடைய கதி என்னவாகிறதோ பார்ப்போம்.

பத்தொன்பதாம் அத்தியாயம்.

மாஜிஸ்திரேட் டவர்களுடைய கோர்ட்டில் ரஹிமன்னிஸ்ஸாவைப் பற்றிய கேஸ் விசாரணை செய்யப்போகிற சமாசாரம் தெரிந்தவுடனே அனேக ஜனங்கள் வேடிக்கை பார்ப்பதற்காக கூட்டங்கூட்டமாய் வந்து சேர்ந்தார்கள். மாஜிஸ்திரேட் வந்ததும் ஜனங்கள் சப்தம்செய்யாமல் அவர் என்ன சொல்லப்போகிறாரென்று கேட்க அதே கவனமாயிருந்தார்கள். கைதியும் அவ்விடம் கொண்டு வரப்பட்டான். மிஸ்டர் வெப்ஸ்டர் துரையும் கூர்ஷெட்பக் என்பவரும் வாதிக்கும் வக்கீல்களாகவந்து தங்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கு மிடத்திலமர்ந்தார்கள். சாதாரணமாக வக்கீல்கள் கோர்ட்டுகளில் வரும் குளிர்ந்த காற்றினால் உட்கார்ந்தபடியே சற்று தூங்குவது வழக்கமாகையால் கூர்ஷெட்பக்கும் வந்த சிரமத்தினால் மயக்கமாயிருந்தார். பக்கத்திலிருப்பவர் சீண்டிவிடவே அவர் எழுந்து இப்பொழுது குற்றஞ்சாட்டப்பட்டவன் 'குற்றவாளிதான் என்பதை தீர்மானஞ்செய்வதற்கு அவருக்கு அநேக சாக்ஷியங்க ளிருக்கிறதாகவும், முதலாவது ரஹிமன்னிஸ்ஸாவின் சாக்ஷியத்தின்படி அவளுக்கு விஷம்கலந்த மிட்டாய் கொஞ்சம் இப்பொழுது குற்றஞ்சாட்டப்பட்டவனால் அனுப்பப்பட்டதாகவும், இரண்டாவது அவைகளைக் கொண்டுவந்தவனிடமிருந்து வாங்கிக்கொண்ட மனிதனுடைய சாக்ஷியமிருப்பதாகவும், மூன்றாவது அவனிடமிருந்து வாங்கிக் கொண்டு அந்தப்புரத்துக்குக் கொண்டுபோன ஓர் ஸ்திரீயின் சாக்ஷியமிருப்பதாகவும், நான்காவதும் எல்லாவற்றையும்விட அதிக முக்கியமானதுமான மிஸ். கர்க் பாட்ரிக்கின் சாக்ஷியிருப்பதாகவும் எடுத்துச் சொல்லிவிட்டு உட்கார்ந்தார். உடனே,

மாஜிஸ்திரேட் — இந்தக்கேஸில் மிஸ். கர்க் பாட்ரிக்கின் சாக்ஷியத்தைக்கேழ்க எனக்கு இஷ்டமில்லையாகையால் நான் அவளை வரவேண்டாமென்று சொல்லிவிட்டேன்.

வெப்ஸ்டர் — கனம் பொருந்திய கோர்ட்டாரவர்களே! இந்தக்கேஸில் அவளே முக்கியமான சாக்ஷியென்று ஏற்படுவதால் அவளை என்ன காரணங்களுக்காக வரவேண்டாமென்று சொன்னீர்களோ அவைகளைத் தயவு செய்து எனக்குத் தெரிவிப்பீர்களோ?

மாஜிஸ்திரேட் — அவைகளை உமக்குத் தெரிவிப்பது அனாவசியம். அப்படிச்செய்வதில் எனக்கிஷ்டமில்லை. ஏனென்றால் ரஹிமன்னிஸ்ஸாவின் சாக்ஷியமே எல்லாவற்றிற்கும் போதுமானது.

வெப்ஸ்டர் — ஆனால் நான் ரஹிமன்னிஸ்ஸாவைச் சில கேள்விகள் கேழ்க்கவேண்டும்.

மாஜிஸ்திரேட் — அது உம்முடைய வேலையாகையால் அப்படி வேண்டுமானால் செய்யலாம்.

வெப்ஸ்டர் — கனம்பொருந்திய கோர்ட்டாரவர்களே! நானித்தேசத்திற்குப் புதியவனாகையாலும் இந்தக் கேஸைப்பற்றி நேற்றையதினம் வரையில் எனக்கு ஒன்றும் தெரியாததாலும் தயவுசெய்து இந்தக்கேஸை இரண்டொரு நாளைக்கு நிறுத்திவைக்கும்படி தங்களுடைய மேலான கனத்தை கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாஜிஸ்திரேட் — இந்தக் கேஸை நிறுத்திவைப்பது ஆகாத காரியம். ஆகையால் சாக்ஷிகளை விசாரிக்கப் போகிறேன் உட்காரும். உமக்கு சமயம் வாய்க்கும்போது பேசலாம்.

முதலில் ரஹிமன்னிஸ்ஸாவின் வாக்கு மூலங்களை யெல்லாம் படித்து அவைகளை தாக்கல் செய்துக் கொண்டார்கள். இரண்டாவது அப்துல்காதர் கூப்பிடப் பட்டான். அவன் தான் குற்றஞ் சாட்டப்பட்டவனிடமிருந்து கொண்டுவரப்பட்ட மிட்டாய்களை வாங்கிக் கொண்டதாகவும் அதை ஓர் மாமாஜி கையில் கொடுத்ததாகவும் அவள்தானிப்பொழுது கிணற்றில் கிடந்ததாகவும் சொன்னான். இவைகளெல்லாமலும் அவளிறப்பதற்காகத் தானே கிணற்றில் விழுந்ததாகவும் இதற்குக் காரணம் ஆப்ஸல்கானே யென்றும் சொல்லி சத்தியம் பண்ணினான். பிறகு ஆப்ஸல்கான் சில காரணங்கள் பற்றி ரஹிமன்னிஸ்ஸாவைக் கலியாணம் பண்ணிக் கொள்ளச் சக்தியற்றவனாயிருந்ததால் அவளை வேறொருவரும் அடையக் கூடாதென்று அவளுக்கு விஷங் கொடுத் தனுப்பினானென்றும் சொன்னான். இவைகளை யெல்லாம் தெரிந்திருக்க ஆஸ்மன்ஷாவிடம் ஏன் சொல்லவில்லை என்று கேட்டதற்கு அவன் அது தன்னுடைய வேலை யல்லவென்றும் இப்பொழுது கோர்ட்டில்கொண்டுவந்து கடவுள் முன்பாகச் சொல்லுவதுபோல் கோர்ட்டார் முன்பாகச் சொல்லும்படி கேட்டதால் நிச்சயத்தைச் சொல்லி விட்டதாகவும் சொன்னான். மிஸ்டர் வெப்ஸ்டர் அவனை யொன்றும் கேழ்க்காமலே விட்டு விட்டார்.

அடுத்த சாக்ஷி மாமாஜி கூப்பிடப்பட்டாள். அவள் வந்ததும் அப்துல்காதரைப் போலவே எல்லா வற்றையும் சொல்லிவிட்டுப் போய் விட்டாள். இவளையும் வெப்ஸ்டர் ஒன்றும் கேழ்க்கவில்லை. மாமாஜியின் சாக்ஷியங்கள் கேழ்க்கப்பட்டவுடனே கவர்ன்மெண்ட் தருப் வக்கீல் எழுந்து இந்த இரண்டு சாக்ஷிகளாலேயே ஆப்ஸல்கான் குற்றவாளி யென்பது ஏற்பட்டு விட்டதாகவும் இனி வேறு

சாக்ஷிகள் வேண்டியது அனாவசிய மென்றும் சொல்லி விட்டு உட்கார்ந்தார்.

பிறகு மிஸ்டர் வெப்ஸ்டர் எழுந்திருந்து மிஸ். கர்க்பாட்ரிக் துரைசானியை வரவழைத்து சாக்ஷி கேழ்க்க வேண்டுமென்று ஒரே பிடிவாதம் பிடித்தார்.

மாஜிஸ்திரேட் — "மிஸ்டர் வெப்ஸ்டரவர்களே! தங்களுக்கு என்னைவிட அவ்வளவு ஜாஸ்தியாய்த் தெரியுமானால் அவ்விடத்திலேன் உட்கார வேண்டும். இவ்விடத்திற்கே வந்து உட்காரலாமே. நீர் இது வரையில் பேசாமலிருந்துவிட்டீர். இப்பொழுது யாருமுமைப் பேசச் சொன்னது. கைதி குற்றவாளியென்பது ருஜுவாய் விட்டதால் அவன் தண்டிக்கப் படவேண்டும். அவனை நான் ஜெயிலுக்கு அனுப்பப் போகிறதில்லை. மூசி நதிக்கரையில் அவனைச் சிரைச் சேதம் பண்ணிவிட ஜட்ஜ்மென்ட் வாசித்து விட்டேன். இனி நான் கனம்பொருந்திய நிஜாமால் நியமிக்கப்படும்" என்று சொல்லி விட்டு உடனே எழுந்து போகத் தீர்மானித்தார். ஜனங்களும் ஆச்சரியத்துடன் திறந்த வாயை மூடாமல் பார்த்துக்கொண்டிருந்தார்கள். உடனே

மிஸ்டர் வெப்ஸ்டர் — "கனம் பொருந்திய கோர்ட்டாரவர்களே! நானிது வரையி லித்தேசத்தி லிருக்கும் நியாயஸ்தலங்களில் வாதித்ததில்லை. இப்பொழுது தாங்கள் கொடுத்த ஜட்ஜ்மெண்டு தீர்மானம் வெகு ஆச்சரியகரமாகவிருக்கிறது. இதுவரையில் கேட்கப்படாததாகவு மிருக்கிறது. நான் புதிதாகையால் கனம்பொருந்திய நிஜாமிடமிருந்தே உத்திரவு பெற்றுக்கொண்டு வந்திருக்கிறேன். இப்பொழுது தாங்கள் வாசித்தது கடைசி தீர்மானமென்றால் அதன்படி குற்றஞ் சாட்டப்பட்டவனொருபோதும்

தண்டிக்கப்படமாட்டான் என்பது நிச்சயம். ஆகையால் நானிப்பொழுதே கனம்பொருந்திய நிஜாமிடம் போகிறேன். இதுவரையில் தாங்கள் விசாரித்த சாக்ஷிகள் சொன்னது ஒன்றுவது நிஜமில்லை என்பதை நிரூபிக்க என்னால் முடியும்.''

மாஜிஸ்திரேட் — அப்படி முடியுமானால் அப்பொழுதே செய்திருக்கவேண்டும். அதைவிட்டு வாயில்வந்தபடி சொல்லுகிறாயென்ன ?

வெப்ஸ்டர் — கனம் பொருந்திய கோர்ட்டாரவர்களே! நானப்படிச் சொல்லி யிருந்தால் மன்னிக்க வேண்டும். ஆனால் தாங்கள் கொஞ்சமாவது பொய்யென்பதையும் நிச்சயமென்பதையும் அறியாமல் போனது எனக்கு மிக்க வருத்தமா யிருக்கிறது.

மாஜிஸ்திரேட் — பொய்யென்றால் ஏன் அப்பொழுதே சொல்லவில்லை ?

வெப்ஸ்டர் — "நானிதுவரையில் இந்த தேசத்திய மாஜிஸ்திரேட்டுகள் சிரைச்சேதம் செய்ய உத்திரவு பெற்றிருக்கிறார்களென்பதைக் கேள்விப்பட்டதில்லை. மேலும் தாங்கள் பொய்சாக்ஷிகளைக்கொண்டு அப்படிச் செய்தது எனக்கு மிக்க ஆச்சரியத்தை யுண்டுபண்ணுகிறது."

மாஜிஸ்திரேட் — இப்படிக்கெல்லாம் என்னிடம் மறுபடி பேசாதீர். உம்முடைய சாக்ஷிகளை ஏனிதுவரையில் கொண்டுவரவில்லை? அப்படிக்கொண்டு வராதது யாருடைய புத்தி ஹீனம்?

மிஸ்டர் வெப்ஸ்டர் — இப்படித் தாங்கள் பேசினால் எனக்கு அந்தமரியாதையைத் திருப்பிக் கொடுப்பது அசாத்தியமாகாது. இப்பொழுது இரண்டு சாக்ஷிகளிருக்

கின்றன. இவ்விரண்டுமே கைதி குற்றவாளி யல்லவென்பதை நிச்சயிக்கப்போதுமானது.

மாஜிஸ்திரேட் — அவர்களைக் கேழ்க்க இனி என்னலாகாது. நான் ஜட்ஜ்மெண்டு கொடுத்துவிட்டேன். போகவேண்டும். என்னைத் தொந்தரவு செய்யாதீர்.

மிஸ்டர் வெப்ஸ்டர் — தங்கள் கனம் இரண்டு நிமிஷமிருந்தால் இந்தக் கேஸில் சாக்ஷி சொன்னவர்கள் பொய்யரென்று காண்பிக்கிறேன்.

கொத்வால் — (கோபத்துடனெழுந்து) எப்படிக் காண்பிப்பீர் ?

மிஸ்டர் வெப்ஸ்டர் — வாயை மூடுங்கள், தாங்களிப்பொழுது வரவேண்டாம். எனக்குத் தெரியும்.

மாஜிஸ்திரேட் — சொல்லட்டும் பார்ப்போம்.

உடனே மிஸ்டர் வெப்ஸ்டர் உத்திரவு கேட்டுக்கொண்டு வெளியேபோய் மாமாஜியாகிய கிணற்றில் அப்துல் காதரால் தள்ளப்பட்டவளை அழைத்துக்கொண்டு வந்தார்.

மாஜிஸ்திரேட் — "யாரிவள் ?"

மிஸ்டர் வெப்ஸ்டர் — தயவுசெய்து தாக்கல் செய்து கொள்ளாவிட்டாலும் இவளுடைய வாக்குமூலங்களைக் கேழ்க்கவேண்டும். இவள்தான் கிணற்றில் நேற்றையதினம் அகப்பட்டவள். இவளுடைய வாக்கு மூலங்களைக் கேட்டதும் திருப்தி யடைவீர்களென்பதை நிச்சயமாய் நம்புகிறேன்.

இந்தச் சமயத்தில் அவ்விடத்திலிருந்த ஜனங்கள் கொச கொசவென்று ஒருவருக்கொருவர் பேசிக் கொண்

டார்கள். இவளைக் கண்ட வுடனே அப்துல் காதரும் மற்றொரு மாமாஜியும் என்ன காரணத்திற்காகவோ ஒரு சன்னலின் வழியாய் எகிறிக் குதித்து ஓடிவிட்டார்கள். ஆனால் அவர்கள் ஏன் அப்படிச் செய்தார்க ளென்று யாரும் கவனிக்கவில்லையே தவிர அவர்களப்படி ஓடியதை மாத்திரம் எல்லோரும் கண்ணுற்றார்கள்.

மாஜிஸ்திரேட் — "இந்தக் கேஸைப்பற்றி உனக் கென்ன தெரியும்?"

மாமாஜி — "ஐயா, நான் இப்பொழுது உண்மை தவிர பொய் சொன்னால் என்னைப் பேய் பிசாசங்களுக் கிரையாக்கி விடலாம். அல்லது என்னை நாய், நரி, காக்கை, கழுகு இவைகள் பிடுங்கித் தின்னும்படி என்ன செய்தாலும் செய்யலாம். நான் உண்மையில் அப்துல் காதரால் கிணற்றில் தள்ளப் பட்டேன். ஆஸ்மன்ஷா அவன் மீது அதிக நம்பிக்கை வைத்து அவனப்படிச் செய்யப்பட்டவனல்ல வென்று நினைக்கிறதுபோல் காண்கிறது. ஆனால் அவன் அப்படிச் செய்ததற்கு சில முக்கியமான காரணங்களுண்டு. என்னவென்றாலோ நான் என்றைக்காவது அவனுடைய குற்றங்களை வெளி விட்டுவிடுவே னென்பது தான்."

மிஸ்டர் வெப்ஸ்டர் — "சாக்ரதை. பொய் சொல்லப் போகிறாய். அப்படிச் சொல்வாயானால் நீயே யிப்பொழுது குற்றவாளி யாக்கப் படுவாய்."

மாமாஜி — "ரஹிமன்னிஸ்ஸாவை பாஷாணத்தினால் கொல்ல முயன்றவன் அப்துல் காதரே தவிர இப்பொழுது கைதியா யிருக்கப்பட்டவரல்ல."

மிஸ்டர் வெப்ஸ்டர் — "அப்புறம் சொல்லு. பயப்படாதே. ஆனால் பொய் சொல்லப் போகிறாய். அப்துல் காதர் ஏன் அவளைக் கொல்ல முயன்றான்?"

மாமாஜி — "அப்துல் காதர் பெண் வேடம் தரித்துக் கொண்டு எங்களைத் தானப்படிப் போவதை யாருக்கும் தெரிவிக்காமலிருக்கும்படி சொல்லி விட்டு, ரஹிமன்னிஸ்ஸாவிடம் போய் ஆப்ஸல்கானிடமிருந்து வந்ததாகச் சொல்லி எப்படியோ அவளுடைய வைரமணியை வாங்கிக் கொண்டு வந்து விட்டான். பிறகு எங்களிடம் வந்து ரஹிமன்னிஸ்ஸாவைக் கொன்று விட்டால் தவிர அவளந்த சமாசாரத்தை தன் தகப்பனாருக்கு வெளியிட்டு விடுவாளென்றும் அதற்கு எங்களையும் சம்மதிக்கும்படி தொந்தரவு பண்ண நாங்களும் புத்தி ஹீனத்தால் ஒப்புக் கொண்டோம். பிறகு அவன் தன்னிடத்திலிருந்த அபினித் திராவகத்தை மிட்டாயுடன் கலந்து அவளிடம் கொண்டுபோய் ஆப்ஸல்கானனுப்பியதாகச் சொல்லி கொடுத்து விட்டான். அவளதைத் தின்றவுடனே மயக்கமாய் கீழே விழுந்து விட்டாள். பிறகு ஆஸ்மன்ஷா அவ்விடம் வந்து சேர்ந்தார். அவர் வந்ததும் மிஸ். கர்க் பாட்ரிக்கை யழைக்கும்படி ஆக்யாபிக்க அவளும் வந்தாள். வெகு நேரம் கஷ்டப்பட்ட பிறகு ரஹிமன்னிஸ்ஸா உயிர்த்தெழுந்தாள். நான் மிஸ். கர்க் பாட்ரிக்கினிடம் ரஹிமன்னிஸ்ஸா ஆப்ஸல்கானை விரும்பியதையும், பாஷாணங்கொடுக்கப்பட்டதையும் சொல்லிவிட்டேன். இதை மற்றொரு மாமாஜி கேட்டுக்கொண்டிருந்தாள். அவள் உடனேபோய் அப்துல்காதரிடம்சொல்ல அவன் அன்றையதினம் என்னை வெகுவாகத்திட்டினான். நானும் என்னால் கூடியவரையில் அவனைச் சமாதானப்படுத்திப் பார்த்

தேன். ஆனால் அது முடியாததாயிருந்தது. அன்று இராத்திரி அவன் என்னை சற்று வெளியேபோய் வரலாமென்று கூப்பிட நான் சம்மதித்து அவனுடன் போனேன். அந்தக் கிணற்றண்டையில் போனதும் அவன் என்னை அலக்காகத்தூக்கி கிணற்றிலெறிந்து விட்டான். நான் முழுகிமுழுகிக் கிளம்பிக்கொண்டு நீந்தத்தெரியாதவளாயும் கரையேறச் சக்தியற்றவளாயுமிருக்கக் கடைசியாக ஒரு கல்லைப்பற்றிக் கொண்டேன்."

மாஜிஸ்திரேட்—"உன்னை யார்வெளியிலெடுத்தது?"

மாமாஜி — "ஐயா, நான் இப்படியிருக்க இரவெல்லாம் கத்தியும் ஒருவரும் வந்து என்னை எடுக்கவில்லை. பொழுது விடியும் வரையிலும் அந்த கல்லைப் பிடிப்பதும் சருக்கி விழுவதுமாகக் கிடந்தேன். உதயமான பிறகு கூச்சலிடவே யாரோ "யாரங்கே?" என்று கேட்டார்கள். உடனே மறுபடி கைநழுவி விழுந்து விட்டேன். பிரக்ஞை தவறிப்போயிற்று. கொஞ்சம நேரம் கழித்துப் பார்க்க கரையின் பேரில் கிடக்கக்கண்டேன். என்னைச் சுற்றிலும் ஜனங்களும் அவர்களில் பிராஜ் ஆலியுமிருந்தார்கள்.

மாஜிஸ்திரேட் — அதெல்லாம் கிடக்கட்டும். கேட்பதற்கு பதில் சொல்லு. உன்னைக் கரைக்கு எடுத்து விட்டது யார்?

மாமாஜி — "பிராஜ் ஆலி யென்றே சொன்னார்கள்."

மாஜிஸ்திரேட் — "நீ சொல்வது பெரியகதையாக விருக்கிறது. ஆனாலதைப்பற்றி யோசனை பண்ணவேண்டும். அப்துல் காதர் பாஷாணங் கலந்த மிட்டாய் கொடுத்தா னென்பது உனக்கெப்படித் தெரியும்?"

மிஸ்டர் வெப்ஸ்டர் — அது சுலபமாக ருசுவாகிறது. என்று சொல்லிக்கொண்டே வெளியேபோய் கடைக்கார ஞெருவனை யழைத்துக் கொண்டுவந்து அவன் மூலமாய் அப்தல் காதர் பாஷாணம் வாங்கினதையும் அதைக் கடைக்காரன் கணக்கு புஸ்தகத்தில் குறிப்பிட்டிருக்கிறு னென்பதையும் தெரிவித்தார்.

மாஜிஸ்திரேட் — 'நான் 'ஜட்ஜ்மெண்டு' படித்தாய் விட்டதால் இனி அதைத்திருப்புவது மாளாது என்று சொல்ல ஜனங்களின் கண்கள் சிவந்துவிட்டன. கோபாக் கிராந்தர்களாஞர்கள். உடனே மாஜிஸ்திரேட் இனியிருப் பது தகுதியன்றென்று எழுந்துபோய் விட்டார். பிறகு சிலர் பூமாலைகளைக் கொண்டுவந்து மிஸ்டர் வெப்ஸ்டர் கழுத்தில் போட்டார்கள். அவரைச்சுற்றி ஜனக்கூட்ட மதிகமாயிற்று. ஆப்ஸல்கான் காவலில் கொண்டுபோகப் பட்டான்.

சற்றுநேரம் சென்றதும் கோர்ட் வாசலில் ஓர் வண்டி வந்து நிற்க மாமாஜி சட்டென்று ஓடி கோச்மானைப் பார்த்து உள்ளே யாரிருக்கிறதென்று கேட்டாள். அவன் ரஹிமன்னிஸ்ஸாவும் மிஸ். கர்க் பாட்ரிக்கும் என்று தெரி வித்த வுடனே மறுவார்த்தை யில்லாமல் கதவைத் திறந்து கண்களில் நீர் ததும்ப அடக்க முடியாத வருத்தமுடைய வளாகத் தோன்றிஞள். உடனே கர்க் பாட்ரிக் "என்ன தண்டனையாகி விட்டதோ?" என்று கேட்க, "ஆமாம்" என்று சொன்னதும் ரஹிமன்னிஸ்ஸா "அப்படிச் சொல் லாதே. என்னெதிரி லப்படிச் சொல்லாதே" என்று கத ரிக் கொண்டே மிஸ். கர்க் பாட்ரிக்கின் பேரில் சாய்ந்து மூர்ச்சையாய் விட்டாள்.

இருபதாம் அத்தியாயம்.

மாஜிஸ்திரேட் டவர்களுடைய பங்களாவைச் சுற்றி போலீஸ்காரர் காவல் செய்துக்கொண் டிருக்கிறார்கள். தெருவில் போகும் ஜனங்கள் என்ன சமாசாரமென்று தெரிந்துக்கொள்ளும் பொருட்டு சிலர் ஜவான்களையும், சிலர் ஒருவரை யொருவர் கேட்டுக் கொண்டும் திடீரென்று என்ன காரணத்திற்காக முற்றுகை போட்டதுபோல் காவல் செய்துக்கொண் டிருக்க வேண்டுமென்று ஆச்சரியப் பட்டுக்கொண்டும், இன்னும் சிலர் தங்களுடைய ஆச்சரியத்தின் பொருட்டு திறந்த வாயை மூடாமல் வாயில் கொசு புகுவதும் தெரியாமல், இரண்டு கைகளையும் பின்னால் சேர்த்துக் கட்டினபடியும் நின்றார்கள். ஆனால் சேவகர்களோ இவர்கள் யாவருக்கும் பதில் கூறாமல் அவ்விடத்தில் நின்றவர்களை யெல்லாம் துறத்திக் கொண்டே யிருந்தார்கள். மாஜிஸ்திரேட் டவர்களிடம் வேலையாக வந்தவர்கள்கூட உள்ளே விடப்படவில்லை.

இவைகளிப்படி யிருக்க மிஸ். கர்க் பாட்ரிக் துரைசாணியின் வண்டியும் அவ்விடம் வந்து சேர்ந்தது. வண்டியைக் கண்டதும் காவற் சேவகர்களோடிவந்து யாராயிருந்தாலும் உள்ளே போகப்படாது என்று வண்டிக்காரனைப் பார்த்து திருப்பிக் கொண்டு துரிதமே செல்லும்படி சொன்னார்கள். வண்டியிலிருந்த துரைசாணி எவ்வளவு சொல்லியும் அவர்கள் கேழ்க்க வில்லை. அதன் பிறகு துரைசாணிக்குக் கோபம் பிறந்து முகம் சிவக்க, கண்கள் துடி துடிக்க "நான் யாரென்று உங்களுக்குத் தெரியுமா?"

என்றாள். "ஆம் தெரியும். யாராயிருந்தாலும் சரி. உத்திரவுப்படி உள்ளே போகக்கூடாது. இனி எங்களுக்கு பேசக் கூட சாவகாசமில்லை. வண்டியைத் திருப்ப வேண்டியது தான். ஆகட்டும்."

"நான் ஆங்கில வைத்தியினி. இப்பொழுது உள்ளே விடாமல்போனால் அனேக கஷ்டங்களுண்டாகும். பிறகு அவைகளுக்கெல்லாம் நீங்களே ஜவாப்தாரராகவேண்டியிருக்கும். ஆகையால் இந்தக் கடிதத்தை மாஜிஸ்திரேட்டவர்களிடங் கொண்டுபோய்க் கொடுங்கள் யாராவது," என்றாள்.

உடனே அவர்களி லொருவன் அருகில் வந்து "ஆ அப்படியா! நீங்கள்தானா யாரோவென்று பார்த்தேன். ஆனால் தங்களுக்கு உள்ளே சம்பவித்த தின்னதென்று தெரியும்போ லிருக்கிறது?"

"ஆமாம் தெரியும். இல்லையேல் இவ்வளவு அவசரமாக நான் ஏனிவ்விடம் வரவேண்டும்."

"ஆனால் இப்பொழுது உள்ளே போகக் கூடியவர்களொருவருமில்லை. வேலைக்காரர்களெல்லோரும் நேற்றே ஓடிவிட்டார்கள். நாங்களுமுள்ளே போகக்கூடாதென்று உத்திரவு."

"கிடக்கட்டும் இப்பொழுது நானுள்ளே போகவேண்டும். என்ன சொல்லுகிறீர்கள்" என்று கேட்க ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு "ஆனால் சரி. போகட்டும். வண்டியை மாத்திரம் வெளியிலேயே விட்டு விட்டுப் போகவேண்டும்" என்று ஒருவன் சொன்னான்.

இதைச் சொன்னவுடனே மிஸ். கர்க் பாட்ரிக் வண்டியைத் திரந்துகொண்டு துரிதமாக உள்ளே சென்றாள். அவ்விடத்திலோ யாரையுங்காணோம். வேலைக்காரர்களைக் கூப்பிட்டாள். பதில் காணோம். என்ன சமாசாரம்? மாஜிஸ்திரேட்டவர்கள் கோர்ட்டிலிருந்து வரும்பொழுது உடம்பில் யாதொரு பாதையுமில்லாமல் வந்தார். திடீரென்று என்ன வந்து விட்டது. என்று நினைத்துக் கொண்டே நான்கு பக்கங்களிலும் சுற்றிச்சுற்றிப்பார்த்தாள். யாரும் அவள்கண்ணுக்குத் தென்படவில்லை. ஆனால் பெருமூச்சு மாத்திரமொன்று கேட்டது. அது அவளுடைய செவிக்குட் பிரவேசித்தவுடனே காலம் கிட்டி விட்டதென்று தெரிந்துக் கொண்டாள்.

சற்று நேரம் யோசித்த பிறகு எப்படியாகிலும் உள்ளே போய்ப் பார்க்க வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டு உள்ளே நுழைந்தாள். மாஜிஸ்திரேட்டவர்கள் தரையின் மீது பாய், தலையணைகூட யில்லாமல் அனாதரவாய் விட்டுவிடப் பட்டிருந்தார். உடனே பக்கத்திலிருந்த ஓரைக்குட் சென்று தன் கைக்குட்டையை நனைத்துக் கொண்டு அவ்விடம் வந்து நரகாவஸ்தை பட்டுக் கொண்டிருக்கும் ஐயாவிடம் வந்து அவர் தலைமீதும், முகத்தின் மீதும் அதை ஒற்றினாள். பிறகு நாடி எப்படி யிருக்கிறதென்று கையைப் பிடித்துப் பார்த்தாள். நிமிஷத்துக்கு நிமிஷம் பலஹீனத்தை யடைந்துக்கொண் டிருப்பதைக் கவனித்தாள். தன்னால் கூடியவரையில் அவரை உயிர்ப்பிக்க வேண்டிய வழிகளைத் தேட வேண்டுமென்று கீழே உட்கார்ந்து அவருடைய சிரசைத் தூக்கித் தன் மடிமீது வைத்துக் கொண்டு தன்னிடத்தி லப்பொழுதிருந்த மருந்துகளில் சிலவற்றை உபயோகப் படுத்த அவர் கண்ணைத்

திரந்து "ஆ........நீயா? என் அழகிய.....கண்ணே...... என்னைக்..........காப்பாற்று..........பிராணன் போய்க் கொண்டே யிருக்கிறதே..........ஆ.........என்ன செய் வேன்," என்றார்.

என்ன செய்யலாம். வருவது வந்தே தீரும். வரு வனவற்றை யெல்லாம் அனுபவித்துதானுகவேண்டும். ஆனாலும் பயப்படவேண்டாம், என்றாள் கர்க் பாட்ரிக். வைத்யர்கள் பிராணன் போகும் தருணத்திலும் தைரியத் தையே சொல்லுவார்கள் என்பது இதனால் விளங்கு கிறது. மேலும் அவர்கள் அப்படித்தான் சொல்ல வேண்டும். தைரியம் கொடுப்ப தவசியம்.

மாஜிஸ்திரேட் — ஆப்ஸல்கானைக் கொல்ல முயன்ற பாதக.....முன்னைச் சேருகிறது..........அனியாயமாக அவனைக்........கொல்லமுயன்றாய்........இதை......... நீயுமனுபவிக்க வேண்டும்.

"அவனை நான் கொல்லவில்லை. நீ யன்றோ கொல் லும்படி தீர்ப்புசெய்தது" என்று மனச்சஞ்சலத்தோடு கூறினள்.

"உன்னாலல்லவோ?.........! நீபோ. நானிப் படியே சாகட்டும்...........உனக்கும்.........வந்து விட் டது."......என்று சொல்லிக்கொண்டே தலையைத் தரை யின்மீது சாய்த்தார். பிராணன் போய்விட்டது. உடனே மிஸ். கர்க் பாட்ரிக்கெழுந்து வெளியில் வந்து அவ்விடத் திலிருந்த சிலருக்கு சமாசாரத்தைத் தெரிவித்துவிட்டு பிராணன் போகும் தருவாயில் சாபத்தைப் பெற்றுக் கொண்டதைப்பற்றி நினைத்துக்கொண்டே போய்விட் டாள். வீட்டண்டையில் அப்துல்காதரும், மாமாஜியும்

கார்த்துக்கொண்டிருந்தார்கள். மிஸ். கர்க் பாட்ரிக் குள்ளே சென்றதும் அவர்கள் அவளிடம் சென்று தாங்கள் ஆஸ்மன்ஷா பஹதூரால் வெகுவாகக் கஷ்டப்பட்டதாகவும், கஷ்ட மொருபக்கமிருக்க அரண்மனையிலிருந்தே துரத்தப்பட்டதாகவும் ஆகையால் தங்களுடைய நல்ல பெயருக்கே ஹானிவந்துவிட்டதென்றும் அவர்களை அந்த ஸமயம் ஆஸ்மன்ஷாவினிடமாவது ரஹியன்னிஸ்ஸாவினிடமாவது சொல்லிக் காப்பாற்றும்படியும் வேண்டிக் கொண்டார்கள். மிஸ். கர்க் பாட்ரிக் இவைகளுக்கெல்லா மென்ன காரணமென்று கேட்க, தாங்கள் சாட்சி சொல்லிவிட்டு அரண்மனைக்குப் போவதற்குள் மற்றொரு மாமாஜி போய் அவரிடம் இல்லாதவைகளை யெல்லாம் சொல்லி தங்கள்மீது குற்றஞ் சாட்டிவிட்டதாகத் தெரிவித்தார்கள்.

இவைகளை யெல்லாம் கேட்டதும் மிஸ். கர்க் பாட்ரிக் அப்படியே தான் அவர்களுக்கு வேண்டிய உபகாரத்தைச் செய்வதாகச் சொல்லிக்கொண் டிருக்கும்பொழுது அவ்விடம் போலீஸ் உத்தியோகஸ்தன் ஒருவன் வந்து சேர்ந்தான்.

"ஆப்ஸல்கானுக்கு சிரசாக்கினை நடக்கப்போகிற நல்ல சமாசாரத்தைத் தெரிவிக்க வந்ததுபோல் இருக்கிறது" என்றாள்.

போலீஸ் உத்தியோகஸ்தன் தலையை யசைத்துக் கொண்டே, "இல்லை, ... நானுமப்பபடித்தான் நினைத்தேன். ஆனால் அவனை விட்டுவிடும்படி தீர்மானமாகி விட்டது."

மிஸ். கர்க் பாட்ரிக் ஆச்சரியத்துடன் "என்ன! அப்படியா! விட்டுவிட்டார்களா?" என்றாள்.

"ஆம். அந்த ஆங்கில பாரிஸ்டர் துரையவர்கள் நிஜாமிடம் வெகுநேரம் வரையில் ஏதோ பேசிக்கொண்டிருந்தார். நிஜாமும் அவரிடத்தில் மிக்க சந்தோஷத்தோடு கூடியிருந்ததாகத் தெரிகிறது. ஏனென்றால் ஆதி முதல் அந்தம்வரையில் அவர் சிரித்த முகமாகவே யிருந்தார். கடைசியாக தானே தன் கைப்பட ஓர் சீட்டெழுதி ஜெயில் காவலாளனுக்கு அனுப்பினார். இதற்குள்ளாக ஜெயிலைச்சுற்றி எவ்வளவோ எண்ணிக்கையற்ற ஜனக்கூட்டம் கூடிவிட்டது. அவர்களைப் பார்த்தால் சுவரை யிடித்துக்கொண்டு உள்ளே பிரவேசித்து ஆப்ஸல்கானைத் தூக்கிக்கொண்டு வந்துவிடுவார்கள்போலிருந்தது. விட்டுவிட்டவுடனே அவனை யோர் பொன் நாற்காலியி லுட்காரவைத்து சுவாமியை வீதிதோறும் உற்சவகாலத்தில் கொண்டுபோவதுபோல வாத்தியகோஷங்களோடும், ஜனங்களுடைய குதூகலத்தோடும் அழைத்துக்கொண்டு போனார்கள். இந்த சமாசாரத்தைத் தெரிவிக்கும் பொருட்டு நான் இவ்விடம் ஓடிவந்தேன்."

"நீ சொல்வதெல்லாம் ஆச்சரியகரமாக விருக்கிறது. நியாயஸ்தலத்தில் தீர்மானமாகிவிட்டது சிரசாக்கினைக்கு ......பிறகும் விடப்பட்டானா !"

"ஆமாம்."

"சரி பிறகு யோசிக்கலாம். இப்பொழுது நீ போய் வா." என்று சொன்னவுடனே போலீஸ் உத்தியோகஸ்தன் தன் கஷ்டத்துக்கு தனக்கோர் வெகுமானமும் கொடாததால் மன வருத்தத்தோடு போய் விட்டான்.

அவன் போனதும் மிஸ். கர்க் பாட்ரிக் அதைப்பற்றி யொன்றும் பேசாமல் மாமாஜியையும் அப்துல்காதரை யும் பார்த்து, "நான் ரஹிமன்னிஸ்ஸாவை வந்து பார்க்கி றேன். நீங்கள் மறுபடி இன்று மத்தியானம் இவ்விடம் வாருங்கள்," என்று சொல்லிவிட்டு அவர்களையும் அனுப்பிவிட்டாள்.

இருபத்தோரும் அத்தியாயம்.

பத்து நிமிஷம் கழித்ததும் மிஸ். கர்க் பாட்ரிக் ஆஸ் மன்ஷாவின் அரண்மனை வாசலண்டை வந்திறங்கி பர பரப்புட னுள்ளே சென்று ரஹிமன்னிஸ்ஸா ஓர் மாதாந் தரப்பத்திரிகை (journal) வாசித்துக்கொண் டிருந்ததைப் பார்த்து சற்று நின்று 'ஓர் நல்ல சமாசாரம் கொண்டு வந் திருக்கிறேன். ஓர் நல்ல சமாசாரம் கொண்டு வந்திருக்கி றேன்' என்றுறத்திச் சொல்ல அவளிதைக் கேட்ட வுடன் தலையைத் தூக்கிப் பார்த்ததும் "உன்னுடைய ப்ரிய நேயன் ஆப்ஸல்கான் விட்டுவிடப் பட்டான்" என் னும் சமாசாரத்தைத் தெரிவித்தாள்.

ரஹிமன்னிஸ்ஸா யாதோர் ஆச்சரியமு மில்லாமல் சாதாரணமாகவே "ப்பு இவ்வளவுதானா. இது எனக்கு அப்பொழுதே தெரியுமே. இதுவரையில் நான் வழக்கப் படி அல்லாவை அவனிடம் ஞாயப்பிரகாரம் நடக்கும்படி பிரார்த்தித்துக்கொண் டிருந்தேன். அவர் அந்த கொடூர மான மனதுடைய மாஜிஸ்திரேட்டினிடம் அவருடைய கொடுமைக்குத் தகுந்தபடியே நடந்துக்கொள்வாரென்

பதும் நிச்சயம்" என்றாள். உடனே மிஸ். கர்க்பாட்ரிக் "மாஜிஸ்திரேட்டவர்க ளிறந்துவிட்ட சமாசாரந் தெரியுமோ?" என்று கேட்க, ரஹிமன்னிஸ்ஸா "ஆ அப்படியா! ஐயோ பாவம்!" என்று சொல்லிவிட்டு மேலும் "ஆகா! கடவுள் நன்மை செய்கிறவர்களுக்கு நன்மையும் தீமை செய்கிறவர்களுக்குத் தீமையும் விளைத்து அவரவர்களுக்குத் தகுந்தபடி நடக்கிறாரல்லவா! அதற்கு இது ஒரு திருஷ்டாந்தம்போல் காணப்படுகிறது. சரி அவரெப்படி யிறந்தார்?"

மிஸ். கர்க்பாட்ரிக்—"அவர் 'ப்ளேக்'கினால் கொண்டுபோகப் பட்டார்."

ரஹிமன்னிஸ்ஸா—"ஆகா! என்ன கடவுள்! பிரத்தியக்ஷமாக வல்லவோ காண்பித்து விட்டார். இஃதேதான் உலகில் பிறருக்கு உபகாரம் செய்யாமல் போனாலும் அபகாரம் செய்பவர்களின் கதி. அவர்களிடத்தில் கடவுள் இப்படிதான் நடந்துகொள்வாரென்பது கண் முன்னால் தோற்றுகிறது. ஆகையால் நாமென்ன செய்தாலும் பிறருக்கு நன்மை யுண்டாகும்படிக்கும் அவர்களுக்கு சந்தோஷத்தை யுண்டு பண்ணும்படிக்குமல்லவோ செய்ய வேண்டும்........" என்று சொல்லிக் கொண் டிருக்கும் பொழுதே அவளுக்கு என்று மில்லாத சந்தோஷ முண்டாயிற்று. இதையவள் வெளியில் காண்பிக்கா விட்டாலும் மனதிற்குள்ளேயே அநுபவித்துக் கொண் டிருந்தாள்.

மிஸ். கர்க்பாட்ரிக் இப்பொழுது இதற்கென்றே வந்தவளாதலால் ரஹிமன்னிஸ்ஸாவின் முகத்தை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்து,

"அடுத்தது காட்டும் பளிங்குபோல் — நெஞ்சங்
கடுத்தது காட்டும் முகம்"

என்கிறபடி அவளுடைய முகத்திலிருந்து மனதிலிருப்பதையறிந்து, பொறுமையோடு "ஆனலிப்பொழுது நீயவனை வெகு லகுவில் கண்டு உன் மனோபீஷ்டத்தை நிறைவேற்றிக் கொள்ளலாம் என்று நினைக்கிரதுபோலிருக்கிறது? அப்படி நினைப்பையானல் இவ்வளவு கஷ்டமென்னத்துக்கு. கோஷா என்னும் மதக் கட்டை நீக்கிக் கொண்டு வெளியே போய் ஆப்ஸல்கானோடு சேர்ந்திருக்கிறதுதானே. இது வெகு சுலபமான காரியமன்றோ? இதைவிட்டுக் கடவுள் கடவுளென்று நாம் நம் கண்ணால் காணக்கூடாத ஓர் வஸ்துவின்மீது பழியைச் சுமத்திக் கொண்டிருப்பானேன். இவைகளை யெல்லாம் விட்டு வெளியே போய்விட்டையேல் உன்னிஷ்டப்படியுமிருக்கலாம். அவனிடத்தில் உனக்குள்ள அன்பின் அளவு இவ்வளவு என்பதையுமவனுக்குத் தெரிவிக்கலாம்'' என்று வெறுப்புடன் சொல்ல ரஹிமன்னிஸ்ஸா தான் அப்படிப்பட்ட காரியமொன்றும் செய்யவேண்டாமென்றும் கடவுளே தன்மீது கருணை வைப்பாரென்றும் "அவனன்றி ஓரணுவு மசையா'' தாதலால் 'எல்லாம் அவனுடைய பாரமேயல்லாது வேறல்ல' என்றும் பொறுமையுடன் சொன்னாள்.

மிஸ். கர்க் பாட்ரிக் இதைக் கேட்டவுடனே, "நீ இம்மாதிரி கடவுள் கடவுளென்று பித்து பிடித்தவளாகயிருப்பதால் நீ மோசம் போகிறாய் என்பதை நன்றாக எடுத்துக் காட்டவும் வேண்டுமோ? இதுவரையில் நடந்த இக்காரியங்களுக்கெல்லாம் காரணம் யார்? அப்ஸல்கானன்றோ? அவனாலன்றோ உன் தகப்பனருக்கு இக்கஷ்டங்க

ளெல்லா முண்டானது? அவனாலன்றோ உன்னுடைய தேக ஸௌக்கியத்துக்கும் பங்கமுண்டானது? இதுக ளெல்லா முனக்குத் தெரிந்த விஷயங்களன்றோ? ஆகை யால் நீ காரணங்களை யெல்லாம் கட்டிவைத்துவிட்டு உன் மீது சிறிதேனு மாசையே யில்லாத ஆப்ஸல்கான்மீது காதல் கொண்டிருப்பது புத்தியீனமன்றோ? அவனுக்கு உன்மீது ஆசையேயில்லை என்பது எனக்கு எப்படித் தெரியுமென்று கேட்பையேல் அவன் எனக்கு எழுதி யிருக்கும் கடிதத்தைப்பார். ஒருவேளை நீ யவனுடைய கையெழுத்தை எப்பொழுதும் பார்த்திருக்கமாட்டாய். இருந்தபோதிலும் காண்பிக்கிறேன் பார்," என்று சொல்லி தானே எழுதின ஓர் கடிதத்தை யெடுத்துக் கொடுத்தாள். அதில் பின் வருமாறு எழுதி யிருந்தது.

"நீ என்னைப் பற்றியும் ஆஸ்மன்ஷாவின் குமாரத்தி யைப் பற்றியும் வெகுவாக பயித்தியக்கார வார்த்தைகள் ஜனங்கள் பேசிக்கொள்வதைக் கேட்டிருக்கலாம். நீ அவ்விடத்துக்கு அடிக்கடி போகிறவளாகையால் தயவு செய்து இந்த கடிதத்தை யவளுக்குக் காட்டுவாயென்று உனக்கு எழுதுகிறேன். அவள் என்னை நினைத்து இனி மேல் வருந்தவேண்டாம். எனக்குக் கல்யாணமாகி விட்டது........... ....,........."

ஆப்ஸல்கான்.

மிஸ். கர்க் பாட்ரிக் — "இப்பொழுதாவது நான் சொல்வதெல்லாம் நிச்சயந்தான் என்பது தெரிகிறதா?"

ரஹிமன்னிஸ்ஸா — "நீ என்ன சொன்னாலுஞ் சரி. நான் அவனை விரும்பினவள் விரும்பினவள் தான். தயவு செய்து இந்தக் கடிதம் என்னிடத்தில் இருக்கும்படி உத்

திரவு கொடு. நானவனை இந்த ஜென்மத்தில் இவ்வுலகத்தில் காணவிட்டாலும் இன்னொருவுலகத்திலாவது காணக்கூடும். அப்பொழுது நான் அவனைச்சேருவேன். நீ அங்கு வருவையோ? ஒருக்காலுமாகாது," என்று தான் சொல்லுவதின்னதென்றே தெரியாமல் பதில் கூறினாள்.

மிஸ். கர்க்பாட்ரிக்—"மற்றொரு உலகமிருக்கட்டும். இவ்வுலகத்தில் என்னெதிரில் நீங்கள் இருவரும்........"

ரஹிமன்னிஸ்ஸா — "கிடக்கட்டும். தயவு செய்து என்னைத் தனியாகயிருக்க உத்திரவுகொடுக்கக் கேட்டுக் கொள்ளுகிறேன். போதும் இதுவரையி லுன்னுடன் பேசினது," என்று சொல்லிக்கொண்டே எழுந்து விட்டாள். மிஸ். கர்க்பாட்ரிக் சொல்லமுடியாத வருத்தத்தோடு எழுந்து வேகமாய்ச் சென்று விட்டாள்.

இவள் சென்றவுடனே ஒரு மாமாஜி தன்னை கிணற்றில் தள்ளின அப்துல்காதரிடம் தப்பித்துக்கொண்டு அலறியழுதவண்ணமோடிவந்து உள்ளே நுழைந்து "எஜமானியே! என்னை மன்னிக்கவேண்டும் மன்னிக்கவேண்டும். என் எஜமானியின் முகத்தைப் பார்க்கக்கூட எனக்கு வெட்கமாயிருக்கிறது. நான் தெரியாமல் புத்திஹீனத்தால் பல காரியங்களும் செய்துவிட்டேன். தங்கள் காலின் கீழிருக்கும் புழுவைப்போல் பாவித்து என்னை மன்னிக்கவேண்டும் மன்னிக்கவேண்டும்." என்று பலவிதமாக வேண்டிக் கொண்டாள். ரஹிமன்னிஸ்ஸா ஒன்றும் தெரியாமல் "என்ன குற்றம் செய்தாய், நான் உன்னை மன்னிப்பதற்கு?"என்று கேட்க அவளும் "சொல்லொணாத குற்றங்கள் செய்திருக்கிறேன். மன்னிக்க

வேண்டும் பிறகு சொல்லுகிறேன்." என்றாள். ரஹிமன்னிஸ்ஸா மன்னித்தேனென்று சொன்னதும் நடந்த சங்கதிகளையெல்லாம் ஆதியோடந்தமாய்ச் சொல்லி அவள் காலில் வீழ்ந்தாள்.

"இப்பொழுது என்னைக் கொன்றாலும் கொல்லுங்கள். இஷ்டப்படி என்னசெய்தாலும் செய்யுங்கள். நான் பரிதாபமே கிடையாத கொலைத்தொழில் புரிந்தவளானேன். என்னை என்னசெய்தாலும் தீராது," என்று கதறினாள்.

ரஹிமன்னிஸ்ஸா — "அழாதே. பொறு. போனது போகட்டும். உன்னுடைய பண ஆசையானது உன்னை அப்படிக்கெல்லாம் செய்யும்படி செய்துவிட்டது. நான் மன்னித்து விட்டேன். கடவுளை மன்னிக்கும்படி வேண்டிக்கொள்ளு. போகட்டும். மற்றவளெங்கே?"

மாமாஜி — "அவள், 'பிளேக்'கினால் பீடிக்கப்பட்டிருக்கிறாள். இனி பிழைக்கமாட்டாள். அவள் மாத்திரமல்ல. அப்துல்காதருந்தான்."

இதைக் கேட்டதும் ரஹிமன்னிஸ்ஸா மிகவும் பரிதாபப்பட்டு கடவுளை தியானித்துக்கொண்டே சாய்ந்துவிட்டாள்.

3990

இருபத்திரண்டாம் அத்தியாயம்.

"பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ"

கடைசியாக ஒருநாள் ஆஸ்மன்ஷா ஜெனரலுக்கு வாக்குக் கொடுத்தபடி வன போஜனம் செய்யும்படி தீர்மானித்தார்கள். இப்படி வன போஜனம் செய்வதற்குக் காரணம் இன்னதென்று முன்னமே யறிந்திருக்கலாம். இது ரஹிமன்னிஸ்ஸா உயிர்த்தெழுந்ததைப்பற்றியே தவிர வேறல்ல. வன போஜனம் வெகு விமரிசையாயும், பிரபலமாயும் நடத்தப்பட்டது. இதற்கு அநேக பெரிய பிரபுக்கள் வந்தார்கள். ஆஸ்மன்ஷா அரண்மனை எல்லா தேசத்துக்கொடிகளாலும் நிறைந்திருந்தது. தோட்டத்துக்குப் போகும்வழிகளில் உயர்ந்த கொம்புகள் நாட்டப்பட்டு அவைகளின் உச்சிகளிலிருந்து கொடிகள் அலைந்துக்கொண் டிருந்தன. அவைகளைப் பார்த்தால் அதி உல்லாசமாய்க் காற்றிலலைந்துக் கொண்டிருப்பதுபோல் தோன்றிற்று. வாசற்படிகளோ பலவித புஷ்பமாலைகளாலும் இலைகளாலும் அலங்கரிக்கப் பட் டிருந்தன. எங்கு பார்த்தாலும் நறுமணம் வீசிற்று. இதைப்பற்றி சற்றுநேரம்கவனித்தால் புஷ்பங்களைச்சுற்றியிருந்த காற்றானது அவைகளின் மணத்தைக் கவர்ந்தது போல் தோன்றிற்று. அரண்மனை புஷ்பங்களால் மாத்திரம் அலங்கரிக்கப் படவில்லை. பல வர்ணங்களோடு கூடிய கொடிகளால் மாத்திர மலங்கரிக்கப் படவில்லை. எல்லாவற்றிற்கும் மேலானதும், சிறந்த அழகு பொருந்தியவையும், இலக்ஷ்மியைப்போல் பாவிக்கப் படுவதுமான விளக்குகளாலும் நிறைந்திருந்தது. இவ்விளக்குகளோ சாமா

ன்னியமானவை யல்ல. அதி விநோதத்தை விளைப்பன வும், பார்ப்பவர் மனத்தை மயக்கச் செய்வனவுமான இவ்விளக்குகள் அவ்விடத்திற்கு வந்தவர்களுடைய மன துகளைக் கவர்ந்து, பட்டிக்காட்டான் பட்டணங்களில் சென்று, மாடுகளாலாவது, குதிரைகளாலாவது அல்லது யானைகளாலாவது இழுக்கப்படாத வண்டிகளையும், எண் ணெயில்லாமல் எறிகிற விளக்குகளையும், இயந்திரங்கள் பாடுவதையும், இன்னும் விநோதகரமான ஸாமான்களை யும் பார்த்து ஆச்சரியத்தினால் திறந்த வாயை மூடாமலும் ஈ, கொசுகு, முதலாகிய பரப்பன புகுவது தெரியாமலும் நிற்பதுபோல் நிற்கும்படி செய்தன. சில விடங்களில் பட்டுத் திரைகள் தொங்கிக்கொண் டிருந்தன. உட்கா ருவதற்கு அனேக பெஞ்சிகளும், பட்டு ஜமக்காளங்களும் விரிக்கப்பட் டிருந்தன. இவைகளின் மத்தியில் ஓர் சிம் மாஸனம் போடப்பட்டிருந்தது. அச்சிம்மாஸனமோ தங்க மயமாயிருந்தது. எதிராக ஒரு பெரிய. நீளமான மேஜையின் பேரில் கனக பாத்திரங்களில் அனேக வித மான தின்பண்டங்களும், பலவகையான இனிய கனி வர்க்கங்களும் புதிதாய்க் கரந்து காய்ச்சின பாலும் காப்பித் தண்ணீர், தேயிலைத் தண்ணீர் முதலானவை களும் வைக்கப்பட் டிருந்தன. அவ்விடத்தில் வந்திருந்த ஒருவர் ஆஸ்மன்ஷாவைப் பார்த்து இவ்வளவு பணம் வீணாய் என் செலவிட வேண்டுமென்று கேட்க, அவர் தன் புத்திரியையும் பணத்தையும் ஒத்துப் பார்க்குமிட த்து பணம் பரக்கும் தூசுக்குச் சமானம் என்று சொன்னார்.

வனபோஜனத்துக்கு ஏற்படுத்தப்பட்டிருந்த கால மோ சாயங்காலம். ஆகவே மந்தமாருதம் வீசிற்று.

சிறுவர்கள் தெருக்களில் சிரித்துக்கொண்டும், விளையாடிக்கொண்டும், குதித்துக்கொண்டுமிருக்கிறார்கள். மணி ஐந்தாயிற்று. சரியாக ஐந்தடித்ததும் மேன்மை பொருந்திய நிஜாமும் அவருடைய முதன்மந்திரியும் அவ்விடம் வந்து சேர்ந்தார்கள். இவர்களுடைய வரவு தெரிந்தவுடனே ஆஸ்மன்ஷா முதலான பெரியோர்கள் போய் அவர்களை எதிர்கொண்டழைத்துவந்து தகுந்த சிம்மாஸனங்களி லியற்றினார்கள். நிஜாமோ வெகு சந்தோஷத்தோடு தன்னுடைய கவுரவங்களையெல்லாம் காட்டாமல் சாதாரண மனிதன்போல் இவர்களுடன் கலந்து பேசிக்கொண்டும், வேடிக்கையாகச் சிரித்துக்கொண்டுமிருந்தார். அவர்களிப்படியிருக்க வெளிஜனங்கள் குதூஹலத்துடனும்இவரைப்பார்க்கவேண்டுமென்கிற பேராவலுடனும் சுவர்களின் மேலேறியும், சந்துகளில் தலைகளை நுழைத்தும் எப்பொழுது கண்ணெதிரில் வரப்போகிறார் என்கிற ஆவலோடு காத்துக்கொண் டிருந்தார்கள். இன்னும் சில ஜனங்கள் அவர் எப்பொழுது பேசப்போகிறார், பேச்சாவது காதில் படட்டும், என்று வெகு உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருக்க ஆஸ்மன்ஷா எழுந்திருந்து மேன்மை பொருந்திய நிஜாம் தன்னை யொரு பொருட்டாக எண்ணி அவருடைய வரவால் தன்னையும் தன்னைச் சேர்ந்தவர்களையும் இன்னும் அவ்விடத்தில் கூடப்பட்டிருந்த சபையோர்களையும் அளவில்லாத சந்தோஷத்துக்குள்ளாக்கினதைப்பற்றி அவரை வியந்து பேசி அவருடைய குணாதிசயங்களையும், அவருக்கு ஜனங்களின்மீதுள்ள வன்மையும், முக்கியமாக இப்பொழுது தன்மீது பாராட்டின அன்பின் முதிர்ச்சியையும் பற்றி வெகுவாகப்பேசிவிட்டுசந்தோஷத்தோடு உட்கார்ந்தார்.

உடனே மாட்சிமைதங்கிய நிஜாமெழுந்து ரஹிமன்னிஸ்ஸா உயிர்த்தெழுந்ததைப்பற்றி மிகுந்த சந்தோஷம் பாராட்டி பிறகு சற்று நேரம் ஆங்கிலேய அரசாட்சியைப்பற்றியும், முக்கியமாக க்வீன் யம்ப்ரஸ் விக்டோரியம்மைக்கு இந்த ஜனங்களின்மீதுயிருந்த ப்ரியத்தையும் பற்றி வெகுநேரம் பேசிவிட்டு ஜனங்களுக்கு அளவில்லாத சந்தோஷத்தை உண்டாக்கிஉட்கார்ந்தவுடனே ஜனங்கள் கொஞ்சநேரம் வரையில் விடாமழை பெய்வதுபோல கைகளைக் கொட்டிவிட்டு நின்றார்கள்.

பிறகு ஜெனரல்துரை எழுந்து அச்சமயத்தில் தனக்குண்டான ஆனந்தத்தை வெளியிட்டு அப்சல்கான் அப்படிப்பட்ட கொடூரமான காரியங்கள் செய்யத் துணியான் என்பது தனக்கு முன்னதாகவே தெரிந்திருந்ததாகச் சொல்லி, அதுபோலவே ருசுவானதற்கு சந்தோஷப்பட்டு, மிஸ். கர்க் பாட்ரிக்கினுடைய கல்வித்திரத்தையும், அவளுக்கு வயித்திய சாஸ்திரத்திலுள்ள பயிர்ச்சியையும் பற்றி சற்றுநேரம் பேசிவிட்டு ரஹிமன்னிஸ்ஸா உயிர்த்தெழுந்ததன்பேரில் தனக்குண்டான சந்தோஷத்தை வெளியிட்டு உட்கார்ந்தார்.

இந்த சமயத்தில் ஆப்ஸல்கான் அவ்விடம் வர சிலர் அவனை நோக்கிச் சென்று அவனுடன் பேசிக்கொண்டிருந்தார்கள். இதற்குள் மிஸ். கர்க் பாட்ரிக் வருவது தெரிந்ததும் ஜெனரல் எழுந்திருந்துபோய் அவளை யழைத்துவந்து சபையின் மத்தியிலிருத்தினார். இன்றைய தினம் நடக்கு மவைகளுக்கெல்லாம் ஜெனரலே காரணமானதால் அவர் ஆஸ்மன்ஷாவைப் பார்த்து ரஹிமன்னிஸ்ஸாவையும் அவ்விட மழைத்துக்கொண்டு வந்து எல்லோரும் பார்த்து களிக்கும்படி செய்யவேண்டு

மென்று சொல்லவே ஆஸ்மன்ஷா கோஷாக்கள் மதக் கோட்பாட்டின்படி வெளியே வரக் கூடாதாகையால் அவ் விடத்தில் வந்திருந்த துரைசானிகளெல்லோரும் அவளை போய்ப் பார்க்கலா மென்று சொல்ல அப்படியே எல்லோரும் போய்ப் பார்ந்து சந்தோஷத்தோடு சற்றுநேரம் பேசிவிட்டு வந்தார்கள். மிஸ். கர்க் பாட்ரிக் அவ்விடம் வந்ததும் சபையோரெல்லோரும் அவளைப் பற்றியும், அவளுடைய திரமையைப் பற்றியும் இன்னொரு தரம் சொல்லொணு மகிழ்ச்சியோடு பேசிக்கொண் டிருந் தார்கள். இப்படியிருக்க திடீரென்று அழைக்கப்படாத ஒரு உத்தியோகஸ்தன் நேராக அவ்விடம்வந்து மிஸ். கர்க் பாட்ரிக் இருக்குமிடந்தேடி அருகில் வந்தவுடனே

"சபையோர்களே! என்னை மன்னிக்க வேண்டும். நானிச்சமயம் உங்களுக்கெல்லா மிஷ்டமில்லாத காரியத் தைச் செய்யும்படி வந்திருக்கிறேன். இந்த சமயம் தவிர வேறு சமயம் சரியாக வாய்க்காதாதலால் உத்திர வுப்படி இவ்விடத்தில் மிஸ். கர்க் பாட்ரிக் என்னும் பெய ரோடு கூடிய இங்கிலீஷ் துரைசானியைக் காவலில் கொண்டு போவதற்கு வந்திருக்கிறேன் மன்னிக்க வேண் டும்" என்றான்.

இதைக் கேட்டவுடனே சபையோ ரெல்லோரும் ஆச் சரியத்தோடு ஒருவாக்காய் "என்ன! என்ன!" வென்று உரக்கக் கத்தினார்கள். ஆனால் வந்திருக்கும் துப்பரியோ (Detective) ஆங்கில தேசத்தவன். இவர்களுக்குப் பயந் தவனல்லன். ஆகையால் அவன் மறுபடியும் இவர்களு டைய கேள்விக்கிணங்கி "ஆம் நானென்ன செய்யட்டும். எனக்கு உத்திரவு அப்படி யாகையால் மிஸ். கர்க் பாட்

ரிக்கை காவலில் வைத்து தான் தீரவேண்டும்'' என்று தைரியமாய்ச் சொன்னான்.

ஜெனரல்—"யார் நீ? நீ யார்?"

துப்பரி—"ஐயா, நான் ஒரு துப்பறியு முத்தியோகஸ்தன். ஸ்காட்லண்டியார்டை(Scotland yard)ச் சேர்ந்தவன். நீங்கள் என்னை என்னுடைய காரியத்தைச் செய்து முடிக்கும்படி விட்டு விட்டால் நான் தங்களுக்குக் கடமைப்பட்டவனாவேன்.''

ஜெனரல்—"என்ன ? என்ன கேட்டாய்?'' என்று மருபடியும் கோபாக் கிராந்தராய்க் கேட்டார்.

துப்பரி—(கொஞ்சமும் பயமில்லாமல்) "ஒன்றுமில்லை. அந்த இளமையோடு கூடிய அழகிய துரைசானி மிஸ். கர்க் பாட்ரிக் தான் வேண்டும்'' என்று சொல்லிவிட்டு துரைசானியைப் பார்த்து "தயவு செய்து சீக்கிரம் புறப்படு. நேரமாகிறது. வெளியில் வண்டி கார்த்துக்கொண் டிருக்கிறது, ஆகட்டும்,'' என்று சொன்னவுடனே இதுவரையில் ஒன்றும் தோன்றாமல் பேசாமலிருந்த துரைசானி கோபமூண்டு, "அடே மடையா, என்னவென்று நினைத்தாய். புத்தி என்பது கொஞ்சங் கூட யில்லாமல் இவ்விடம் வந்து கண்டபடி பேசுகிறாய். என்ன ? ஜாக்கிரதை!'' என்று சொல்ல,

துப்பரி—"நீ இப்பொழுது உன் மனம்போனபடி பேசலாம். ஆனால் என்னிடமிருந்து தப்புதல் மாத்திரந் தான் கஷ்டம். என்ன செய்யலாம்.''

மிஸ்—"நான்தான் மிஸ். கர்க் பாட்ரிக் என்று உனக்கெப்படித் தெரியும்? நிச்சயமாகத் தெரியுமா ?''

என்று மனோ வியாகூலத்துடனும், பயத்துடனும் கோபத்துடனும் கேட்டாள்.

துப்பரி—“எனக்கு மிஸ். கர்க் பாட்ரிக் வேண்டியதில்லை. மிஸஸ். வெப்ஸ்டர் தான் வேண்டும். நீதான் மிஸஸ். வெப்ஸ்டர் என்பது எனக்குத் தெரியும். ஆகையால் தாமஸம் செய்யாதே. அப்படிச் செய்வையேல் உனக்குத்தான் கஷ்டம்” என்று சொல்லிக் கொண்டே தன்னிடத்திலிருந்த போடோகிறுப் படத்தை எடுத்துக் காண்பித்தான்.

மிஸ் — (பல்லை நரநரவென்று கடித்துக் கொண்டே) “என்னை எதற்காக வேண்டுகின்றாய்?”

துப்பரி — “நானிதுவரையில் மரியாதையாகவேயிருக்க வேண்டுமென்று பார்த்தேன். இப்பொழுது நீ அதைப் போக்கிக் கொண்டு என்னைக் கண்டபடி பேசிவிட்டாய். ஆனாலும் சொல்லுகிறேன். நான் முன் சொன்னபடி ஓர் துப்பரி. உன்னை இந்தியாவில் எவ்விடத்திலிருந்தாலும் பிடிக்கும்படியான உத்திரவோடு வந்திருக்கிறேன். அவ்வளவுதான் சொல்லக்கூடும். கடைசியாகச் சொல்லுகிறேன். சீக்கிரம் எழுந்திரு.”

ஆப்ஸல்கான் — “ஓகோ! அப்படியா! அறிந்தேன். பீட்ரிஸ் பாய்லி என்னும் துரைசானியால் ரிபோர்ட்டு செய்யப்பட்ட ‘போர்ஜரி’ கேஸோ? உம்.”

துப்பரி—(தலையை யசைத்துக்கொண்டே) “கண்டு பிடித்து விட்டீரே!”

மிஸ் — (ஆப்ஸல்கானைப் பார்த்து) “உன்னை யாரிப்பொழுது கூப்பிட்டது? பந்திக்கு வேண்டாமென்றால் இலை பொத்தலென்று ஏன் வருகிறாய். இப்பொழுது

மாத்திரம்...............என்ன செய்வேன் தெரியுமா? என்று கொடூரமான சிங்கத்தைப்போல் கர்ஜித்தாள்.

ஜென — "ஐயா, சற்று நில்லுங்கள். ஒரு நிமிஷத்திற்கு முன்னதாக மிஸ். கர்க் பாட்ரிக் வேண்டியதில்லை மிஸஸ். வெப்ஸ்டர்தான் வேண்டுமென்று சொன்னீரே. இவள் மிஸ். கர்க்பாட்ரிக்தானே. இவளை எப்படிப் பிடிக்கத் துணிகிறீர்?

துப்பரி — "ஐயா, மிஸ். கர்க் பாட்ரிக்கும் மிஸஸ். வெப்ஸ்டரும் ஒரே ஆசாமிதான்."

ஜென — "என்ன மடையனாயிருக்கிறாய்! எங்களுக்கு இவளை வெகுநாளாக மிஸ். கர்க் பாட்ரிக் என்று தெரியும். எங்களை முட்டாள்களாக்கப் பார்க்கிறாயா?" என்று கோபத்துடன் கேட்டார்.

மிஸ்டர் வெப்ஸ்டர் — அவ்விடம் வந்து "ஐயா உங்களுக்குத் தெரியாதென்று நான் நிச்சயமாய்ச் சொல்லுவேன். இவள்தான் மிஸஸ். வெப்ஸ்டர். என்னுடைய பூர்வ பெண்ஜாதி. யாதொரு சந்தேகமுமில்லை. ஆகையால் ஜாஸ்தியாகப் பேசவேண்டாம்."

ஆப்ஸல்கான் — "தயவுசெய்து என்னைக் கடைசியாக ஒருவார்த்தை சொல்ல உத்திரவு தரவேண்டும். என்மேல் படாப்பழி சுமத்தினதற்கும், என்னைக் காவலில் வைத்ததற்கும் இவளேதான் காரணமென்று தோன்றுகிறது மேலும்........"

மிஸ் — உக்கிரத்துடன் "உபயோகமில்லாத மடையா, இதை மாத்திரம் ஞாபகம் வைத்துக்கொள்ளு. நான் இம்மாதிரி கொண்டுபோகப் பட்டேனே என்று

சந்தோஷமுறுதே. நீ ஒருக்காலும் ரஹிமன்னிஸ்ஸாவை மணந்துகொள்ளப்போகிறதில்லை. கனவிலும் நினையாதே."

ஜெனரல் — "ஆகா! இப்படிக்கென்று முன்னமே தெரியாமல் போய்விட்டதே, சீ" என்று சொல்லிவிட்டு சோகத்தோடும் மனவெருப்போடும் வேறொரு புறமாய்த் திரும்பிக்கொண்டார். உடனே எல்லோரும் அவளுடைய கொடுமைகளை நினைத்துக்கொண்டிருக்க அவளும் எழுந்திருந்து சற்றுநேரம் வலையிலகப்பட்ட மானைப்போல் அங்குமிங்கும் பார்த்து திடீரென்று "அப்ஸல்கான்! அப்ஸல்கான்! உன்னுடைய பிரியநாயகி நெருப்பில் அகப்பட்டுக் கொண்டாள். அவளுடைய அந்தப்புரத்துக்கு நெருப்பு வைத்துவிட்டேன்" என்று கூச்சலிட்டுக்கொண்டே பயித்தியம் பிடித்தவள்போல் தெருவில் ஓடினாள். துப்பரியும் அவளுடனே கூடப்போய் அவளை வண்டியிலேற்றிக்கொண்டு போய்விட்டான். வெப்ஸ்டரும் போனார்.

அவர்கள் போனவுடனே ஜெனரல் எழுந்திருந்து தெருவில் போய் அவர்கள் காணுததையறிந்து மருபடி சபைக்குவந்து எல்லோரும் ஒருமாதிரி யிருப்பதைப் பார்த்து அவர்களுடைய மனதை மாற்ற வேறொன்றாலும் முடியாமல், நடந்ததைப்பற்றி எவ்வளவுநேரம் யோசித்தாலும் பயனில்லை. ஆகையால் பாணவேடிக்கை யாரம்பிக்கவேண்டும். அதுதான் அவர்களுடைய மனதை மாற்றி சந்தோஷத்தை உண்டாக்கக்கூடியது என்று நினைத்து அப்படியே செய்யும்படி உத்திரவு செய்தார். பாண வேடிக்கைகள் நடந்தன.

எல்லாம் முடிந்தபிறகு நிஜாமும் மற்றவர்களும் ஆஸ்மன்ஷாவிடம் வந்து வந்தனம் செய்துவிட்டுப் போகும்

சமயம் சில ஜனங்களோடிவந்து அந்தப்புரம் எதோ மத்தாப்புபட்டு தீப்பற்றிக்கொண்டதாகவும், உள்ளே ரஹிமன்னிஸ்ஸா அகப்பட்டுக் கொண்டதாகவும் சொல்லிக் கூவிக்கொண்டும், அலறிக்கொண்டு மோடிவந்தார்கள். சில ஸ்திரீகள் மார்பிலடித்துக்கொண்டு அழுதார்கள். கதறினார்கள். எல்லோரும் சற்று திகைத்துப்போய் ஒன்றும் தோன்றாதவர்களாய் நின்று விட்டார்கள். இப்பொழுது ஆஸ்மன்ஷா தன்னுடைய புத்திரியின்மேலுண்டான அன்பினால் மிக்க வருத்தப்பட்டு என்னசெய்வதென்று தெரியாமல் "ரஹிமன்னிஸ்ஸாவைக் காப்பாற்றக்கூடியவர் ஒருவருமில்லையா?" என்று கூச்சலிட, ஆப்ஸல்கான் "நான் காப்பாற்றுவேன்" என்று சொல்லிக்கொண்டே யோடி நெருப்பென்றே கவனியாமல் ரஹிமன்னிஸ்ஸாவின் அந்தப்புரம் சென்று, உள்ளே நுழைந்து அவளைத் தூக்கிக்கொண்டு ஒரே ஓட்டமாய் அவள் மீது நெருப்புபடாமலே வந்துவிட்டான். இப்படி அவளைக் குழந்தையைப்போல் தூக்கிக்கொண்டு வந்து ஸோபாவின்மீது உட்காரவைத்து அவள் மூர்ச்சையாகிக் கிடக்கவே முகத்தில் கொஞ்சம் தண்ணீர் தெளித்து அவளை எழுப்ப கொஞ்சநேரம் பொருத்து அவள் ஆப்ஸல்கானைப் பார்த்து எழுந்திருந்து அவனைக் கட்டித் தழுவிக்கொண்டு அவன்மீது சாய்ந்து "ஆப்ஸல்கான்! என்னுடைய பிரிய நாயகனே! நான் அல்லாவை வீணாகப் பிரார்த்திக்கவில்லை. கடைசியாக என்னுடைய மனோபீஷ்டப்படி அந்த அல்லாவின் தயவினால் உன்னையடைந்தேன். நான் உன்னை நேசித்ததுபோலவே நீயும் என்னை தயவுசெய்து நேசிக்க வேண்டும். இப்பொழுது நீயும் என்னை விரும்புகிறாயென்பது நிச்சயமானால் இப்பொழுதே ஒரு முத்தம்

கொடுப்பாயென்று கேட்டுக் கொள்ளுகிறேன்" என்றாள். ஆப்ஸல்கானும் மனங் கேளாதவனாய் என்ன வந்தாலும் வரட்டுமென்று தைரியத்தோடு ஒரு முத்தம் கொடுத்தான். உடனே ஜெனரல் ஆஸ்மன்ஷாவைப் பார்த்து, "அவனே அவளை விவாகம் செய்து கொள்ளட்டும்! அவளுடைய அழகுக்கு அவனே தகுந்தவன்" என்று சொல்ல, ஆஸ்மன்ஷா நிஜாமைப் பார்த்து அவருடைய உத்திரவு எப்படி என்று கேட்டார். அவரும் ஆப்ஸல்கானுடைய தைரியத்தைக் கண்ணுற்றவராகையால் சந்தோஷப்பட்டு "அல்லா அவர்களிருவருக்கும் நீடித்த வாழ்வைத் தரட்டும்" என்று சொன்னார். ஆஸ்மன்ஷா ரஹிமன்னிஸ்ஸாவைப் பார்த்து "நீ அவனை நேசித்து அன்புபாராட்டுவது போல் அவனும் உன்னை நேசிப்பானேயாகில் அவனையே கல்யாணம் பண்ணிக்கொள்ளென்று உத்திரவுகொடுக்க ஆப்ஸல்கான் "ஐயா! இப்படிப்பட்ட தேவலோகத்திலும் கிடைத்தற்கரிதான பெண்மணியைப் பார்த்தும் அவளை விரும்பாதிருப்பேனா? அவள் என்மனதைக் கவர்ந்து விட்டாளே. இனி அவளைவிட்டு சற்று நேரமாகிலும் பிரிதற்கு என்னாலாகுமோ?" என்று சொன்னான். ஆஸ்மன்ஷாவும் இருவரையும் "நீடூழி வாழ்க" வென்று ஆசீர்வதித்துவிட்டு கலியாணத்தை முறைப்படி நடாத்தினார். அவ்வூர் ஜனங்களும் அல்லாவின் செய்கைகளைப்பற்றி யோசித்து இவர்களுக்கு நேரிட்ட பலவித துன்பங்களையும், அவைகள் ஒன்றன்பின் ஒன்றாய் நீங்கியதையும் கடைசியாக மண முடிந்ததையும் நினைத்து நினைத்து அளவில்லாத சந்தோஷத்தை யடைந்தார்கள். சுபம்!! சுபம்!! சுபம்!!

இதனை வாசிக்கும் சகோதர சகோதரிகளே! நீவிர் இதுவரையில் எத்தனையோதரம் "இராணி இராஜ்ஜியமடா!" என்பதாக ஆச்சரியத்துடன் சொல்லக் கேட்டிருக்கலாம். அதென்னவென்று யோசிக்குமளவில் விரியும். அதனைப்பற்றி ஒரு சிறு புத்தகம் எழுதியிருக்கிறேன். அந்த "இராணி இராஜ்ஜியத்தை" வாங்கி எல்லோரும் வாசித்து அதனால் அடையக்கூடிய பலனை யெய்துவீர்களென்று நம்புகிறேன்.



சிறுவர்களுக்கான கதைகள்

அடியிற் கண்ட சிறு கதைப் புத்தகங்கள், இனிய செந்தமிழ் நடையில் சிறுபிள்ளைகளுக்கு மனோற்சாகத்தை யுண்டாக்கும் வண்ணம் இயன்றிருக்கின்றன. இவற்றில் எதையேனும் வாசிக்கப்புகும் சிறுவர்கள் புத்தகத்தை முடிக்கு முன்னந் திருப்தியடையார் என்பது திண்ணம். ஆரம்பத்தில் மாத்திரம் இனிமைவாய்ந்து செல்லச் செல்லப் படிப்போர்க்கு வெறுப்பை யுண்டாக்காமல் இவைகள் எளிய வகையில் நல்ல நீதிகளைப் போதிக்கும். இவை எலிமென்ட்டரிப் பாடசாலைகளில் வீட்டுப் பாடமாக அமைப்பதற்கு மிகவும் ஏற்றவை. இப்புத்தகங்களில் கடின பதங்களும் கடின சந்திகளும் நீக்கப்பட்டிருக்கின்றன. புத்தகங்கள் தடித்த கடிதத்தில் திருத்தமாக அச்சிடப்பட்டுள்ளன.

			ரூ.	அ.	பை.
புதிய வனத்துக் குழந்தைகள்	...	...	0	10	0
பிராப்டிங்னுக் யாத்திரை	...	...	0	6	0
லபுடா யாத்திரை ...	...	....	0	4	0
லிலிபுட் யாத்திரை ...	...	...	0	4	0
பஞ்சதந்திரம்	.	....	0	4	0
விவேக சந்திரிகை ...	...	...	0	4	0
அசோகர் சரித்திரம் ...	...	...	0	4	0
ராபின்ஸன் குரூஸோ ...	...	...	0	4	0
நாற்பது திருடர் கதை	....	...	0	3	0
அல்லாவுதீன் ...	...	...	0	2	6
விக்டோரியா நல்லரசி...	...	...	0	2	6

	ரூ.	அ.	பை.
பாண்டவர் சூது	0	2	6
ஷூராத்	0	2	0
இரட்டைப் பிள்ளைகள்	0	2	0
டிக் உட்டிங்க்டன்	0	2	0
மாயூரம்-இடபதீர்த்தம்	0	2	0
தெனாலி ராமன்	0	2	0
நற்பழக்கம்	0	2	0
மாயத் தாமரை	0	2	0
மாயப் பொம்மை	0	2	0
நீதிக்கோபுரம்	0	2	0
மல்லிகா	0	2	0
இரண்மயி	0	2	0
இராதா இராணி	0	2	0
மூன்று பரதேசிகள்	0	2	0
சீலஸம்பன்னன்	0	2	0
கரிசிலாதாள்	0	1	6
கற்புக்கரசி	0	6	0
அரிச்சந்திரன்	0	1	6
ஆபத்தில் நேசன்	0	1	6
செங்கை வளவன்	0	1	6
ஆராயும் அங்குட்டன் கதை	0	1	6
போலி ராஜ குமாரன்	0	1	6
நல்ல பாடம்	0	1	6
செம்படவன்	0	1	6
கைமன்	0	1	6
ஈனக் ஆர்டன்	0	1	6
திலகவதி	0	1	6
அர்ச்சுனன் தீர்த்தயாத்திரை	0	1	6
ஜார்ஜ் மன்னன் விபவம்	0	1	6

3990

	ரூ.	அ.	பை.
நல்ல பிள்ளைகள்	0	1	0
நல்ல சிநேகிதர்கள்	0	1	0
மூன்று தங்க மாம்பழங்கள்	0	1	0
மூன்று குமாரர்கள்	0	1	0
கடற்கரை வாஸம்	0	1	0
தாளில்லாக் கதவு	0	1	0
அன்புள்ள சகோதரி	0	1	0
கூண்டுவிட்டுக் கூண்டுபாய்தல்	0	1	0
அதிசயமான கிளி	0	1	0
நாய்காட்டிய நல்லறிவு	0	1	0
மூன்று பூதங்கள்	0	1	0
மறுபடி முயற்சி செய்	0	1	
வெள்ளைப் பூனை	0	1	0
தோட்டக்காரன்	0	1	0
நான்கு பாடகர்கள்	0	1	0
நைட்டிங்கேல் அம்மையார்	0	1	0
பால நியாயாதிபதி	0	1	0
பச்சை தேவதை	0	1	0
வர்த்தகன்	0	1	0
ஆனந்தக் கண்ணாடி	0	1	0
துருவாஸரும் துரியோதனனும்	0	1	0
கோவிந்தன்	0	1	0
சந்திரஹாஸன்	0	1	0
வீணையும் கொல்லுமோ	0	1	0
நல்ல மாப்பிள்ளை	0	1	0

ஸி. குமாரசாமிநாயுடு ஸன்ஸ்,

35. சின்னதம்பித்தெரு, சென்னை.

புதிய பதிப்புக்கள்

	ரூ.		
பிரிதிவிராஜன்	1		0
கீசகன்	0		
ஐந்தாம் ஜார்ஜ் சக்ரவர்த்தி	0		
ஐவன்ஹோ	0		0
ஏகம் பஞ்ச நதம்	0	1	
புதியவனத்துக் குழந்தைகள்	0	1	
விக்டோரியா மஹாராணி சரித்திரம் ...	0		
ஏழாம் எட்வர்ட் மன்னன்	0	6	
முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ் ...	0	6	
பிரிட்டிஷ் துரைத்தன நற்பயன் ...	0		
பஞ்சதந்திரம்	0		
விவேகசந்திரிகை	0	4	
தசகுமார சரிதம் (1-ஆம் பாகம்) ...	0	6	
ஸூக்ஷ்மதரிசி	0	4	
கதைக்கொத்து மலர்-1	0	2	
கதைக்கொத்து மலர்-2	0	3	
கதைக்கொத்து மலர்-3	0	3	
கதைக்கொத்து மலர்-4	0	5	
கதைக்கொத்து மலர்-5	0	8	

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்,
35, சின்னதம்பித் தெரு
சென்